www.tamilarangam.net

சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SUVADUGAL,
A Tamil monthly from Norway
Estd: Sept'1988

Bank account: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

Editorial Group: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

Published by:
Norway Tamil Culturel Centre
Address:
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

சுவடுகள்,
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாத'1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன் நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்
சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹேர்சிலப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,
நோர்வே

சுவடுகள் 66

இந்த இதழில்

மைத்திரேயியுடன் ஒரு செவ்வி:........ பக்.5
உலகக்கிண்ணம் வென்ற நோர்வே:........ பக்.9
சந்திரிகாவும் சமாதானமும்:........ பக்.13
தமிழைத் தமிழனிடமே விற்கும்.:........ பக்.16
மௌன அழுகை: .... பக்.21
ஸ்தவாங்ஙரில் மகளிர் தினம்:........ பக் 23
பார்வைகள் வேறு:........ பக்.25
காஷமீர் இந்தியாவுடன் இணையாது:........ பக்.27
றோஸா லக்சம்பேர்க்: .... பக்.30
எதிரிகளை உருவாக்குவோம்:........ பக்.36
ஆயிரம் பூக்கள் மலரட்டும்:........ பக்.39
பெண்கள் விளையாட்டுப் போட்டி:........ பக்.43
தூரத்துச் சொந்தம் - சிறுகதை:........ பக்.44
நாற்சந்தி:........ பக்.50
மண்மனம்: .... பக்.56

சுவடுகளுக்காக அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்படுவதில்லை. படைப்பாளிகள் ஒரு பிரதியைத் தம்முடன் வைத்திருக்க வேண்டுகிறோம்.

தமிழின் முதன்மைக் கவிஞர்களில் ஒருவரான புமலைய் அவர்களது பேட்டி வரும் இதழில் இடம்பெறுகிறது.

புகைப்படக் கலை பற்றிய ஒரு சிறு அறிமுக கட்டுரை அடுத்த இதழில் வருகிறது.

ஆண்டு மலருக்கான படைப்[illegible]களைக் காலம் தாழ்த்தாது அனு[illegible] வேண்டுகிறோம்.

சுவடுகளுக்கான [illegible]ங்கள் (பதிவுத் தபால் உட்பட)சுவடுக[illegible]க முகவரியிடப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரு இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்பட முனைந்தபோது

மே மாதத்தில் அரசியற் தஞ்சம் கோரிய இரு இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்பட முனைந்தபோது அதனை எதிர்த்து, அந்த இரு தமிழர்களும் கைதாகி வைக்கப்பட்டிருந்த இடத்தில், திருப்பி அனுப்பலை எதிர்த்துப் பல தமிழர்கள் (25.05.95) அதிகாலை ஒரு மணிமுதல் காலைவரை சுலோகங்களுடன் அமைதியாக நின்றனர்.

ஆயினும் மறுநாள் இவர்கள் பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர். அங்கு விமான நிலையத்தில் இவர்கள் கைதாகி இருநாட்கள் பொலிஸால் சிறையில் இடப்பட்டு 'விசாரிக்கப்பட்ட' பின்னர் விடுவிக்கப் பட்டனர். இவ்விரு சம்பவங்களுக்கும் நோர்வேப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் அதிக முக்கியம் வழங்கியிருந்தன.

கைது செய்யப்பட்ட சம்பவத்தில் நோர்வே அரசைக் கண்டித்து வலதுசாரிப் பத்திரிகையான 'ஆப்தன்பூஸ்தன' (Aftonposten)கூடத் தனது ஆசிரியத் தலையங்கத்தில் எழுதியிருந்தது.

இதையடுத்து (30.05.95ல்) ஒஸ்லோவின் எல்லாத் தமிழ் அமைப்புகளும் (நோர்வேத் தமிழ்க் கலாசார மையம் - சுவடுகள் உட்பட) இணைந்த நடவடிக்கைக் குழு நோர்வே நீதியமைச்சின் முன்னாள் ஒரு மணி நேர அடையாள எதிர்ப்புத் தெரிவித்தது.

இலங்கையிலும் இயங்கிவரும் 'போருட்' (FORUT) எனும் நோர்வேஜிய உதவி அமைப்பின் சார்பில் குரல்தரவல்ல அதிகாரி ஒருவரே தமிழரைத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கூறியிருந்தது குறிப்பிடத் தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை நிலவரத்தை அறிந்துவர இலங்கை சென்றுள்ள வடநோர்வேப் பத்திரிகையான 'நூர்லிஸ்' 'Nord Lys செய்தியாளர் திருப்பி அனுப்பப்பட்ட இரு தமிழர்களையும் அணுகி நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்தார். அவர்களை இலங்கையில் உள்ள நோர்வேத் தூதராலயத்துக்கு அழைத்துச் சென்று நிலையை எடுத்துக் கூறியுள்ளார். இலங்கை அரசு தனது இனவாத அழிப்பு யுத்தத்தை முழுமையாக முடுக்கி விட்டுள்ள நிலையில் நோர்வே அரசு தமிழர்களைத் திருப்பி அனுப்புவது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல.

நோர்வே அரசு பாதுகாப்பான பிரதேசங்களுக்கே (சிங்களப் பகுதிகள் உட்பட) திருப்பி அனுப்புவதாகக் கூறி வருகிறது. இதன் மூலம் ஈழத் தமிழர் பிரச்சனையின் ஆழத்தை, அடிப்படையை இவர்கள் பார்க்கத் தவறிவிடுகிறார்கள் என உணர முடிகிறது. அதாவது சிங்கள இனவாத அரசு தமிழர்களைப் பாதுகாக்கும் என நம்புவது நகைப்பிற்குரியது.

அண்மையில் ஒரு பத்திரிகையில் வாசகர் ஒருவரது கடிதத்தில் "ஐயாயிரம் தமிழர்கட்கு ஆதரவு வழங்கித் தன்னுடன் வைத்திருக்கும் நோர்வே, ஐம்பது தமிழரைத் திருப்பி அனுப்பித் தான் செய்த நல்ல விடயத்திற்கும் களங்கம் ஏற்படுத்த முனைகிறது" என இருந்தது.

பாஸ்கரன்

ஓர் இராணுவ வீரனும் அவன் கேள்விகளும்

நடுக்கத்தில்
குரல் பிசிறிற்று.
காக்கிச் சட்டைக்காரன்
குடைந்துகொண்டிருந்தான் என்னை.

இத்தேசத்தினை அள்ளி
என் கைகளில்
நிரப்பியதான அச்சம் அவனுக்குள்.

நெருப்பு விழிகளால்
என் சர்வாங்கமும்
சல்லடையிட்டான்
சில்லிட்டதென் மனம்.

என் அடையாள அட்டையை
முன்னும் பின்னுமாய்
முறைத்துப் பார்த்தான்.
பெயரென்ன?

எழுத வாசிக்கத் தெரியாதவனிடம்
என் சுதந்திரம் பறிபோனது பற்றி
எனக்கு வெட்கம்தான்.

உச்சியில் இருந்து ஊர்ந்தன
அவன் கரங்கள்
இத்தேசத்தின் வரைபடமொன்றேனும்
கீறிடவியலா கரங்களினால்
என் தேகம் முழுக்க
ஆராய்ந்து கொண்டிருந்தான்.

மொட்டைக் கத்தியொன்றால்
என்னை முகம் குப்புறப் போட்டு
அறுப்பதான வலி
இந்தச் 'செக் பொயின்ற்று'கள்
தாண்டுமட்டும்.

ஒட்டமாவடி அறபாத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைத்திரேயியுடன் ஒரு செவ்வி

மைத்ரேயி, சுவடுகள் வாசகர்கள் பலருக்கு ஏற்கனவே அறிமுகமானவர். பெண்ணிலைவாதியாகவும், கவிஞராகவும் ஈழத்திலேயே பரவலாக அறியப்பட்ட இவர், நோர்வேயில் பெண்களை முதன்மைப்படுத்தி வெளிவந்த சக்தி காலாண்டிதழை நிறுவியவர்களில் ஒருவர். தற்போது கலாநிதிப் பட்டப் படிப்பினை மேற்கொண்டுள்ள இவர் துரண்ணியம் நகரில் வசித்து வருகிறார். இச்செவ்வி தபால்வழிப் பெறப்பட்டது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்கள் இங்குள்ள தமிழ்ச் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எவை?

இப்பிரச்சனைகளைச் சுருக்கமாகக் கலாசார - அடையாள முரண்பாடு, இரட்டைச் சுமை எனக் கூறலாம்

புலம்பெயர்ந்த சமூகம் பன்முகப் பட்டது. இதில் பாரம்பரியத்தைப் பேணுபவர்களும் புலம்பெயர்ந்து வாழும் சமூகத்துடன் இயைந்து (adjust/ integrate) வாழ முனைபவர்களும் உள்ளனர். முதலில் கூறப்பட்டவர்களுக்குக் குழப்பம் இல்லை. தாம் அங்கு வாழ்ந்தது போலவே இங்கும் வாழ்வதுடன் ஏனையோரும் அவ்வாறே வாழ வேண்டும் என இவர்கள் கருதுவர். ஆனால் பிற்குறிப்பிட்டவர்களோ இயைந்து வாழும் அளவு (degree) தொடர்பாக மிகவும் குழப்பம் அடைகின்றனர். இக்குழப்பம் ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகம் ஏனெனில் தமிழ்க் கலாசாரத்தைப் பாதுகாக்கும் (!) பாரியசுமை இவர்கள் மீதே சுமத்தப் பட்டுள்ளது. அதிலும் புலம்பெயர் முதற் தலைமுறைப் பெண்கள் இரண்டாம் தலைமுறையை விடக் கஷடமடைகின்றனர். ஏனெனில் அவர்கள் தமது வாழ்வின் ஆரம்ப காலத்தை - வாழ்வின் விழுமியங்கள், வரையறை பற்றிய கருத்துகள் மனதில் உருக்கொள்ளும் காலத்தைத் தாய் மண்ணில் கழித்தவர்கள். இதனால் புதிய சூழலில் கலந்து வாழ நேரும்போது எவ்வளவு தூரம் தமது முன்னைய கருத்துகளை மாற்றி வாழ்வது என்பதில் குழப்பம் அடைகிறார்கள். உதாரணமாக, நோர்வேயை எடுத்துக் கொண்டால் நோர்வேஜியர்களுடன் எந்தளவுக்கு அவர்களுடன் பழகுவது, அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வது என்பது பல பிரச்சனைகளைத் தருகிறது. உதாரணமாகத் தன்னுடன் வேலை செய்யும் ஒருவனுடன் வேலை முடிய வெளியில் சென்று தேநீர் அருந்துவது, அல்லது அவன் தனது வாகனத்தில் வீட்டிற்குக் கொண்டுவந்துவிடுவது போன்ற அற்ப விடயங்கள்கூட தமிழ்ப் பெணகளுக்குப் பெரிய தலையிடியைக் கொடுக்கப் போதுமானவையாக இருக்கின்றன. நாளை அயலில் வாழும் தமிழர் அவளின் நடத்தை குறித்த எந்தவொரு அபிப்பிராயத்தையும் கூறக்கூடாது என்பதில் தமிழ்ப் பெண் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இது ஒரு சிறு உதாரணம் இவ்வாறு அவள் தான் செய்யும் எந்தவொரு சிறு செயலையும் அடுத்தவர், வீட்டார் (இவர்களே புலம்பெயர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்தை உருவாக்குபவர்கள்) என்ன சொல்வரோ என்ற அளவுகோலால் அளந்தே செய்ய வேண்டியிருக்கிறது. இது அவளுக்கு மிகுந்த மனக்குழப்பத்தையும், களைப்பையும், பிரச்சனைகளையும் தருகிறது; அவளது முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கிறது.
மேலும் எம் பெண்கள் புலம்பெயர்ந்துள்ள சமூகத்திற்கும், இங்கு வாழும் தமிழ்ச் சமூகத்திற்கும் இடையில் தன்னை இசைவுபடுத்தும்போது ஒருவித இரட்டைச் சுமையைச் சுமக்க நேர்கிறது. இச் சுமை, தானே தன்மீது சுமத்துவதும், இங்கு வாழ் தமிழ்ச் சமுதாயத்தால் சுமத்தப் படுவதுமாகும். இந்நாட்டுக் கலாசாரத்திற்கேற்பத் தம்மை மாற்றும்போது சில பெண்கள் ஐயோ எமது கலாசாரத்தைக் கைவிடுகிறோமே என்ற மன உறுத்தலுக்கு ஆளாகிறார்கள். இதன் விளைவாகத் தமக்கும் இங்குவாழ் தமிழ்ச் சமூகத்திற்கும், தாம் பாரம்பரியங்களைக் கைவிடவில்லை என நிரூபிப்பதற்காக வரிந்து கட்டிக்கொண்டு - அசாதாரணமாக - பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்க முனைகிறார்கள். அவ்வாறு யோசிக்காதவர்களையும் அயலவர் தமது நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்குகிறார்கள். இவ்வாறு தமிழ்ப் பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்காதவர்கள் தாமே, புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தம்மை ஏற்காதெனை எண்ணுவதாலோ அல்லது அதுவே உண்மையாக இருப்பதாலோ அதிலிருந்து விலகி வாழத் தொடங்குகின்றனர்.

புலம்பெயர் வாழ்வில் ஈழப்பெண் கற்றுக்கொள்ளக் கூடிய சாதகமான அம்சங்கள் எவை?

சொந்தக் காலில் நிற்கும் மனத்துணிவு, முடிவுகளை எடுக்கும் மனப் பக்குவம், ஆளுமை விருத்தி, சுயகௌரவம், தமது உரிமைகளை விட்டுக் கொடாது போராடும் தன்மை என்பன.
நாம் புலம்பெயரும் நாடுகளைப் பொறுத்தவரை அங்கு வாழ் பெண்களின் நிலை ஒப்பீட்டளவில் எமதைவிடச் சுமை குறைந்ததாக இருக்கின்றது. இங்குள்ள பெரும்பாலான பெண்கள் தமது வாழ்வு பற்றிய தெரிவைத் தாமே செய்கின்றனர். இதனால் அதன் விளைவுக்கான பொறுப்பையும் (அது நன்மையோ தீமையோ) தாமே ஏற்றுச் சமாளிக்கும் மனப் பக்குவத்தையும் வாழ்வில் படித்துக் கொள்கிறார்கள். இது அவர்களைச் சொந்தக் காலில் நிற்கும் பயிற்சியைக் கொடுக்கிறது; தமது வாழ்வு பற்றிய தீர்மானங்களை எடுக்கும்போது பல விடயங்கள் பற்றிச் சிந்திக்கவும், தெரியாத விடயங்களைத் தேடி ஆராயவும் நேருகிறது. இது அவர்களின் ஆளுமை விருத்திக்கு மிக உதவியாக இருக்கிறது. ஆளுமை விருத்தியானது அவர்களது கல்வி, தொழில், குடும்ப வாழ்வில் மிகுந்த முன்னேற்றத்தைக் கொடுக்கிறது. மேலும் இத்தகு இயல்புள்ள பெண்களால்தான் ஒரு ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை - எதிர்காலத் தமிழ்ச் சமூகத்தைப் படைக்க முடியும்.
ஆனாலும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் துரதிர்ஷடமோ என்னவோ, எம்மிற் பலருக்கு இச்சமூகத்தை ஆழமாக ஆராய நேரமோ, மொழியறிவோ, பொறுமையோ, சந்தர்ப்பமோ இருப்பதில்லை. இதனால் மேலெழுந்த வாரியாக இச்சமூகத்தைப் பார்த்துவிட்டு - அதிலும் குறிப்பாக இச்சமூகத்தின் நல்லதல்லாத, பயனற்ற பழக்க, கலாசாரங்களைப் பார்த்துவிட்டு (இவையே எம் கண்களைக் கவருபவை) - இச்சமூகத்தில் சாதகமான அம்சங்களே இல்லை என யானை பார்த்த குருடர்களின் முடிவுக்கு வருகிறோம்.

எம்மவரிடையே, புலம்பெயர்ந்த பெண்கள் சஞ்சிகைகள் பெரிதாக வெற்றி அடையாதது ஏன் எனக் கருதுகிறீர்கள்?

இதில் வெற்றி என்பதன் அளவுகோலாக சஞ்சிகைகளின் எண்ணிக்கை, விற்பனை, வாசகர் தொகை என்பனவற்றைக் கொண்டால் பெண்கள் சஞ்சிகைகள் வெற்றி அடையவில்லை என்று கூறலாம். எனினும் நோர்வேயைப் பொறுத்தவரை சக்தி எனும் சஞ்சிகை தொடர்ந்து நாலு வருடங்களாக வந்துகொண்டிருக்கிறது. ஜேர்மனியிலும் பெண்களமைப்பு குறிப்பிடுமளவு இயங்கி வருகிறது. பெண்கள் சந்திப்பு மலர், மற்றும் ஊதா எனும் சஞ்சிகையும் (இப்போது வெளிவருகிறதா என்று தெரியவில்லை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகின்றன.
பெண் சஞ்சிகைகள் வெற்றி அடையாமற் போனதற்குப் பெண்களின் வாசனைத் தரம் (மங்கை, குங்குமம் போன்றவற்றுக்கு அப்பால்) வளர்க்கப் படாமையும், பெண்கள் தமது நேரத்தையும் சக்தியையும் சமையல், பிள்ளை வளர்ப்பு மற்றும் குடும்பப் பொறுப்புகளில் செலவழிக்க நேர்வதும் காரணமாகும். மேலும் பெண் சஞ்சிகைகள் எழுதுகின்ற பல விடயங்கள் பெண்களின் இருப்பு தொடர்பான மிக அடிப்படையான விடயங்களாக இருந்த போதிலும்

அது சாதாரண பெண்களுக்கு அந்நியப் பட்டவையாக இருப்பதுவே இன்றைய நிலையாகும். பெண்கள் சமையல், பிள்ளை, சேலை, நகைக்கு அப்பால் தமது வட்டத்தை விரிவாக்கி, சமூகத்தில் தமது விழிப்புணர்வைக் கொண்டிருப்பர் என வைத்துக் கொண்டாலும் தமிழ்ச் சஞ்சிகை வாசிக்குமளவு மொழியறிவைக் கொண்டிருப்பரோ என்பது ஐயத்துக்குரியது.

நோர்வேஜியப் பெண்கள் ஏனைய ஐரோப்பியப் பெண்களை விட முன்னேற்றம் அடைந்துள்ளார்களா? எவ்வாறு?

ஸ்கன்டிநேவியப் பெண்கள் ஏனைய நாட்டுப் பெண்களைவிட அதிகம் முன்னேறியவர்கள் என்று கருதப்படுகிறது. இதற்கு அளவுகோலாக உயர்கல்வி, அதிகாரமுள்ள உயர் பதவிகளில் இவர்களின் பங்கு அதிகமாக உள்ளதைக்

நாம் புலம்பெயரும் நாடுகளைப் பொறுத்தவரை அங்கு வாழ் பெண்களின் நிலை ஒப்பீட்டளவில் எமதைவிடச் சுமை குறைந்ததாக இருக்கின்றது.

இரண்டாம் நிலை பற்றிய அரசியலறிவைப் பெறாதவரை பெண் சஞ்சிகைகள் பெண்களிடம் பரவலாகப் போகாது (மாறாகப் புத்திஜீவி இலக்கிய வட்டத்துடன் நின்றுவிடும்). இந்நிலையை மாற்றுவதற்குப் பெண் அமைப்புகள் பரந்த அளவில் எம்சமூகத்தின் வேர் மட்டங்களில் பரவலாகச் செயற்பட வேண்டும். பெண் விழிப்புணர்வை ஒரு பரந்துபட்ட எழுச்சியாக மாற்ற வேண்டும்.

இங்குள்ள பெண்களைப் பரவலாக அடையக்கூடிய பெண் பத்திரிகைகள் சாத்தியமா?

அது அச்சஞ்சிகையின் உள்ளடக்கத்தையும் பொறுத்தது. எனினும் இன்றுள்ள சந்ததி ஏதாவது புற உந்துதல்கள் (முற்குறிப்பிட்டபடி பெண் எழுச்சி அமைப்புகளால் கவரப்படுதல்) ஏற்பட்டாலன்றி தமது வாசனைப் போக்கை மாற்றார். புலம்பெயர் இரண்டாம் சந்ததி பெண்நிலை தொடர்பாக அதிக

காட்டலாம்.
இவர்களின் உரிமைகள் ஏட்டளவில் சட்ட ரீதியாக மாத்திரமன்றி நடைமுறையிலும் உள்ளன. இதற்கான இவர்களின் போராட்ட வரலாறு சென்ற நூற்றாண்டில் தொடங்கினாலும் அறுபதுகளின் பிற்பகுதி, எழுபதுகளின் சமூக எழுச்சியுடனேயே இதுவும் உக்கிரமடைந்தது. (இவ்வெழுச்சியில் பங்குபற்றியோர் 68 சந்ததியினர் என அழைக்கப் பட்டனர்) இக்கால கட்டத்திலேயே பெண் பாதுகாப்புச் சட்டங்கள் பல இயற்றப் பட்டன. நோர்வேயில் இன்று மந்திரிசபையிலும் (40%) மற்றும் பல நிர்வாக, உயர் பதவிகளிலும் பெண்கள் பங்கு q jσpImài lãjcå likestilling எனப்படும் சமத்துவக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதே காரணமாகும். ஒரே தகுதிகளுடன் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஒரு பதவிக்குப் போட்டியிடும்போது 40%க்குக் குறைவான பெண்களே அப்பதவியில் இருந்தால், போட்டியிட்ட பெண்ணுக்கே முன்னுரிமை வழங்கப் படுகிறது. இவ்வாறு பெண்களை முற்கொண்டு வரும் கொள்கைகள் அமுல்படுத்தப் படுவதால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக விடுதலை ஏற்பட்டாலன்றிப் பெண் விடுதலை ஏற்படாது என்பதில் எனக்கு உடன்பாடே. எனினும் வெறுமனே சமூக விடுதலையால் மட்டும் பெண் விடுதலை வந்து விடாது. சமூக விடுதலைக்கான வேலைத்திட்டத்தில் விழிப்புணர்வுடன் பெண் விடுதலைக்கான அம்சங்கள் சேர்க்கப்பட்டு முறையாக அவை செயற்படுத்தப்பட வேண்டும்

பெண்களின் நிலை உயர்ந்துள்ளது.

ஸ்கண்டினேவிய நாடுகளில் பெண்களின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணம் இங்குள்ள சமூகநல சேவை அரசுகள் ஆகும். இது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரையும் கஷ்டகாலத்தில் பராமரிக்கின்றது. (உ-ம்: முதியோர், நோய்வாய்ப்பட்டு வேலையிழந்தோர் இன்னபிற) இதனால் இன்னொருவரில் தங்கிவாழும் வாய்ப்பைக் குறைக்கிறது. இதுவும் பெண்களின் தங்கி வாழ்தலைக் குறைத்தலில் பெரும் பங்கை வழங்கி இருக்கிறது.

எனினும் இங்கு சில தொழிநுட்பத் துறைகள் ஆண் செறிவுடையனவாயும், பெரும்பாலான சேவைத் துறைகள் - குறிப்பாகப் பராமரிப்பு - பெண் செறிவுடையதாயும் இருப்பது, மற்றும் பெண் செறிவுத் துறையில் குறைந்த சம்பளம் வழங்கப் படுவது போன்றன இவர்களின் போராட்டப் பாதையில் இன்னும் நீண்ட தூரம் இருப்பதைக் காட்டுகிறது. இதற்கு இன்னுமொரு உதாரணம்: சந்தையில் பெண்கள் இன்னும் விளம்பரப் பொருட்களாக உபயோகப்படுத்தப் படுவது.

எனினும் இங்கு பெண் இயக்கங்கள், சமத்துவத்தைப் பேணும் குழுக்கள் என்பன விழிப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றன. அண்மைக்கால சம்பளப் பேச்சுவார்த்தைகளின் போது பாலர் பாடசாலை ஆசிரியர், மற்றும் தாதிகள் தமது சம்பளங்களை உயர்த்தக் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தொழிற் கல்வியில் தம்மையொத்த காலம் செலவழிக்கும் ஆண் *செறிவுத் துறைத் தொழில்கள் அதிக சம்பளம் கொண்டவையாக இருப்பதை இவர்கள் சுட்டிக் காட்டினர்.*

சமூக விடுதலையோடுதான் பெண்கள் விடுதலை சாத்தியம் என்றும், பெண் விடுதலைக்கான தனியான போராட்டங்கள் நிகழ்த்தப்படக் கூடாது என்ற தொனியிலும் சிலர் கருத்துத் தெரிவிப்பதுண்டு. மறுபுறத்தில் பெண் விடுதலை சமூக விடுதலைக்கான போராட்டத்துடன் இணைக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் சிலர் கருத்துத் தெரிவிப்பதுண்டு. இதுபற்றி உங்களது கருத்து என்ன?

சமூக விடுதலை ஏற்பட்டாலன்றிப் பெண் *விடுதலை ஏற்படாது என்பதில் எனக்கு உடன்பாடே. எனினும் வெறுமனே சமூக விடுதலையால் மட்டும் பெண் விடுதலை வந்து விடாது. சமூக விடுதலைக்கான வேலைத்திட்டத்தில் விழிப்புணர்வுடன் பெண் விடுதலைக்கான அம்சங்கள் சேர்க்கப்பட்டு முறையாக அவை செயற்படுத்தப்பட வேண்டும்.*

பேட்டித் தொகுப்பு: நந்தன்

பூவரசு

தமிழ் மாத இதழ் தொடர்புகளுக்கு
Sinniah Mahesvaran, Otto
Brenner Alle 56, 28325
Bremen, Germany.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகக் கிண்ணத்தை வென்ற நோர்வே வீராங்கனைகள்

நோர்வேப் பெண்கள் உதைபந்தாட்டத் துறையில் திறமை மிக்கவர்கள் என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளனர். அண்மையில் சுவீடனில் நிகழ்ந்த உலகக் கிண்ணத்திற்கான இறுதிச் சுற்றுப் போட்டிகளில் தமது திறமையை நிரூபித்து வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டனர் அவர்கள். ஏனைய சில ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது நோர்வேப் பெண்கள் உதைபந்தாட்டக் குழு வயது குறைந்தது. ஆனால், இரண்டாவது தடவையாக நிகழ்ந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் அவர்களால் தமது திறமையை முற்றிலும் வெளிக்காட்டி விளையாட முடிந்திருக்கிறது. முதன்முதலாக 1978இலேயே நோர்வே சர்வதேசரீதியான ஆட்டம் ஒன்றில் கலந்து கொண்டது. அப்போது சுவீடனை எதிர்த்து ஆடிய நோர்வே அணி 1 - 2 கோல்கள் வித்தியாசத்தில் தோல்விகாண நேர்ந்தது. ஆனால் அடுத்த வருடம் வட அயர்லாந்துடனான போட்டியில் 4 - 1 வித்தியாசத்தில் நோர்வே வெற்றி பெற்றது. இதுவே இன்னொரு நாட்டுடன் நோர்வே பெற்ற முதல் வெற்றியாகும்.

1987ல் முதன்முதலாக ஒரு சுற்றுப் போட்டியில் வித்தியாசத்தில் வென்றது.

நோர்வேப் பெண்களது உதைபந்தாட்ட வரலாற்றில் மிகப் பெரிய வெற்றியை அவர்கள் 1991ல் சுவிற்சர்லாந்து நாட்டுக்கு எதிராகப் பெற்றனர் (10 - 0). மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்தது சுவீடனுடன் 1985ல் (0 - 5).

ஐரோப்பியக் கிண்ணத்திற்கான போட்டிகளில் தனது திறமையைத் தொடர்ச்சியாகக் காட்டிவந்த நோர்வே 1989இலும், 1991இலும் இறுதிப் போட்டிவரை வநத்து. இரு இறுதிப் போட்டிகளிலும் மேற்கு ஜேர்மனியிடம் 1 - 3, 1 - 4 கோல்கள் வித்தியாசத்தில் தோல்வியையே தழுவியது. எனினும் 1993இல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வே பெண்களது உதைபந்தாட்ட வரலாற்றில் மிகப் பெரிய வெற்றியை அவர்கள் 1991ல் சுவிற்சர்லாந்து நாட்டுக்கு எதிராகப் பெற்றனர்

இத்தாலியை இறுதிப் போட்டியில் தோற்கடித்து (1 - 0) மீண்டும் ஐரோப்பியக் கிண்ணத்தைப் பெற்றது. இவ்வருடம் நிகழ்ந்த ஐரோப்பியக் கிண்ணத்துக்கான போட்டிகளில் இறுதிவரை வர முடியாமற் போய்விட்டமைக்குப் பழிதீர்ப்பது போல், உலகக் கிண்ண ஆட்டங்களில் சிறந்த ஆட்டங்களைக் காட்டியது நோர்வே. முதற் சுற்றில் வந்த நைஜீரியா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளை மிக இலகுவாகவும் அதிக கோல்கள் வித்தியாசத்திலும் நோர்வே தோற்கடித்தது (முறையே 8, 3, 7 கோல்கள்). கால் இறுதிப் போட்டியில் டென்மார்க்கை 2 -1 வித்தியாசத்தில் வென்ற நோர்வேயின் மிகக் கடுமையான போட்டி அமெரிக்காவுடனான அரையிறுதி ஆட்டமாக இருந்தது. கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இறுதி ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நோர்வேயை வென்ற அமெரிக்கா கடும் போட்டியில் ஈடுபட்டாலும் நோர்வேயால் அந்தக் கடுமையை வெல்ல முடிந்தது. இறுதி ஆட்டத்தில் இந்த வருட ஐரோப்பிய வெற்றி வீரர்களான ஜேர்மனியை எதிர்த்து ஆட வேண்டி இருந்தது நோர்வேக்கு. ஏற்கனவே ஆடிய ஆட்டங்களில் நோர்வே மிக இலகுவான வெற்றியை ஈட்டியிருந்தமை அதிக நம்பிக்கையை வீராங்கனைகளுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் அரைப் பகுதிவரை நோர்வேயின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் வெகு சிரமப்பட்ட ஜேர்மன் அணி, கோலை நெருங்கும் ஒவ்வொரு பந்தையும் வெளியே அடித்துத் தன்னைக் காப்பாற்ற முயன்றது. ஏறத்தாழ ஐந்து நிமிடங்களுக்கு ஒரு கோணர்' வந்தது இதற்கு நல்ல சான்று. ஆனால் ஆட்டத்திற் பாதி நேரம் முடிவடையமுன் இரு கோல்களைப் போட்டுத் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டது நோர்வே. இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஜேர்மனி முன்னைவிட அதிகமாகத் தாக்குதலில் ஈடுபட்டது. ஆனால் நோர்வேக் கோல் காப்பாளர் பென்த நூர்பியின் (Bente Nordby) ஆற்றலாலும், ஏனைய வீராங்கனைகளது தடுப்பாற்றலாலும் ஜேர்மனி எதனையும் சாதிக்க முடியாமற் போனது. இந்தச் சுற்றுப் போட்டியில் நோர்வே மிகத் தெளிவான வெற்றி வீராங்கனைகளாகத் தன்னைக் காட்டியது. எல்லாப் போட்டிகளிலும் வெற்றியைத் தழுவியது மாத்திரமன்றி அதிக கோல்களையும் போட்டது. எதிரணிகளுக்கு எதிராக ஆறு போட்டிகளில் 23 கோல்களைப் போட்ட நோர்வேக்கு எதிராக ஒரேயொரு கோல் மாத்திரமே போடப் பட்டது. இந்த கோலை டென்மார் அணி போட்டது. அதுவும் தவிர்த்திருக்கப்படக் கூடியதே எனக் கருதப்படுகிறது.

நோர்வேயின் முன்னணி வீராங்கனையான ஹேக ரீஸ (Hege Riise) சுற்றுப் போட்டியின் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப் பட்டார். இறுதிப்போட்டியில் அணிக்குத் தலைமை வகித்த குறூ எஸ்பசெத்/ஸைய/ (Gro Espeseth) / இரண்டாவது சிறந்த வீராங்கனையாகவும்/ஸைய/ அன் கிறிஸ்ரன் ஒறொணஸ(Ann Kristen Aarones) மூன்றாவது சிறந்த வீராங்கனையாகவும் தெரிவாகினர். அன் கிறிஸ்ரன் சுற்றுப் போட்டியில் அதிக கோல்களைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்ட வீராங்கனையாகவும் (6 கோல்கள்) தெரிவானார்.
கால் இறுதிப் போட்டியில் வென்ற அனைத்துக் குழுக்களுமே அடுத்த ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன. அதேவேளை சிறந்த குழு என்ற ரீதியில் நோர்வேயும், போட்டியினை நிகழ்த்தும் நாடு என்ற ரீதியில் அமெரிக்காவும் தனித்தனிக் குழுக்களிலேயே போட்டியில் ஈடுபடும். இதனால் இந்நாடுகள் இரண்டும் அமெரிக்காவில் நிகழவுள்ள ஒலிம்பிக் போட்டியிலும் இறுதிப் போட்டியில் சந்திக்க நேரலாம். இப்போது கிடைத்த சந்தர்ப்பத்தைப் போல அப்போது இருக்குமா என்பது கேள்விக் குறியே என்றாலும், (முக்கியமாக அமெரிக்கா தனது சொந்த இடத்தில் ஆடுவதால்) நோர்வே வீராங்கனைகள் தமது புகழை மீண்டும் நிலைநாட்டுவார்கள் என உறுதியாக நம்பலாம்.

தற்போது நோர்வேயில் ஆட்சியில் உள்ள தொழிற் கட்சி வெளிநாட்டவர்க்கு எதிரான போக்குகளையே கடைப்பிடிக்கிறது. இந்தக் கட்சியின் ஆதரவாளர்களில் 25 வீதமானவர்கள் வெளிநாட்டவர்களை விரும்பாவர்கள் என அண்மைய கணிப்பீடு ஒன்று கூறுகிறது.

/ராஜீவன்

பெண்களும் கருச்சிதைவும்

நோர்வேயில் கருச்சிதைவு தொடர்பான இறுக்கமான சட்டங்கள் தளர்த்தப்பட்டுப் பதினாறு வருடங்கள் ஆகின்றன. வடபுல நாடுகளைப் (Norden Nordic) பொறுத்தவரை நோர்வேப் பெண்களின் கருக்கலைப்பு வீதம் சராசரியாகவே உள்ளது. டென்மார்க், சுவீடனில் அதிகளவிலும், பின்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் நோர்வேயைவிடக் குறைந்தளவிலும் கருக்கலைப்பு நிகழ்கிறது.
இருபது வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் கருக்கலைப்புச் செய்தல் அண்மைக் காலங்களில் குறைந்துள்ளது. அதேவேளை 20 முதல் 24 வயது வரையிலான திருமணமான பெண்கள் அதிகளவில் கருக்கலைப்பில் ஈடுபடுகின்றனர்.
பதினைந்து வயது முதல் பத்தொன்பது வயது வரையிலான திருமணமாகாத பெண்களே மிக அதிகளவில் கருக்கலைப்பில் ஈடுபடுகின்றனர். 25 முதல் 29 வயது வரையிலான திருமணமான பெண்களின் கருக்கலைப்பு வீதத்தைவிட இது ஐம்பது மடங்கு அதிகமாகும்.
பெண்கள் கருக்கலைப்பில் ஈடுபடுவதைத் தீர்மானிக்கும் காரணிகளில் தடுப்பு முறைகள் பயனளியாமை முக்கியமாக உள்ளது. குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிக்கும் காரணிகளில் குடும்பநிலை (கணவன் இருக்கிறாரா), எத்தனை குழந்தைகள் ஏற்கனவே உள்ளன *என்ற காரணிகள்* முக்கியமாக உள்ளன.

மனு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கசப்பது ஒரு கவர்ச்சி

அங்கே தெரியும்
கனியை ஆய்ந்து சுவை;
கசக்கும்.

கசப்பதும் ஒரு இனிப்புத்தான்.

பாவை இலை சுண்டு;
உண்.

வேப்பந்துளிர் பறி;
வாயில் இடு.
சப்பி உணர் அதன் சுவையை.

பொட்டுப்போல சிலிர்த்து நிற்கும்
திராய் இலை இணுங்கு;
பால் ஆணம் காய்ச்சி
வயிறு முட்டப் புசி.

உப்புச் சேர்க்காதே
சுவை கெட்டுப் போகும்.
பசியாறு
பசியாறு

வாழைப் பூவிலும்
ராவு இலையிலும்
சிறுகசப்பு உண்டு.

வயிறாறப் பசியாறு.

புளிவிட்டுக்
கசப்பெடுக்க முயலாதே.

கசப்பது ஒரு அழகு
கசப்பது ஒரு வடிவம்
கசப்பது ஒரு கவர்ச்சி.

இனிப்
பூவை முகர்;

இனிப்
பூமியை மண;

கசக்கும்
கசக்கும்

கசப்பது ஒரு அழகு
கசப்பது ஒரு வடிவம்
கசப்பது ஒரு கவர்ச்சி.

● நபீல்,
கல்முனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிர்மலன்

சந்திரிகாவும் சமாதானமும்

சித்திரை 19ல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஒருதலைப் பட்சமாக முறித்துக்கொண்டு, ஈழப்போர் மூன்றை விடுதலைப்புலிகள் வடகிழக்குக் கடற்பரப்பில் ஆரம்பித்தபோது அரசாங்கம் இதனை, சமாதானப் பேச்சுகளின் தற்காலிகப் பின்னடைவு, மீண்டும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவோம் என்றே கூறியது. ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர வேண்டுமானால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்றும், புதிய நிபந்தனைகளை விதித்துள்ளார். இத்தகைய பொறுப்பற்ற அறிக்கைகள், தற்போதைய யுத்த சூழலில் சமாதான முயற்சிகளை இன்னும் பல மைல்களுக்குப் பின்தள்ளுமேயன்றி, பேச்சுவார்த்தைக்கான சூழலை உண்டாக்காது. சில வாரங்களுக்கு முன்னான செவ்வி ஒன்றில், "இராணுவத் தீர்வு ஒன்றின் மூலம் இலங்கையில் இனப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்பதில் நான் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன்" என்று இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா கூறியிருந்தார். இராணுவத் தளபதியின் கூற்றைக் கேணல் அனுருத்த ரத்வத்த செவிமடுப்பதாக இல்லை.

சந்திரிகா அரசு ஆட்சிக்கு வருவதற்கு சமாதானம்' என்பதனை மூலதனமாக்கினார்களா அல்லது முகமூடியாக்கினார்களா என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. தனது அரசு ஆட்சிக்கு வந்தபோது விடுதலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுத் தமிழரின் போராட்ட வரலாற்றில் வெட்கித் தலைகுனியும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

புலிகளுடனான போரை வென்றெடுக்கும் நிலையில் படையினரிடம் போதிய ஆயுதங்கள் இல்லைஎன்றும், சீரான கட்டமைப்பில் படையணியினர் இல்லாத நிலையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதைத் தவிர ஒரு மாற்றுவழி தென்படவில்லை என்றே, இந்தியப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் சந்திரிகா, தனது சமாதான முகமூடியை விலத்திச் சொந்த முகத்தைக் காட்டியுள்ளார். “நன்கு ஆயுதம் தரித்த படையினருடன், ஓர் நேர்மையான அரசு இப்போரை வென்றெடுக்கும்” என்ற அவரது கூற்று தற்போது பரீட்சித்துப் பார்க்கப்படுகிறது. இதனால் சந்திரிகாவின் அரசு , சமாதானத்துக்குச் சம்பந்தப்பட்ட அரசாகத் தென்படவில்லை. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பேச்சுவார்த்தையின் போது முன்வைத்த நான்கு கோரிக்கைகள் தொடர்பாக இன்னும் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளனர். இவை நடைமுறைப் படுத்தப்பட்டால் அடுத்த கட்டத்தை நோக்கி நகரலாம் என்று அறிவித்ததுடன், கிழக்கு மாகாணத்தில் பரந்த அடிப்படையில் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறார்கள். கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டால் தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்ற தொனியிலேயே இவை நிகழ்கின்றன. இவற்றால் பெரும் பாதிப்புக்கும், இழப்புகளுக்கும் உட்பட்டவர்கள் சமாதானத்தை எதிர்நோக்கிக் காத்திருந்த பொதுமக்களே. பேச்சுவார்த்தைகளின் போது, இருதரப்பினரும் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் பலராலும் போதிக்கப் பட்டது. விடுதலைப் புலிகளின் தரப்பில் காணப்பட்ட இச் சகிப்புத் தன்மைக் குறைபாடே ஈழப் போர் மூன்று மூல மூல காரணமாகும். பேச்சுவார்த்தை முறிவினால் அதிக அரசியல் நலனைச் சம்பாதித்துக் கொண்டவர் சந்திரிகாதான். இனப் பிரச்சனைக்கான ஒரு அரசியற் தீர்வை மக்கள்முன் வைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் நெருக்குதலும் அவருக்குத் தற்போது இல்லை. இதனால், தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாகத் தன்னிடம் அரசியற் தீர்வு உண்டு என்ற மாயையை இன்னும் வளர்த்து சமாதானப் பிரியை' எனச் சர்வதேச நாடுகளில் அவருக்கு ஏற்பட்டுள்ள நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ளும் அதேவேளையில்; அந்நாடுகளில் இருந்து இராணுவ, பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகளே அதிகமாக உள்ளது. இதுவரைகாலமும் மௌனியாகவே இருந்த இந்தியா, தமிழ் மக்கள் மீதானதும் விடுதலைப் புலிகள் மீதானதுமான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுச் சந்திரிகாவின் கரங்களைப் பலப்படுத்தியுள்ளது. இதன் ஒரு கட்டமாக ராஜீவ் காந்தி கொலை வழக்குடன் தொடர்புடைய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளராக பிசிதம்பரத்தை நரசிம்மராவ் நியமித்துள்ளார். இவ்வழிவகைகளை, விடுதலைப் புலிகள் போரைத் தொடங்கி வைத்தமை சந்திரிகா அரசுக்கு இலகுவாக்கியுள்ளது.

இந்த மூன்றாம் கட்டப் போரில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பலம் இரண்டு அவ்ரோ' விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதன் மூலம் மீண்டும் நிரூபிக்கப் பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படை, நேரடித் தாக்குதற் பிரிவு களத்தில் இறங்கி, ஈழப்போர் அரங்கிற்கு இன்னுமோர் இராணுவப் பரிமாணத்தைக் கொடுத்துள்ளது. விடுதலைப் புலிகளின் இந்த முப்படை வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் முகமாக, அரசாங்கமும் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகை ஆயுதங்களையும், குறிப்பாக விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும், ஏவுகணை எதிர்ப்பு விமானங்களையும் கொள்வனவு செய்கிறது. இவ்வாறு இரு தரப்பினரதும் இராணுவ, ஆயுத வளர்ச்சி இனப்பிரச்சனையை மேலும் இராணுவ மயப்படுத்துமே தவிர அரசியற் தீர்வு என்ற வழிமுறைக்கு என்றுமே கொண்டு வராது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னைய பேச்சுகளின்போது, மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதில் இரு தரப்பினரும் தோல்வியைச் சந்தித்ததற்குக் காரணம்; மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் இரு தரப்பினரும் தத்தமது இராணுவ நலன்களைக் காப்பாற்ற முனைந்ததேயாகும். மேலும் புதிய இராணுவ யுக்திகளையும், வழிமுறைகளையும் இரு தரப்பினரும் தேர்ந்தெடுத்து, பரிபூரண இராணுவ மயப்படுத்தப்பட்ட நிலையில் வடகிழக்கு இருக்குமானால், தமிழ் மக்களின் அன்றாட, அத்தியாவசியப் பிரச்சனைகள் என்றென்றைக்கும் தீர்த்துவைக்கக் கூடியதாக இருக்கப் போவதில்லை. இந்தப் போர் யாருக்காக என்ற கேள்வியை நாம் மீண்டும் கேட்கத்தான் வேண்டும். சித்திரை 26 திருமலை மாவட்டத்தில் உள்ள கல்லாறுவ மீன்பிடிக் கிராமத்தில் 42 சிங்களப் பொதுமக்களும், 72 வயதான மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்ட புத்தபிக்குவும் கொலை செய்யப் பட்டுள்ளார்கள். இதற்கு விடுதலைப்

கல்லாறுவ சம்பவத்திற்கு மறுதினம் மூதூரில் காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற 20 தமிழ் மக்களை முஸ்லிம் காடையர்கள் வெட்டிக் கொன்றுள்ளனர்.

புலிகளே காரணம் என்றும், அதனைக் கடுமையாகக் கண்டித்துச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் உட்படப் பல அமைப்புகளும் அறிக்கை விட்டிருந்தன. இதனை விடுதலைப் புலிகள் அமைப்பு, ஆயுதந் தரித்த இனம்தெரியாத இளைஞர்கள் செய்தார்கள் என்றே செய்தி வெளியிட்டனர். அமைப்பு நலன்களைக் காப்பாற்ற விடுதலைப் புலிகள் வெளியிடும் வழமையான அறிக்கையாக இதனைக் கருதவே இடமுண்டு. ஆனால் இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது, அப்பாவிப் பொதுமக்களையும, புத்த பிக்குவையும் கொலை செய்வது யுத்த தர்மத்துக்கு முரணானது என்பதை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஈழப் போராட்ட ஆரம்ப

காலத்தில் இருந்து, தமிழ்ப் பொதுமக்கள், சிங்களக் குடியேற்றவாசிகள், முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுத் தமிழரின் போராட்ட வரலாற்றில் வெட்கித் தலைகுனியும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

கல்லாறுவ சம்பவத்திற்கு மறுதினம் மூதூரில் காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற 20 தமிழ் மக்களை முஸ்லிம் காடையர்கள் வெட்டிக் கொன்றுள்ளனர். படுகொலையான புத்த பிக்குவின் இறுதிக் கிரியைகள் நிகழ்ந்த தினம் காலியில் தமிழருக்குச் சொந்தமான 20 கடைகள் தீயிடப்பட்டன. தமிழரின் உடைமைகள் நாசமாக்கப் பட்டன. எல்லைக் கிராமங்களில் வசிக்கும் சிங்களப் பொதுமக்கள் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் எற்ற அச்சத்தில் கிராமங்களை விட்டு வெளியேறிக் கோயில்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவை அனைத்தும் இனங்களுக்கு இடையிலான கசப்புணர்வை, காலியில் எரிந்த தமிழர்களின் கடைத்தீ போல் இன்னும் கொழுந்துவிட்டெரிய நகுசேபித்வ ல்லாம் ஏ ச் செய்யுமே தவிரக் குறைக்கப் போவதில்லை

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தோன்றிய யுத்தம் தற்போது தமிழர்களையும், தமிழர்களது உடைமைகளையும் அழிக்கும் யுத்தமாகி, சிங்களக் கிராமத்து மக்களைப் பலிகொடுக்கும் யுத்தமாகத் தோற்றம் பெற்றுள்ளது. இந்த நிலையில் சமாதானத்தின் கதவுகள் திறந்துதான் உள்ளது என இரு தரப்பினரும் எவ்வளவு காலத்திற்குச் சொல்லிக்கொண்டு இருக்கப் போகிறார்களோ தெரியவில்லை. இதே பல்லவி தொடருமானால் அணில் கடித்த மாங்காய் ஆகியதே எமது இலங்கை என்று சம்பந்தப் பட்டவர்கள் கருத இடமுண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழைத் தமிழனிடமே விற்றுக் காசாக்கும் தமிழகச் சஞ்சிகைகள்

● அரூபன்

ஈழத்தில் கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக ஆயிரக் கணக்கான போராளிகளும், பொதுமக்களும் தமது இன்னுயிரை இழந்து போராடிக் கொண்டிருப்பது ஒரு பகிடிக்காக அல்ல, அது வெறுமனே வீர விளையாட்டுக்கான காட்சியும் அல்ல. தமிழர்கள் தமது அடையாளங்கள் இழக்கப்படக் கூடாது என்பதற்காகவும், தாமும் மனிதர்கள் என்பதை உலகிற்கு உரத்துச் சொல்லவும் நிகழ்த்தும் ஒரு போராட்டம். எப்போது தமிழர்கள், மனிதர்கள் என்று அங்கீகரிக்கப் படுகின்றனரோ அப்போது இந்தப் போருக்கான நியாயம் இல்லாது போகும்.

ஒரு இனம் தனது அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்வது எப்போதும் அவசியம். மற்றவர்கள் சொல்கிறார்களே என்றோ, அல்லது சௌகரியங்களைக் கருத்திற் கொண்டோ தனது அடையாளங்களை இழக்கும் ஓரினம் (அல்லது ஒரு மனிதன்) தன்மானம் உள்ளது எனக் கருதப்பட முடியாது. அண்மைக் காலங்களாகத் தமிழகத்தில் நிகழும் கூத்துகளைப் பார்க்கும் எவருக்கும், தமிழ்நாடு தனது அடையாளங்களை இழந்துவிட முயற்சி செய்கிறதா என்ற சந்தேகம் எழுவது இயல்பே.

தமிழே படிக்கா விட்டாலும் பறவாயில்லை, ஆங்கிலம் படி என்கிறது கொன்வென்ட்' ராணியின் அரசு. தமிழ்த் திரைப்பட உலகம், படப் பெயர்களை ஆங்கிலத்தில் சூடிக் கொள்கிறது. படங்களின் விளம்பர வாக்கியங்கள் ஆங்கிலத்தில் வருவதுதான் நாகரிகம் என்று பல சந்தை வியாபாரிகள் நினைத்துக் கொண்டு, தமிழின் கழுத்தைத் திருகுகிறார்கள். பத்திரிகைகள் தமிழ்ப் பெயரிலேயே இருந்தால், போதியளவு ஆங்கிலத்தை அள்ளித் தெளித்துத் தமது ஆங்கிலேய எசமான விசுவாசத்தை'க் காட்டுகின்றன, அல்லது பெயர்களையே ஆங்கிலத்தில் சூடிக் கொள்கின்றன. இவர்கள் தமிழன் என்ற காரணத்துக்காக அடிவாங்கினால் (விரைவில் இந்தியாவின் பல பகுதிகளிலும் இது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாத்தியம்போல் தெரிகிறது) ஆங்கிலத்தில்தான் கத்துவார்களோ தெரியாது.
அண்மையில் ஒரு சஞ்சிகையின் கேள்வி பதில் பகுதி மிக எரிச்சலைத் தந்தது. காரணம், அதில் வெளிவந்திருந்த ஒரு பதில். தமிழ் வார இதழ்களில் அறுபது வருடங்களுக்கு மேல் வெளிவரும் ஆனந்த விகடன் சஞ்சிகையின் கேள்வி பதில் பகுதிதான் அது. சஞ்சிகையின் இணை ஆசிரியரும், புகழ்பெற்ற கேலிச்சித்திரக் காரருமான மதன்தான் அந்தக் கேள்வி பதிலைத் தருபவர்.
மதன் தமிழகத்தில் மாத்திரமன்றி, ஈழத்திலும் மிகவும் புகழ்பெற்றவர். இவரது படைப்புகள் காலம் கடந்தும் மனதில் நகைச்சுவையை விதைக்கக் கூடியவை. ரெட்டைவால் ரெங்குடு, முன்ஜாக்கிரதை முனுசாமி போன்ற பாத்திரங்கள் படைக்கப்பட்டுப் பல வருடங்கள் ஆகியும் இன்றும் மனதில் நிற்கின்றன. இதுபோலவே மதனின் பல அரசியற் கேலிச் சித்திரங்களும். ஈழத்தில் மதன் போல ஆற்றல் மிக்க ஒருவர் சிரித்திரன் சுந்தராகத்தான் இருக்க முடியும். ஆனால், சுந்தருக்கும், மதனுக்கும் அடிப்படை வேறுபாடு, தமது தாய்மொழி மீதான பற்றுத்தான்.
மதனிடம் வாசகரது கேள்வி, ஜனியர் விகடன், ஜனியர் போஸ்ட் இப்படித் தமிழ்ப் பத்திரிகைகளின் பெயர் ஏன் தமிழல்லாமல் இருக்கிறது என்பது. அதற்கு மதனின் விளக்கம், பல தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்தில் ஏற்கப் பட்டுள்ளன. (உ-ம்: கட்டுமரம் - catamaran) அதுபோல, இந்துப் பத்திரிகைப் பெயர்களும் பலலட்சக் கணக்கான வாசகர்களால் ம ழாத (அழுத்தம் எனது) ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டன என்பது.
ஒரு மொழியில் இல்லாத புதிய பொருள் ஒன்று பாவனைக்கு வரும்போது, உதாரணமாகத் தொலைக்காட்சி, அதற்கான ஆங்கிலச் சொற்களைத் தமிழில் (பேச்சு வழக்கில்) அப்படியே - ரி.வி. என - ஏற்றுக் கொள்வதுண்டு. ஆனால் அதற்கான வேறு தமிழ்ச் சொல் உருவாக்கப் பட்டால் எழுதும்போது அதனையே பாவித்தலும் வழமை (தொலைக்காட்சி என). ஆனால் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம்' என்பதற்குப் பதிலாக, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்' என்று பாவனைக்குக் கொண்டு வருவது திணிப்பு. (ஏன் இந்தியாவிலும் தூரதர்ஷன் என்றும், ஆல் இண்டியா ரேடியோ என்றும்தானே இருக்கிறது?) இந்தத் திணிப்பு, தாம் பெரியவர்கள் என்று எண்ணும் பெரும்பான்மையின அரசியல்வாதிகளால் ஏற்படுவது. இதே திணிப்பை நாமே எமது அடிமைப் புத்தி காரணமாகவும் செய்யலாம். மதன் நியாயப் படுத்தும் இந்த இரு பெயர்களும் ஆனந்த விகடன் நிறுவனம் திட்டமிட்ட முறையில் தமிழ் வாசகர்கள் மீது செய்த திணிப்பு மாத்திரமன்றித் தமிழ் வாசகர்கள் அனைவருக்கும் செய்யப்பட்ட அவமானமும் ஆகும். அதேவேளை, ஆனந்த விகடன் தமிழ் வாசகர்களிடம் கருத்துக் கணிப்பு எதனையும் வைத்து இந்தப் பெயர்களைத் தெரிவு செய்யவில்லை. அப்படியிருக்க, மதன் ஏன் இப்படிப் பதிலளிக்க வேண்டும்?
ஆனந்த விகடன் இன்னொரு சஞ்சிகையை ஆரம்பிக்க விரும்பியபோது, இளைய விகடன் என்று

என்.சி. பாலா, மதுக்கூர் - படப்பை.

✉ ஜுனியர் விகடன், ஜுனியர் போஸ்ட் இப்படித் தமிழகத்தில் வெளிவரும் பத்திரிகை பெயர்கள் ஆங்கிலத்தில் இருப்பது நியாயமா?

ஜ நம்ம தமிழ் கட்டுமரம்தான் ஆங்கிலத்தில் catamaran. கறிதான் curry. சுருட்டுதான் cheroot. (பூரி) ஜகன்நாத் - Juggernaut! இவை தவிர Dhoti, Khaki, Veranda, Coolie, Pundit, Chit, Ghat, Sati, Tonga, Stupa என்று இந்திய மொழிகளிலிருந்து அப்படியே ஆங்கிலம் எடுத்துக்கொண்டுவிட்ட சொற்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அதேபோலத்தான் ஜுனியர் விகடன், ஜுனியர் போஸ்ட்டையும் தமிழ் வார்த்தைகளாகப் பல லட்சக்கணக்கான தமிழர்கள் எப்போதோ ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் பெயர் வைத்திருக்கக் கூடாது? ஆங்கிலத்துக்குச் சேவை செய்யும் அடிமைப்புத்தி ஆனந்த விகடன் ஆசிரிய குழுவினரிடம் இருந்ததைத் தவிர வேறென்ன காரணத்தை இவர்கள் சமாதானமாகக் கூறமுடியும்?

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆங்கிலத்தைத் திணிப்பதில் தமிழகப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் பல போட்டி போடுகின்றன. எப்போதோ எவனோ வந்திருந்து ஆண்டுவிட்டுப் போன ஒரு மொழியை இவ்வளவு தூக்கி வைத்திருக்கும் அடிமைப் புத்தியில் பலத்த போட்டி நிலவுவதை அங்கிருந்து வரும் வார சஞ்சிகைகள் எதனையாவது வாசிக்கும் ஒரு வாசகன் அறிய முடியும் (ஆங்கிலத்தைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டாடுவதில் ஈழத்தவர்களும் பின்னிற்பதாகக் கூறமுடியாது. ஆனால் சஞ்சிகைகள், பத்திரிகைகள் அவ்வளவு மோசமில்லை). உதாரணமாக, இந்தக் கேள்வி பதில் பகுதியின் பெயரே ஹாய மதன்'. இதே இதழில் இடம்பெற்றுள்ள வேறு பகுதிகளின் தலைப்புகள் லைடஸ ஆன, அனு அக்கா, ஆன்டி, ஸடாா ஜோகஸ 3D, செகஸ, பசி மாதிரி ஒரு உணர்வு, இந்த வாரக இடம்பெற்றுள்ள பக்கங்கள் என்பன. இதில் முதல் மூன்றும் வழமையான அம்சங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் எழுதுபவர் ஒருவரின் பெயர் லடங்கள'

ஆங்கிலத் திணிப்பு இந்தத் தலைப்புகளில் மாத்திரம் இல்லை, உள்ளே வரிவரியாகவும் இடம்பெற்றுள்ளது. உதாரணமாக, லைட்ஸ் ஆன்' என்ற பகுதியில் ஒவ்வொரு பந்தியிலும், அந்தப்

பகுதியை எழுதும் வினோத் ஆங்கிலத்தை அப்படியே எழுதித் தனது ஆங்கில விசுவாசத்தையும், அறிவையும் அள்ளித் தெளித்திருக்கிறார். இந்த வரிகளுக்குத் தமிழ் தெரியாதவரா வினோத் என்பதை ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவினர்தான் அறிவார்கள். இதே இதழில் புகழ்பெற்ற பத்திரிகையாளரான குஷவந்த்சிங்கின் பேட்டி ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தப் பேட்டித் தலைப்பும் ஆங்கில வார்த்தையைக் கொண்டது. அதாவது பரவாயில்லை என்றால் உள்ளே பேட்டியிலும் ஒரு கேள்வி அரைகுறை ஆங்கிலத் தமிழில் இருக்கிறது: “பஞ்சாபில் இப்போது நிலவுவது Deceptive Silence ஆ?” என. இதில் வருகிற ஆங்கில வார்த்தைக்குத் தமிழே இல்லையா? பேட்டி கண்ட வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜானின் தமிழறிவு பற்றிச் சந்தேகிக்க நேர்ந்தது இதைப் படித்தபிறகு. ஒரு தமிழ்ச் சஞ்சிகையைப் படிக்க ஆங்கில - தமிழ் அகராதியுடன்தான் இருக்க வேண்டுமா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. Deceptive என்பதற்கு ஏமாற்றக்கூடிய' எனவும், Silence என்பதற்கு அமைதி' என்றும் எனக்குக் கிடைத்த ஒரு ஆங்கில தமிழ் அகராதியில் பார்க்கக் கிடைத்தது. இதைத் தமிழில் சொன்னாலும் புரியும் என்றே நம்புகிறேன்.

ஒரு பெரிய நகைச்சுவை என்னவெனில், இந்த ஆனந்த விகடனுக்கு ஒருவாரம் முந்திய இதழில் இலவச இணைப்பாக மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்கள் தயாரித்த சிம்புட் பறவை'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழா.. தமிழா..

சி[illegible] விஷயங்களைப் பகிரங்கமாகப் பேசவேண்டியிருப்பது! விஷயம் [illegible] தாய்மொழியை உதாசீனப்படுத்துவது ஓர் எல்லை [illegible] போய்க் கொண்டிருக்கிறது என்பதுதான்! எதற்காக நாம் தாய்மொழியை தவிர்க்கப் பார்க்கிறோம் என்பதுதான் புரியவில்லை. பெரும்பாலானோர் ஆங்கிலம் பேசினால்தான் அறிவாளிகள் என்று கர்வப்பட்டுக் கொள்கிறார்கள் போலும்! அதிலும் சிலர் மிகச் சாதாரணமான நேரங்களிலும்கூட அதாவது, தன் குழந்தையைக் கொஞ்சும்போது – அதட்டும்போதுகூட, சக குடும்பத்தினரிடம் சாதாரணமாகப் பேசும் போதுகூட ஆங்கிலத்திலேயே தாண்டவமாடுகிறார்கள்! ஏன் இப்படி? அப்படிப்பட்ட சாதாரண நேரங்களில்கூட பேசக்கூடாத அளவுக்குத் தமிழ் தரம் இழந்துவிட்டதா?

சிறுபிள்ளைத்தனமாய்ச் சண்டைவிடாமல் இன்னொரு விஷயத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். ஆங்கில மொழி கூடாதென்று நிச்சயமாகக் கூறவில்லை... உலகச் செய்திகளைப் புரிந்து கொள்வதிலிருந்து, பரந்த இலக்கியச் சவாரி செய்வதுவரை ஆங்கிலம் மட்டுமல்ல, வேறு பல மொழிகள்கூட அவசியம்தான்!

அதற்காகத் தாய் மொழியை அழித்துவிட்டுத்தான் நாகரிகம் தேட வேண்டுமா? அதுவும் சில மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மூன்றாம் வகுப்போடு தமிழ்ப் பாடம் நிறுத்தப்படுகிறது. பிஞ்சுப் பருவத்தில் பலமான அஸ்திவாரம் இல்லாது போனால் அந்த இளைய சந்ததியினர் எப்படித் தாய்மொழி கற்பர்? அவர்களுக்கே அரைகுறையாகும் பட்சத்தில் அடுத்த சந்ததியினர் தமிழுக்கு எங்கே போவார்கள்? இப்படி மூன்றாம் வகுப்போடு தமிழை உதறிவிட்டு வருகின்ற பலர், கல்லூரியிலும்கூட, முதல் பாடமாக சமஸ்கிருதத்தையோ, இந்தியையோ எடுக்கிறார்கள். தாய்மொழி என்ன அவ்வளவு எளிதில் தூக்கி எறியப்படுகிற விஷயமா? நாகரிகம் தேடுகிறோம் எனக் கலாசாரத்தை அழிக்க வேண்டாம் என்பார்களே!

உலக அரங்கில் முன்னேற ஆங்கிலம் அவசியம்! மிக அவசியம்! ஆனால் அப்படி முன்னேறிய யாருமே தாய்மொழி தேவையில்லை என்று சரித்திரத்தில் எங்காவது கூறியுள்ளார்களா? யோசியுங்கள்!..

என்ற இதழ் உள்ளது. அந்த இதழில் மாணவர்கள் (இதழாசிரியர்கள்) தமிழ் அவமானப் படுத்தப்படுவது பற்றி ஒரு பக்கமே எழுதியிருக்கிறார்கள். அந்த இதழில் ஒரு மாணவனின் நாட்குறிப்பில் இடம்பெற்ற தமிழ் அவமதிப்பு நிகழ்ச்சி பற்றியும் உள்ளது.

இவற்றையெல்லாம் மதன் வாசித்திருப்பாரா தெரியாது.

ஆனந்த விகடனின் ஒரு இதழிலேயே இந்த நிலை என்றால் வாராந்தம் வரும் ஆனந்த விகடன் எவ்வளவு அக்கறையாக லட்சக் கணக்கான வாசகர்களுக்குத் தமிழை மறக்கச் செய்கிறது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சாப்பிட்டுவிட்டு வந்த மாதிரி பிய்த்துக் கட்டினார்கள். A royal battle between the ball and the bat.

ஷார்மிளா! Superlative-களைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் மேடம்.

All is fair in love and war என்பார்கள். கிரிக்கெட்டையும்

மேற்கண்ட quotable quote - களை 'ரங்கோலி'யில் வாரியிறைத்தார் ராதிகா. இந்த டெல்லி நிகழ்ச்சியில் இரண்டொரு தமிழ்ப்பாட்டும் பிச்சை போடுகிறார்கள். Thanks for the alms.

வைத்துக்கொள்ளுங்கள். Higgled figgledyதான். உதாரணம்?

'ஆதிபராசக்தி' படத்

நேரத்தைச் சரிப்படுத்திவிட்ட Killing the time with skill. ...தான்.

Go take a shower, நாரத ஸ்வாமி!

தலைமையாசிரியர்.

Vision with a mission.

சில்க் ஸ்மிதாவை

ஜூனியர் போஸ்ட்

இளமைத் துடிப்புள்ள ஒரு முழுமையான பத்திரிகை

ஸைட்ஸ் ஆன்

இன்று ரோசிக்கத் தேர்வு என்றோம். Saturday 22
தமிழ் இலக்கணத்தை கூட ஆங்கிலத்தில்தான்
நடத்த வேண்டுமாம்! கெட்டுகெட்ட கிரிமனப்
பெயரைச்சுத்தை மொழிபெயர்க்கச்
சொன்னார்கள். கெட்டுகெட்ட பயல்கள்!
கெட்ட வார்த்தையில் திட்டலாம்போல்
வருகிறது. அதுவும்கூட ஆங்கிலத்தில்
திட்டினால்தான் புரியும் போல! Sunday 23

என்பதைக் கற்பனையிற் கணக்குப் பார்க்கலாம். ஆனந்த விகடன் மற்றும் அவர்களது தோழமைப் பத்திரிகைகள் மாத்திரம்தான் இந்தத் திருப்பணியைச் செய்கின்றன என்று யாராவது நினைத்தால், அவர்கள் ஏமாந்தார்கள். தமிழகத்தின் முக்கிய சஞ்சிகைகள் அனைத்திலும் இந்த ஆங்கில ஆர்வம் தலைவிரித்தாடுகிறது. கொஞ்சம் தரமாக (நாகரிகமான முறையில்) வந்துகொண்டிருந்த கல்கியிலும் இதே நிலைதான். இண்டியா டுடே'யில் (தமிழ்) பட்டிக்கலோவா' என்று எழுதுகிறார்கள். இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்றான மட்டக்களப்பின் பெயரை அறியாதவர்களா இந்தப் பத்திரிகையின் செய்தி ஆசிரியர்கள்?

தமிழ்நாடு என்ற பெயரைத் தமது மாநிலம் கொள்ளவேண்டும் என்று எத்தனை பேர் போராடினார்களோ, அவர்களையும் சேர்த்து அவமதிக்கும் திருப்பணிதான் இப்போதைய பத்திரிகைகளின் முயற்சி. தமிழ் ஒரு தரக்குறைவான மொழியல்ல, அது எமது தாய்மொழி. அதைப் பேச, எழுத வெட்கப் படுவோமானால் நாம் எமது தாயையே அவமதிப்பவர்கள் போன்றவர்கள். தமிழில் குறைபாடுகள் இருக்கலாம். அப்படியானால் அவற்றைப் போக்குவதில் சஞ்சிகைகள் முன்நிற்க வேண்டும். அதுதான் உண்மையான தமிழ்ச் சஞ்சிகைக்கு அழகு. அதை விடுத்து அடுத்த மொழிக்கு முந்தானை விரிப்பது' பச்சை விபச்சாரமே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Nobel

மௌன அழுகை

ஜப்பானிய எழுத்தாளரான கென்சாபுரோ ஓயி (Kenzaburo Oe - 59) எழுதிய "The Silent Cry" என்ற நாவலுக்கு 1994 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்துள்ளது.

ஓயி(ஆனால் ஓஹி என்றுதான் உச்சரிக்கப்படுகிறது) எழுத்துக்களைப்பற்றி எந்தவொரு ஜப்பானியரிடமாவது கேட்டால் "மிகவும் சிரமம்" என்ற இரண்டே வார்த்தைகளில் பதில் சொல்வார்கள். ஆனால் நோபல் பரிசு பெற்றபிறகு அதனுடன் இன்னும் இரண்டு வார்த்தை களை சேர்த்து சொல்கிறார்கள் "அதிகம் விற்கக்கூடியது". ஏற்கனவே 1968 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஜப்பானிய எழுத்தாளர் யசுனாரி கவாபாடா.

ஓஹியின் புத்தகங்களை வெளியிட்டிருக்கும் வெளியீட்டாளரான யூகசு அபி கூறும்போது, "என்னுடைய சொந்த கருத்து என்னவெனில், அவரின் புத்தகங்கள் படிப்பதற்கு மிகவும் சிரமமானது, வெளிப்படையாக சொன்னால் அவருடைய புத்தகங்கள் இப்படி விற்குமென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை" என்று வியக்கிறார். டோக்கியோ பல்கலைக்கழகத்தில் 40 மாணவர்களை பேட்டி கண்டபோது அதில் 6 மாணவர்கள் மட்டுமே அவர் புத்தகங்களை படித்திருந்தனர். முதன்முறையாக அவர் புத்தகத்தை படிப்பதற்கு மிகவும் சிரமமாக இருந்தது என அந்த ஆறு பேரும் கூறியுள்ளனர். "நவீன எழுத்து முறையில் அமைந்துள்ள ஓஹியின் நாவல் இருண்டுபோன மனித உறவுகளை சித்தரிக்கக் கூடியதாக உள்ளது. "The Silent Cry" நாவல் முழுக்க முழுக்க குழப்பமடைய வைக்கும் உலகமாகவும், அதில் அறிவு, அன்பு, கனவுகள், ஆசைகள், செயல்பாடுகள் போன்ற அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது" என நோபல் பரிசு குழு கூறியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கு முன்பு உள்நாட்டில் இவைகளுக்கெல்லாம் ஒரு அங்கீகாரமற்ற போக்கு நிலவியது. மேற்கத்திய உலகில் ஜப்பானின் கலை மற்றும் இசைக்குக் கிடைத்த வரவேற்பு உண்மையில் அதற்குரிய அந்தஸ்தை ஜப்பான் பெற்றுள்ளது என்பதையே காட்டுகிறது. வெறும் பக்கங்களைப் புரட்டிப்போக வைக்கும் எழுத்தாளராக இல்லாமல், குறிப்பாக வாசித்தல் என்ற தளத்திலிருந்து தத்துவார்த்த வளையங்களுக்குள் வாசகர்களைத் தளநகர்த்தல் செய்வது ஒஹி எழுத்துகளின் சிறப்பம்சமாகும். இதுவரை 12 நாவல்கள் எழுதியுள்ள இவர் ஏற்கனவே பிரான்சு நாட்டின்ஒரு விருதும், ஜப்பானில் ஒரு இலக்கிய விருதும் பெற்றவர். கூடிய விரைவிலேயே ஒஹியின் படைப்புகள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட உள்ளன. குறைந்த அளவே ஜப்பானிய இலக்கியம் பற்றி வெளிநாட்டவர்கள் அறிந்திருக்கும் இச்சூழ்நிலையில் ஒஹியின் மொழியாக்கப் படைப்புகள் மூலம் அதிக அளவு தெரிய வாய்ப்பு உண்டாகும்.

பொதுவாக முதலாளித்துவ இதழ்கள்தான் மேலே கண்ட முறையில் ஒஹியைப் பற்றி எழுதியுள்ளன. ஆனால் இவர் ஒரு இடதுசாரி எழுத்தாளர் என்பதையே அவை மறைத்து விடுகின்றன. 1950 - 60களில் அமெரிக்க - ஜப்பானிய உடன்படிக்கையைத் தீவிரமாக எதிர்த்தார். ஜப்பான் சோஷலிஸ்ட் தலைவர் படுகொலையைக் கண்டித்து நாவலொன்று எழுதினார். ஹிரோஷிமாவில் விழுந்த அணுகுண்டால் அவருக்குப் பிறந்த குழந்தை ஊனமானது. அதை 'சொந்த விஷயம்' (A Personal matter) என்ற ஆங்கில மொழிபெயர்ப்பில் உலகம் முழுவதும் மக்கள் படித்தனர். 1970களில் இந்தியா வந்தபோது மக்களின் துயரங்களைக் கண்டார். அப்போது "ஜப்பான் நாட்டின் துன்பங்கள் கல்கத்தா தெருக்களில் திரிந்த மனிதர்களின் முன்பு மங்கிவிட்டது" என்று கூறிய மனிதாபிமானி அவர். கென்சாபுரோ ஒஹிக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. அவரது எழுத்துகள் என்று தமிழுக்கு வருமோ?

ஜேகே

பிறர் மொழியையும் நயந்திடு

எம் மொழியும் எம் கருத்தை
எட்ட வைக்கும் கருவியதாம்
அம் மொழிகள் மாறுவதால்
அகக் கருத்தும் மாறிடுமோ?

தம் மொழிமேல் பற்று வைத்தல்
தப்பென்று சொல்வீரோ!
நம் மொழிபோல் பிறர்
மொழியை
நயந்திடுதல் நலமன்றோ!

புத்தளம் ஷஹாஜஹான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குருவி

ஸ்தவங்கரில் சர்வதேச மகளிர் தினம்

சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டிக் கடந்த மார்ச் எட்டாம் திகதி ஸ்தவங்கரில் ஒருங்கிணைக்கப்பட்ட சில பெண்கள் அமைப்புகளால் ஊர்வலமும், அதனைத் தொடர்ந்து நகர மையத்தில் பொதுக் கூட்டமும் நடாத்தப் பட்டது. மேற்படி ஊர்வலத்தில் "தமிழரைத் தாயகம் திருப்பி அனுப்புவதை நிறுத்து" என்ற கோசம் அடங்கிய சுலோக அட்டையும் கொண்டு செல்லப் பட்டது.நகர மையத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் தமிழ்ப் பெண் ஒருவரும் உரையாற்றினார். அங்கு உரையாற்றிய திருமதி பிறேமா பகீரதன் அவர்களது உரையில் சில பகுதிகள் கீழே:

நோர்வேயில் உள்ள தமிழர்கள், இலங்கையில் உள்ள போர்த் தவிர்ப்பு ஒரு பாதுகாப்பான நிலை என்ற கருத்தில் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். இதைத்தானே 1987ல் இந்தியப் படை இலங்கைக்கு வந்தபோதும் கூறினார்கள். ஆனால் என்ன நடநத்து? மீண்டும் போரே துவங்கியது.

இப்படி ஒரு நிச்சயமற்ற நிலையில் இலங்கைத் தமிழர்கள் எப்படிப் பயமின்றித் திரும்ப நாட்டுக்குச் செல்ல முடியும்? இப்போது போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் மட்டுமே அமுலாகியுள்ளது. எந்தவித சமாதான ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இந்நிலையில் திருப்பி அனுப்பும் தீர்மானம் எம்மை, நோர்வே அரசு உதவி செய்ய நினைக்கிறதா அல்லது கைகழுவிவிட நினைக்கிறதா என எண்ணத் தூண்டுகிறது.வெளியில் இருப்பது நல்லது ஆனால் வீடே சிறந்தது (Borte bra, hjemme best) என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் உயிருக்குப் பாதுகாப்பு அற்ற நிலையில் எவனும் வீட்டில் இருப்பதை விரும்ப மாட்டான்.

இலங்கையில் தற்போது போராட்ட நிலை மாறி சுமுக நிலை தோன்றவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகள் தீர்க்கப் படவில்லை. 1990ல் இருந்து மின்சாரம் வடபகுதிக்குக் கிடைப்பதில்லை. பாடசாலைகள், மருத்துவ மனைகள், தொழிலகங்கள் இயங்க இது பெரும் தடையாக உள்ளது. மருத்துவமனை இயங்க முடியாமையால் பல நோயாளிகள் சிகிச்சை பெற முடியாமல் உயிரிழக்கிறார்கள்.

எமக்கும் ஏனைய குடும்பத்தினர்க்கும் பாதுகாப்பற்ற சிக்கலான அன்றாட வாழ்க்கையே எம் தாய்நாட்டில் கிடைக்கும் என்ற நிலையில் எப்படி நாம் நாடு திரும்பலாம்?

ஏராளம் அகதிகள் இலங்கையில் உள்ளனர். அங்கு உணவுத் தட்டுப்பாடு உள்ளது. சிறார்கட்கு உணவு, மருந்து வசதிகள் கிடைப்பதில்லை.

தலைநகரான கொழும்பில் அமைதியான சூழ்நிலை நிலவினாலும் வடகிழக்குப் பகுதிகளில் அப்படியில்லை. சர்வதேச மன்னிப்புச் சபை, றெட்பாணா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன தமிழர்களைத் திருப்பி அனுப்புவதைச் சரியென ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழர்களைத் திருப்பி அனுப்பும் முடிவைக் குறுகிய காலத்தில் எடுத்த நோர்வே அரசு, அங்கு ஒரு உறுதியான சமாதானம் வரும்வரை பொறுக்க வேண்டும். அங்கு வாழ்க்கை வழமைக்குத் திரும்பும்வரை நோர்வேயில் இருந்து அகதிகள் திருப்பி அனுப்பப்படக் கூடாது.

மேற்படி ஊர்வலம் தொடர்பாக வானொலி, பத்திரிகைகள் போன்ற தொடர்புச் சாதனங்களூடாக முன்கூட்டியே அறிவிக்கப் பட்டிருந்தும் சுமார் 250 தமிழர்கள் வசிக்கும் ஸ்தவங்கர் நகரத்திலிருந்து ஏழு பேர் மாத்திரமே "தமிழர்களைத் தாயகம் திருப்பி அனுப்பாதே" எனும் பதாகையின் கீழ் ஊர்வலத்திற் பங்கெடுத்தனர் என்பது கவலை தரும் விடயம்தான்.

சுமுகமான சூழ்நிலை எமது தேசத்தில் ஏற்பட்டமுன் தமிழர்களைத் திருப்பி அனுப்ப நோர்வே எடுத்த முடிவு இங்கு (புலம்பெயர்ந்த நாடுகளில்) வாழும் அனைத்துத் தமிழர்களுக்கும் பாதகமானது என்பது அனைத்துத் தமிழர்களுமே அறியாததல்ல. அப்படியிருந்தும் தமது பிரச்சனைகளை இந்தத் தேசத்து மக்களுக்கு எடுத்துக் கூறவும், நோர்வே அரசு தமிழர்களுக்கு எதிராக எடுத்துள்ள முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் எமது சமூகம் ஏன் முன்வர மறுக்கிறது? கூட்டத்தின் முடிவில் உரையாடக் கிடைத்த ஒரு நோர்வேஜியச் செய்தியாளர், "நோர்வே அரசு தமிழர்களுக்கெதிராக எடுத்துள்ள இநத் முடிவுக்குத் தமிழர்கள் மத்தியிலிருந்து எழும் எதிர்ப்பு மிகமிகக் குறைவு" என்றார்.

இது ஏன் எமக்குப் புரியவில்லை?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழருக்காக நோர்வேயின் குரல்



நோர்வேயில் தமிழர்கள் படிப்படியாக நிலைபெற்றுக்கொண்டு வருகின்றனர். மறுபுறம் நோர்வே அரசு, தஞ்சம் கோரிய தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

துறொம்சோ நகரில் பொறியியல் கற்றுக்கொண்டிருக்கும் ஜேசுதாசன் என்ற தமிழரை ஏப்ரல் இறுதியில் பொலிசார் கைது செய்து அவரைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். மே மாதம் பரீட்சைக்குத் தோற்ற இருந்தார் மாணவர்களுக்கான விசாவில் இருந்த ஜேசுதாசன். பரீட்சைக்கு ஒரு மாதமே இருந்த நிலையில் அவரை இவ்வாறு கைது செய்து நாடு கடத்த முயல்வது தவறு எனத் துறொம்சோ பொறியியற் கல்லூரி அதிபரும், அரசியல்வாதிகளும் கடுமையா ஆட்சேபம் தெரிவித்தனர். இவற்றால் அவரைத் தொடர்ந்து (பரீட்சைக்குத் தோற்றும்வரை) நோர்வேயிற் தங்க அரசு அனுமதித்துள்ளது.

ராஜீவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வைகள் வேறு!

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கூடி வாழ்ந்தாலும், அவர்களது அன்றாடக் கடமைகளில் இருவரதும் பார்வைகளும் வேறுதான் என்று பலர் அவதானித்திருப்பர். சில வருடங்கள் முன்னர் வெளிவந்த பத்திரிகை ஒன்றில், ஆணும் பெண்ணும் வெவ்வேறு மொழியையே பேசுகிறார்கள் என்று இதை நகைச்சுவையாகக் குறிப்பிடப் பட்டிருந்தது. அதில் குறிப்பிட்டிருந்த சில உதாரணங்கள் இவை:

துப்பரவாக்கப்படல்

பெண்ணின் மொழியில் இதன் அர்த்தம் பின்வருமாறு: மேசை, கதிரை ஒழுங்காக்கப்பட்டுத் துடைக்கப்படல், அழுக்கான பாத்திரங்கள் துப்பரவாக்கும் இபந்திரத்துள் வைக்கப்பட்டு அது இயங்க வைக்கப்படல், அடுப்பின் உள் வெளிப்புறம் துப்பரவாக்கப்படல்.
ஆணின் மொழியில் இதன் அர்த்தம்: அழுக்கான பாத்திரங்கள் துப்பரவாக்கும் இபந்திரத்துள் வைக்கப்பட்டு அது இயங்க வைக்கப்படல், அடுப்பின் உள் வெளிப்புறம் துப்பரவாக்கப்படல்.
ஆணின் மொழியில் இதன் அர்த்தம்: அழுக்கானபாத்திரங்கள் குவியலாகச் சவர்க்காரத்தினுள் ஊறவிடல்.

குழந்தைகளைவெளியே அனுப்பல்.

பெண்: குழந்தை என்ன செய்யப் போகிறது என்பதன் அடிப்படையிலும், வெளி வெப்பநிலை அடிப்படையிலும் உடுப்புகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை அணிவித்தல்.
ஆண்: குழந்தைகளைப் பிடித்து அவர்களுக்கு ஜக்கெற்றையும், சப்பாத்தையும் அணிவித்து வெளியே அனுப்பல்.

சேர்ட்.. அயன் பண்ணுதல்

பெண்: முழு சேர்ட்டையும் அயன்' பண்ணுதல் - மடிப்புகளுக்கு இடையிலும், பொத்தான்கள் பூட்டப்படும் இடத்திலும் -.
ஆண்: சேர்ட்டின் மார்புப் பகுதியை மாத்திரம் அயன் பண்ணுதல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழுக்கு உடுப்புகளை

பெண்: நிற அடிப்படையிலும், அவை எந்த வெப்பநிலையில் தோய்க்கப்பட உள்ளன என்ற அடிப்படையிலும் அழுக்கு உடுப்புகளைப் பிரித்தெடுத்தல், உடுப்புகளை உதறல்,ஸிப்களைத் திறந்து விடுதல், பொக்கெற்றுகளில் ஏதாவது இருக்கிறதா எனப் பரிசோதித்தல், கறைகளுக்கு கறைநீக்கியைப் பிரயோகித்தல், வோஷிங் மெஷின் நிறையாமல் பார்த்துக் கொள்ளல்.

ஆண்: எல்லாவற்றையும் வோஷிங் மெஷினுக்குள் அடைந்துவிட்டு அதை லொகை (கூடிய) வெப்பநிலையில் இயக்கிவிடல்.

பகலை:

பெண்: ஈர உடுப்புகளை உதறி, அவை சரியாகக் காயும்வண்ணமும், ஒரே வகை உடுப்புகளை ஒரே இடத்திலும் தொங்கவிடல்.

ஆண்: உடுப்புகள் எடுக்கும் ஒழுங்கிலேயே அவற்றைத் தொங்கவிடல், ஒன்றிரண்டுக்கு அவை இறுக்கமாகத் தொங்கும்படி க்ளிப்' களை இணைத்தல்.

பொருட்களைதீர்மானித்தல

பெண்: எந்தெந்த உணவுப் பொருட்கள் தேவை எனவும் தீர்மானித்தல், மிகுதிகளை எப்படிப் பயன்படுத்தலாம் எனவும் தீர்மானித்தல், தேவையெனில் பொருட்களை வாங்குதல், இவற்றை ஒழுங்கான முறையில் அனைத்து அம்சங்களும் இடம்பெறும் வகையில் உணவாக்கல்.

ஆண்: பிஸ்சாவுக்கு (Pizza/) ஓடர் கொடுத்தல்.

அழைத்துச் செல்லல்.

பெண்: என்ன நடவடிக்கைகளில் விளையாட்டுகளில் குழந்தைகள் ஈடுபடலாம் எனத் தீர்மானித்து அதற்கேற்ற வகையில் உடுப்பு அணிவித்து அவர்களை அழைத்துச் செல்லல்.

ஆண்: குழந்தைகளை மக்டொனால்ட்ஸ்க்கு (McDonalds) அழைத்துச் செல்லல்.

சூழலை ஏற்படுத்தல

பெண்: மிகச் சுவையான தேர்ந்தெடுத்த உணவு வகையை ஆக்கல், மேசையை அழகாக அலங்கரித்தல், குழந்தைகளுக்கு அழகாக உடையணிவித்து, ஒரு இனிமையான சூழலை ஏற்படுத்தல்.

ஆண்: இவற்றையெல்லாம் பெண்கள் செய்யும்படி பார்த்துக் கொள்ளல்.

இது ஒருவிதத்தில் நகைச்சுவையாக இருந்தாலும் பல குடும்பங்களில் அப்படியே பொருந்தக் கூடியதும்கூட. இது உங்கள் குடும்பத்தை அப்படியே பிரதிபலிக்க வேண்டும் என்றில்லை. உங்கள் குடும்பம் இதைவிடச் சிறப்பானதாக இருக்கலாம், அல்லது.........

அல்லி ராச்சியம்!

வடபுல நோர்டிக் நாடுகளில் (Norden) குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் (barnehage) மிகப் பெரும்பான்மையாகப் பெண்களே பணிபுரிகின்றனர். அண்மைய புள்ளி விவரங்களின்படி இந்த நிலையங்களில் பணிபுரியும் ஆண்களின் சதவீதம் ஐந்து மாத்திரமே.

கடந்த வருட இறுதியில், இந்நிலையங்களில் பணிபுரியும் ஆண்களின் மாநாடு ஒன்று குழந்தைகள் - குடும்பநல அமைச்சுடன் இணைந்து ஸ்தவாங்கர் மாநகரசபையால் நடத்தப் பட்டது. இனிவரும் காலங்களில் இத்தொகையை அதிகரிக்கச் சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள உள்ளது. முக்கியமாக இந்த நிலையங்களில் இருக்கும் வேலை வாய்ப்புகளுக்கு ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனச் சட்டபூர்வமாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மனு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுயநிர்ணய ஷரத்துப்படி பாகிஸ்தான் தான் ஆக்கிரமித்திருந்த பகுதியிலிருந்து திரும்பிவிட்டது. ஆனால் இதுநாள்வரை காஷ்மீர் மக்களின் விருப்பத்தை இந்தியா கேட்கவில்லை. அவரவர் தங்களின் இராணுவ பலத்துடன் காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

வேனிலான்

காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்க முடியாத பகுதி சரார் - ஏ - ஷரீப் உணர்த்துவது என்ன

ஆங்கிலேயர்களிடம் இருந்து இந்தியாவை ஆளும் உரிமையை இந்தியத் தரகு முதலாளிகள் பெற்றனர். இதுதான் இந்தியச் சுதந்திரம் எனப்படுகிறது. இந்த நேரத்தில் காஷமீரை மகாராஜாவே ஆண்டுவந்தார். மக்கள் அனைவரும் முஸ்லிம்கள், மன்னர் இந்து. பாக்கிஸ்தான் தனது மக்கள் அதிகம் வாழும் காஷ்மீரின் ஒரு பகுதியைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதிர்ச்சி அடைந்த மகாராஜா, பாகிஸ்தானை எதிர்த்து நிற்கப் போதிய பலமின்மையால் இந்திய ராணுவ உதவியைக் கோரினார். இதுதான் தருணம் என்று காத்திருந்த இந்தியா, காஷமீர் இந்திய ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக ஆகவேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது. பாகிஸ்தானை எப்படியும் எதிர்க்க வேண்டும் என்ற நிலையிலிருந்த மகாராஜா வேறு வழி இல்லாமல் இந்தியாவின் நிபந்தனையை ஏற்றுக் கொண்டார். ஆனால் போருக்குப் பிறகு இந்தியாவுடன் காஷமீர் இணைந்திருப்பதா வேண்டாமா என்பதை அம்மக்களிடம் கேட்க வேண்டும் என்று மகாராஜா பதில் நிபந்தனை விதித்தார். இந்தியாவும் ஏற்றுக் கொண்டது. போருக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் அவையின் சுயநிர்ணய ஷரத்துப்படி பாகிஸ்தான் தான் ஆக்கிரமித்திருந்த பகுதியிலிருந்து திரும்பிவிட்டது. ஆனால் இதுநாள்வரை காஷமீர்

மக்களின் விருப்பத்தை இந்தியா கேட்கவில்லை. அவரவர் தங்களின் இராணுவ பலத்துடன் காஷமீரை ஆக்கிரமித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இவ்வாறு 50 ஆண்டுகாலத் தொடர்ச்சியான தனிநாட்டுப் போராட்டத்தைத்தான் இந்தியா டுடே ஆறு வருடங்களாக நடக்கும் பிரிவினைப் போராட்டமாகத் தனக்கே உரிய இந்துத்துவக் கண்கொண்டு பார்க்கிறது தர்க்கா: தீக்கிரையாக்கப்பட்ட முஸ்லிம் சூபி சித்தரான நூருத்தின் நூராணியின் சரார் - ஏ - ஷரீப் தர்க்கா, இந்து முஸ்லிம் இணைப்புப் *பாலமாக*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்கிய. இந்துக்கள் நூராணியை நந்தரிஷி என்றே அழைத்தனர். இதுபோன்றே இந்தியா முழுவதும் உள்ள தர்க்காக்கள் இந்து முஸ்லிம் இணைப்பின் வெளிப்பாடுகளாக இருந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, நாகூர் தர்கா. தஞ்சை இரட்டை மஸ்தார் தர்காக்களில் முஸ்லிம்களை விட இந்துக்களே அதிகம் வழிபாட்டுக்கு வருகின்றனர். காஷமீர் செல்லும் சுற்றுப் பயணிகளுக்கு முக்கிய இடமாக இது காட்டப்படுவதும் உண்டு. தனிநாடு கோரும் காஷமீரிகள் இதனையே தமது அரசியல் மேடையாகப் பயன்படுத்தி வந்தனர்.

ஹசரத்பல் மசூதியில் இருந்த போராளிகளின் இருப்பிடத்தை அறிந்து அதை அழித்த பின்னர் ரோராளிகள் தங்களின் இருப்பிடத்தை சரார் - ஏ - ஷரீப் தர்க்காவிற்கு மாற்றிவிட்டனர். ஐந்து மாதம் கழித்தே இந்திய ராணுவம் இதனை முற்றுகையிட ஆரம்பித்தது; மின்சாரம், குடிநீர் வரத்தைக் குறைத்தது. நகர மக்கள் தொகையில் 99%பேர் மிரட்டப்பட்டு வெளியேற்றப் பட்டனர். பின்னர் இராணுவம் தலைவிரித்தாடியது. வெறுமையான எல்லா வீடுகளுக்கும் ராணுவம் தீ வைத்தது. அப்போதும் போராளிகள் தர்க்காவை விட்டு வெளியே வராததால் மே பத்தாம் திகதி இராணுவம் தனது தாக்குதலை ஆரம்பித்தது. நகரில் இருந்த மக்கள் உறங்கும் வேளை மே பதினொராம் திகதி நடுஇரவில் தர்கஏ மீது குண்டுமாரி பொழிந்து பிணக்காடாக்கியது. சரார் ஏ ஷரீப்பைப் பார்வையிட 400க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் விரும்பியும் இராணுவம் அவர்களைத் தடுத்தது. தர்க்காவின் இழப்புக்குப் பின், முஸ்லிம்கள் போராடத் தொடர்ந்த பின்னர்தான் தனக்கு வேண்டிய பத்திரிகையாளர்களை மாத்திரம் அழைத்துச் சென்று காட்டியது இராணுவம். போராளிகளில் ஒருவரைக்கூட இராணுவம் பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. சீக்கியர்களின் பொற்கோயிலை இடித்த ஒப்பரேசன் புளூஸ்ராருக்கு சில ஆண்டுகளுக்குள்ளாகவே பாபர் மசூதி இடிக்கப் பட்டது. இந்தாண்டு அதே மே 11ம் திகதி தர்க்காவைக் கொழுத்திவிட்டு, ஒப்பரேசன் சாந்தி செய்திருக்கிறார்கள், இந்தியத் தரகு முதலாளிகள். இராணுவத்தின் தடையையும் மீறி முற்போக்குப் பத்திரிகையாளர்கள் மக்களிடம் சென்று பேட்டி எடுத்தனர்.

அனில் சித்திக்: எந்த உரிமையின் அடிப்படையில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு மூன்றாவது நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்க முடியும்? காஷமீர் காஷமீரியர்களுக்கே!

சல்மா: காஷமீரியர்கள் போராடுவதும் தியாகம் செய்வதும் இன்னொரு நாடு தங்களை ஆள்வதற்காகவா? இல்லை, நாங்கள் இரத்தம் சிந்துவது சுதந்திர காஷமீரத்திற்காக....

> **எந்த உரிமையின் அடிப்படையில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு மூன்றாவது நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்க முடியும்? காஷமீர் காஷமீரியர்களுக்கே!**

நசீர்: நாங்கள் தனிப்பட்ட தேசிய இனம். எனவே தனிநாடுதான் எங்களுக்குத் தேவை வெளிமனிதர்களால் ஆளப்பட வேண்டும் என நாங்கள் விரும்புவோமானால் நிச்சயம் இந்தியாவுடன் சேர்ந்திருப்போம். ஆனால் எங்கள் விருப்பம் அதுவல்ல. நாங்கள் போராடுகிறோம். ஒருநாள் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

காஷமீர் ரைம்ஸ் ஆசிரியர் வெய்த பாசின்: காஷமீர் மக்கள் இந்தியாவில் இருந்து முற்றிலும் அந்நியமாகி உள்ளனர். இப்பொழுது நிலவும் அமைப்பு முறையோடு வாழ அவர்களுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. ஒரு மாற்றத்தை விரும்புகின்றனர்.

கொல்லப்பட்டவர்கள்: 29,262பேர்
காயமடைந்தோர்: 24,235பேர்
உயிரோடு எரிக்கப்பட்ட பள்ளிச் சிறுவர்கள்: 407பேர்
உயிரோடு எரிக்கப் பட்டோர்: 519பேர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெலும் நதியில் பிணமாகக் கிடந்தோர்: 436பேர்
பாலியல் பலாத்காரம் செய்யப் பட்டோர் (வயது ஏழிலிருந்து எழுபது வரை): 4,207பேர்
சித்திரவதையால் ஆண்மையை இழந்தவர்கள்: 5991பேர்
முடமாக்கப்பட்டவர்கள்: 35,286பேர்
காணாமல் போனோர்/ கடத்தப் பட்டோர்: 90,285பேர்
வலுக்கட்டாயமாக வாழிடத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள்:41,501பேர்உடைக்கப்பட்ட கல்விக்கூடங்கள், மருத்துவ மனைகள்: 105பேர்

எரிக்கப்பட்ட/ நொருக்கப்பட்ட வீடுகள்: 8,276
எரிக்கப்பட்ட/ நொருக்கப்பட்ட கடைகள்: 4,396
எரிக்கப்பட்ட/ அழிக்கப்பட்ட தானியங்களும் உணவுப் பொருட்களும்: எட்டுக் கோடி ரூபாய் பெறுமதியானவை.

தகவல் ஆதாரங்கள்: Amnesty International, Asia Watch, UN committee on human rights abuses, People's union for civil liberties (Delhi), International Human Rights Organization.

பெரியது கேட்பின்.....

உலகின் மிகப் பெரிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எது என்றால் பலர் கடுமையாக யோசிப்பார்கள். அந்தப் பாரிய சுற்றுப் போட்டி நோர்வேயில்தான் நிகழ்கிறது. வருடா வருடம் கோடை காலத்தில் நிகழ்த்தப்படும் நோர்வேக் கிண்ண□ச் (/ஷைய/மூஔ ஆகுசூறஎம/உயப/) சுற்றுப் போட்டியே அது. பல ஆயிரக் கணக்கான குழுக்கள், மேலும் பல ஆயிரக் கணக்கான வீரர்களுடன் கலந்துகொள்ளும் இந்தச் சுற்றுப் போட்டி உலகின் பல பகுதிகளில் இருந்தும் குழுக்களை ஈர்க்கிறது. இவ்வருடம் ஆயிரத்திநூறு குழுக்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்தப் போட்டிகள் சிறுவர்கள் மட்டுமே கலந்துகொள்ளக் கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

மஹி

ஒன்றரை வருடம்
ரெலிபோனுடன் இருந்த பெண்

சுவீடனின் ஒஸ்ரர்சுண்ட் (istersund) எனும் இடத்தில் வசிக்கும் ஒரு பெண்மணிக்கு அண்மையில் ஒரு அதிர்ச்சியான தொலைபேசிக் கட்டணம் வந்தது. அவர் கனவிலும் நினைத்திராத அந்தத் தொலைபேசிக் கட்டணம் ஒன்றரைக் கோடி குறோணர்கள் (பத்துக் கோடி இல. ரூபாய்கள்)
இந்தத் தொகை கட்டணமாக வருவதற்கு, அவர் ஒன்றரை வருடங்கள் தொடர்ச்சியாகத் தொலைபேசியில் பேசிக்கொண்டே இருந்திருக்க வேண்டும். அதுவும் ஒரு தொலைதூர நாடொன்றில் அவருடன் பேசுபவர் இருக்க வேண்டும். நல்ல வேளையாக அப்படியல்ல நிலைமை. சுவீடனின் தொலைத்தொடர்பு நிறுவனம் தனது தவறுதான் அது என்று ஒப்புக்கொண்டு விட்ட

/கேசவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்று புத்தகங்கள் திரைப்படம் மற்றும் இயக்குனர் நேர்முகம்

யமுனா ராஜேந்திரன்

ரோஸா லக்ஸம்பேர்க்:

திரைப்படத்தின் இறுதிக் காட்சிகளில் ரோஸா மூன்று முறை கொல்லப்படுகையில் துக்கம் தாளாது தான் அழுததை தனது தொலைபேசி உரையாடலில் சொன்னார் எஸ்.வி.ராஜதுரை. விமர்சகர் மு.நித்தியானந்தன் நாவலாசிரியரும் மாக்சியருமான கணேசலிங்கம் மூலம் இந்தியாவில் இப்படத்தைப் பார்த்திருந்ததாகக் குறிப்பிட்டார். ராயன் மூலம் ரோஸா பற்றின அறிமுகப் புத்தகம் ஒன்றும் தமிழில் வந்துவிட்டது. ரோஸா திரைப் படத்திற்கான சின்ன அறிமுகம் ஒன்று அபேதன் மூலம் சரிநிகரில் வந்திருக்கிறது. தமிழகத்திலும் இலங்கையிலும் சமூக மாற்றத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் ரோஸா பற்றின விவாதத்தில் நுழைவதற்கான வாசல் திறக்கப்பட்டு விட்டது.

இப்புத்தகம் எழுதுவதற்கான உத்வேகம் எனக்கு ரோஸா திரைப்படத்தின் இயக்குனரும் நடிகையும் அரசியல் நடவடிக்கையாளருமான மார்கரத் வான் ட்ரோட்டாவின் Margarethe Von Trotta) நேர்முகமொன்றை வாசிக்கும்போதுதான் ஏற்பட்டது. ரோஸா திரைப்படம் 198 ஆண்டு வெளியானது.



1986ம் ஆண்டு ஆகஸ்டு 26 லண்டன் நேஷனல் பிலிம் தியேட்டருக்கு ரோஸா படம் பற்றிய கலந்துரையாடல் வந்திருந் இவரது நேர்முகம் 1991ம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்ற, Andrew Britton ஆல் தொகுக்கப்பட்ட Talking Films ஆவணங்களில் ஒன்றாகத் தரப்பட்டிருக்கிறது. ஸத்யஜித்ரே, ரேமாண்ட் வில்லியம்ஸ் உள்ளிட்ட திரைப்பட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேதைகளின் நேர்முகங்கள் கொண்ட இத்தொகுப்பை London Guardian பத்திரிகைக்காக 4thEstate பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது.

அவரது கலந்துரையாடலில் திரைப்படத்தின் காட்சியமைப்புகள் ரோஸாவின் சிந்தனை சோகமான இசை என்று தொடங்கி புரட்சிக்காரரின் இரத்தமும் சதையுமான வாழ்வு திரையில் தரப்படும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என வளர்ந்து ரோஸா பற்றின பெண்நிலைவாத மறுகட்டமைப்பும் உள்வாங்குதலும் இன்றைய தேவை என்ற நோக்கில் செல்கிறது.

ரோஸா லக்ஸம்பர்க் பற்றி இதுவரை எழுதப்பெற்ற வாழ்க்கைச் சித்திரங்களில் ரோஸாவின் தகித்த மானுட உள்ளடக்கம் இல்லையென்றே இவரது சாராம்சமான விமர்சனம். புரட்சிகர வன்முறைக்கும் அதிஉன்னத மானுட நேயத்துக்கும் இடையில் தினம் தினம் வேதனையுடன் உத்வேகத்துடன் தனிமைத் துயருடன் வாழ்ந்த ஒரு மனுஷியின் வாழ்வு அவர் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களில் வெளிப்படவில்லை என்பது அவர் விமர்சனம். ரோஸா பற்றின பெரும்பாலான புத்தகங்கள் அவர் காலத்தில் அவரைச் சுற்றிய அரசியல் வரலாறுதான் (Political History) அவர் வாழ்வு எனும் அளவில் எழுதப்பட்டுள்ளது. மார்கரத்தாவின் அபிப்பிராயங்களோடு உடன்பாடான ஒரு நிலைப்பாடுதான் எனக்கும் ஏற்பட்டது. Paul Frolich எழுதி 1940ஆம் ஆண்டு New Left Books பதிப்பகத்தால் கொணரப்பட்ட Rosa Luxemburgh: Ideas in Action புத்தகம்தான் பெரும்பாலானவர்களால் பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படும் புத்தகம்.

அதையொட்டித்தான் தமிழகத்தில் இருந்து ராயன் 1993ஆம் ஆண்டு சமர் வெளியீடு மூலம் ரோஸா பற்றிய தமிழ்ப்புத்தகத்தைக் கொணர்ந்திருக்கிறார். சில பகுதிகள் தவிர்த்து (அப்பகுதிகள் மிக முக்கியமானவை என்பது என் அழுத்தம்) Paul Frolich புத்தகத்தின் சுருக்கப்பட்ட வடிவமாகவே இப்புத்தகம் எழுதப் பட்டுள்ளது. ராயனின் உத்வேகமும் இத்தகைய புத்தகத்தைக் கொணர வேண்டும் என்ற ஈடுபாடும் எனது விமர்சனக் குறிப்புகளையும் மீறித் தலைவணங்கத் தக்கது.

இந்த இரு புத்தகங்களையும் படித்தபின்னால் சோசலிஸ்ட் கட்சியின் சிந்தனையாளர்களில் ஒருவரான Tony Cliff 1959ஆம் ஆண்டு மே மாதம் எழுதி Rosa Luxemburg பற்றின விரிவான அறிமுகம் படிக்கக் கிடைத்தது. ரோஸாவின் முழுமொத்த சிந்தனையையும் அதனது அரசியல் சித்தாந்த நடைமுறை வரலாற்று விவாதங்களுடன் முன்வைக்கும் அற்புதமான புத்தகம் இது என்பது என் எண்ணம். 1986ஆம் ஆண்டுக்கான மூன்றாம் பதிப்பில் அன்றைய ஐரோப்பிய அரசியல் பின்னணியில் ரோஸாவின் சிந்னையை மதிப்பீடு செய்த Lindsey German இன் அழகான முன்னுரையும் இதில் உண்டு.

ஆயினும் இந்த மூன்று புத்தகங்களைப் படித்து முடித்த பின்னரும் ரோஸா என்கிற இசைத் தன்மையான, பறவைகளை நேசித்த, தாவரங்களை ஆரத் தழுவிய, நிலவைத் துக்கித்த, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்குச் சீறிய, குழந்தைகளின் தொடுதலுக்காக மார்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விம்மிய, அர்த்தமற்ற வன்முறையை நிராகரித்த, நொண்டி நொண்டி நடக்கும் ரோஸாவின் துக்கமான ஆளுமை/ துயரம் எனக்குள் வரவில்லை.

ரோஸாவைப் பற்றி கார்ள் மாக்ஸின் வரலாற்றை எழுதிய Franz Mening சொல்வான்: 'மாக்ஸிற்குப் பிறகு அற்புதமான மூளை என்னளவில் நான் படித்துச் சிலிர்த்த வாழ்வு, பார்த்து நெகிழ்ந்த அழுது குமுறிய உத்வேகம் பெற்ற வாழ்வு, சே குவேராவுக்கு அடுத்து ரோஸா லக்ஸம்பர்க்கின் வாழ்வுதான். கம்யூனிஸ மனிதனுக்கான தன்னுணர்வை அச்சமூக அமைப்புக்கு முன்பே கொண்டிருந்த மனிதன் சே என அவன் கவிதைகளுக்கு முன்னுரை எழுதுகிறபோது 10 வருடங்கள் முன் எழுதியிருந்தேன். இதே வரையறுப்பை ரோஸா பற்றிய தனது மதிப்பீட்டில் தெரிவிக்கிறார் Tony Cliff (Rosa Luxumburgh, p.81) சே குவேராவும் ரோஸா லக்ஸம்பர்க்கும் தத்தமது வரலாற்று நிகழ்வுகளையும் விவாதங்களையும் தாண்டி மானுட குலம் உள்ளளவும் மறுபடி மறுபடி வாழ்வை ஜீவனுடன் வாழ வேண்டும் என உத்வேகமூட்டிக் கொண்டிருப்பார்கள். ஆதர்ஸ மனிதர்கள் அவர்கள்.

நான் ரோஸாவின் அரசியல் சித்தாந்தப் பிரச்சினைகளின் சுருக்கமாகக் கொடுத்தவை முழுவதுமே Tony Cliff உடைய புத்தகத்தில் இருந்துதான் எடுத்துக் கொண்டவை அதன் காரணம் அப்புத்தகம் முழுக்கவும் அரசியல் செயல்பாடு என்பதற்கு அழுத்தம் கொடுத்து, உடனடிப் பிரசாரச் செயலுக்காக எழுதப்பட்டுள்ளது. ரோஸாவின் மையமான பங்களிப்புகள் என்று இன்றும் கருதப் படுபவைகள் பற்றி வரலாற்றுச் சூழலுடன், அதில் பங்கெடுத்த சித்தாந்திகளின் விவாதங்களுடன் தொகுத்துத்தர முயன்றிருக்கிறது. ரோஸாவின் தனிப்பட்ட வாழ்வுக்கான அழுத்தத்தை விடவும் ஒரு அரசியல்வாதி சித்தாந்தி என்பதற்கே இப்புத்தகம் அதிகம் அழுத்தம் தந்திருக்கிறது. இப்புத்தகத்திற்கான முன்னுரையில் Lindsey Germann இப்போதும் ஐரோப்பாவில் மாக்சிஸ்ட் கட்சிகளிடையே நிலவிவரும் சீர்திருத்தவாதம், அதன் எதிர்த் திசையில் ஸ்டாலினிசம் போன்றவற்றின் சூழலில் ரோஸாவின் ஜனநாயக மத்யத்துவம், சீர்திருத்தத்திற்கு எதிரான போராட்டம், யுத்த எதிர்ப்பு இயக்கத்தின் தேவை போன்றவற்றை வலியுறுத்துகிறார்.

1956 ஹங்கேரிய அனுபவம், 1968 பிரான்ஸ் அனுபவம், 1970 சிலியில் அனுபவம் போன்றவற்றின் பின்னணியில் ரோஸாவின் பொது வேலை நிறுத்தம் பற்றிய கோட்பாட்டின் அவசியத்தைச் சொல்லுகிறார்.

Lindsey Germann ரோஸா லக்ஸம்பர்க்கின் வரலாற்றுத் தவறாகக் காண்பது புரட்சிகர ஸ்தாபனத்தின் தேவையை அவர் குறைத்து மதிப்பிட்டார் என்பதுதான். ஜேர்மன் சோஷல் ஜனநாயகக் கட்சியை விமர்சித்தபோது தைரியமிக்க தனிமனுஷியாக நின்றுதான் விமர்சிக்கிறார். ரோஸாவின் Junious Phamphlet பற்றிய விமர்சனத்தில்கூட, லெனின் the picture of a loanman தான் இப்பிரசுரத்தில் தெரிகிறது என்கிறார் (ரோஸாதான் அதை எழுதினார் என்பது அப்போது லெனினுக்குத் தெரியாது).

ரோஸா தனக்கென ஒரு புரட்சிகரக் கட்சியைக் கொண்டிருப்பதற்கான காரணங்களாக Lindsea Germann இவைகளைக் காண்கிறார்.

. 1917க்கு முன்னால் லெனினால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் செயல்படுத்தப்பட முடியும் என எவரும் நினைத்திருக்கவில்லை. இந்த விசேஷமான ஸ்தாபனம் ரஸ்யாவின் பிரத்தியேகமான நிலைக்கு மட்டுமே உகந்த செயல்பாட்டு வடிவம் என அவர்கள் சொன்னார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

2. ரோஸா லக்ஸம்பர்க் ஐரோப்பாவின் மிகப்பெரும் கட்சியான ஜேர்மன் சோசல் ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவராயிருந்தார். அதைப் பிளவுபடுத்துவதென்பது பல்வேறு தரப்பினரைக் கலவரத்துக்கு இட்டுச் செல்வதாயிருந்தது.

மேலாக, ரோஸாவுக்கு அடிமட்டக் கட்சித் தொண்டர்களுக்குமான உறவு என்பது நிலைநாட்டப் படவில்லை. அறிவார்ந்த தளத்திலேயே தனது புரட்சிகரக் கோட்பாட்டுப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டியவராக ரோஸா இருந்தார். போல்ஷவிக்குகளோடு ஒப்பிடும் போது ரோஸா பங்குபெற்ற போலந்து கட்சியின் 1905ம் ஆண்டுப் பிரகாரங்களில் மிகுந்த அருவத் தன்மையே வெளிப்பட்டது.

திரைப்படத்தின் காட்சியமைப்புகள் ரோஸாவின் சிந்தனை சோகமான கை என்று தொடங்கி புரட்சிக்காரரின் ரத்தமும் சதையுமான வாழ்வு திரையில் தரப்படும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எனவுணர்ந்து ரோஸா பற்றின பெண் நிலைவாத மறு கட்டமைப்பும் உள்வாங்குதலும் ன்றைய தேவை என்ற நோக்கில் செல்கிறது.

ஸ்தூலமான வெளிப்பாட்டுத் தன்மை அதில் இல்லை என்கிறார் ரோஸாவின் வரலாற்றாசிரியர் ஜான் றெட்டல். ரோஸா லக்ஸம்பர்க்கின் தன்னெழுச்சிக் கோட்பாடு மட்டுமே தொழிலாளி வர்க்க அதிகாரத்தைக் கைப்பற்றப்போதுமானதாய் இருக்கவில்லை, புரட்சிகரக் கட்சியின் தேவையும் அங்கிருந்தது. அத்தகைய புரட்சிகரக் கட்சியின் இன்மை ரோஸாவினதும், லீப்னெக்ஸ்னதும் தனிமனித சோகமாக மட்டும் நின்றுவிடவில்லை. சொற்ப மாதங்களிலேயே எழுந்த ஜேர்மன் புரட்சியையும் அது தோல்வியில் மூழ்கடித்தது. 1918 – 19களில் தோற்றம் கொண்ட ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் புதிய நிலைமைக்கு முகங்கொடுக்கக் கூடிய முதிர்ச்சியையோ பலத்தையோ பெற்றிருக்கவில்லை.

புரட்சியாளரும் ரோஸாவின் காதலருமான லியோ ஜோகித்ஸ்கி இதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

ராயனின் புத்தகம் 350 பக்கங்கள் கொண்ட Paul Frolich இன் ஆங்கிலப் புத்தகத்தை 184 பக்கங்களில் சாரம் பிடித்துக் கொடுத்திருக்கிறது. இதற்கான அவரது உழைப்பை எண்ணால் பிரமிக்கவே முடிகிறது. பொருத்தமான இடங்களில் மேற்கோள்கள் உணர்ச்சிபூர்வமாகவும் அழகாகவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகமும் மத்யத்துவமும் பற்றிய எஸ்.வி.ராஜதுரையின் ஆழ்ந்த முன்னுரை ஒன்றும் இருக்கிறது

(அறிமுகம்). தவிர ராயனின் புத்தக முன்னுரை இருக்கிறது.

புத்தகம் ரோஸாவின் வாழ்வும் அரசியலும் நடவடிக்கையும் கலந்ததொரு வரலாற்றுச் சித்திரமாக, உணர்ச்சிபூர்வமான தமிழில் எழுதப் பட்டுள்ளது. டோனி கிளிப்பின் புத்தகம் ரோஸா பற்றின அரசியல் விவாதங்களின் தொகுப்பாக இருக்க பிராளிக்கினதும், ராயனதும் புத்தகம் ரோஸாவின்
அரசியல் வாழ்வுச் சித்திரமாக இருக்கிறது.
அரசியல் நிகழ்வுகளைச் சுற்றிய ரோஸா வாழ்வின் அனைது அம்சங்களையும் பிராளிக்கின் புத்தக அத்தியாயங்களில் இருந்து ஒன்றுவிடாமல் சுருக்கமாகக் கொடுத்திருக்கிறார். பிராளிக்கின் புத்தகத்தில் முழுமையாகத் தமிழில் கொடுத்திருக்க வேண்டிய அத்தியாயம் என்று

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் கருதுவது Like a candle burning at both ends எனும் பத்தாவது அத்தியாயம்.இந்த அத்தியாயத்தின் சிற்சில செய்திகளைப் புத்தகத்தின் பரவலான பக்கங்களில் கொடுத்திருக்கிறார் ராயன். பிராளிக்கின் புத்தகத்தில் காவியநயமான பகுதி என்று நான் இப்பகுதியைக் கருதுகிறேன்.

ரோஸா லக்ஸம்பேர்க்கின் குழந்தை மனம், பெண்ணாக அவருக்குள் உறைந்த அன்பு அவரது நண்பர்களுக்கும் அவருக்கும் இடையிலிருந்த தோழமை, அவரது கவியாளுமை, குழந்தைகளிடத்தில் அவருக்கிருந்த அன்பு, தாவரங்களில் அவருக்கிருந்த ஈடுபாடு,

கொரலன்கோ கவிதைகளில் நேசம், இயற்கையோடிருந்த பிணைப்பு, தனிமை, இலக்கிய ஆர்வம், எழுத்தாளுமை, அற்புதமான உரையாற்றல் எனச் சொல்லிக்கொண்டே போகிறது

இந்த அத்தியாயம் சே குவேராவின் வாழ்வில் அவனது அரசியல் செயல்கள் எழுத்துகளை விட

அதிமுக்கியமானது அர்த்தமுள்ளது அவரது பிரபஞ்ச அன்பும் மரணமுந்தான். ஆகவேதான்

எக்காலத்துக்குமான புரட்சிகர ஆதர்ச மனிதனாக அவன் இருக்கிறான். ரோஸாவிலும் அத்தகைய பிரபஞ்ச அன்பையும் மரணத்தின் மகத்துவத்துக்கான காரணங்களையும் விவரிக்கும் அத்தியாயம் அது. இந்த ஒரு பிரச்சனையைத் தவிர ராயனின் புத்தகத்திற்கும் பிளாரிக்கின் புத்தகத்திற்கும் பாரிய வேறுபாடு ஏதும் இல்லை. இது ராயனின் மிகப்பெரிய பங்களிப்பு என்பதில் சந்தேகமில்லை. பிராளிக்கின் புத்தகமல்ல டோனி கிளிப்பின் புத்தகமல்ல அவர் பற்றி வந்த பல்வேறு வாழ்க்கை வரலாறு

பற்றிய புத்தகங்களின் மீதும் ஒரு விமர்சனத்தை முன்வைக்கிறார் மாகரட் வான் ட்ரோட்டா.

அது: இப்புத்தகங்கள் எதுவுமே இரத்தமும் சதையுமாயுள்ள உணர்ச்சி பூர்வமான புரட்சிகரப் பெண்மணியாக ரோஸாவை முன்வைக்கவில்லை என்பதுதான்.

ரோஸா பற்றின 2,500க்கு மேற்பட்ட கடிதங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. நண்பர்களுக்கான கடிதங்கள், சகோதர சகோதரிகளுக்கான குழந்தைகளுக்கான கடிதங்கள், தோழர்களுக்கான கடிதங்கள், லியோ ஜோகித்சுக்கான காதற் கடிதங்கள் எனப் பல்வேறு பட்டவை அக் கடிதங்கள்.

ரோஸாவை ஜீவனுள்ள புரட்சிக்காரியாக பெண்ணாக மானுட அன்பில் ஊறிய ஜீவியாகக் கட்டமைத்த படைப்புதான் ட்ரோட்டாவின் ரோஸா பற்றின திரைப்படம்

ராயனின் புத்தகத்தின் முன்னுரையில் எஸ்.வி.ராஜதுரையிடம் நான் முக்கியமாகக் கண்டவை இரண்டு விடயங்கள்:

1மாக்ஸியத்தை மனித முகத்துடன் உருவாக்குவதற்கு சோசலிசத்தை மானுட நேயத்திற்கு உகந்ததாக உருவாக்குவதற்கான விமர்சன மரபு/ புரட்சிகர மரபு ரோஸாவின் மரபு அதன் அவசியம் எப்போதைக் காட்டிலும் இன்றைய சூழலில் முக்கியத்வம் பெறுகிறது.

2 'அவர் சிறையில் இருக்கும்போது எழுதியதான, ரஷயாவிலிருந்த யதார்த்த நிலைமைகளைச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் வெளியான ரஷயப் புரட்சி என்ற கட்டுரையில் போல்ஷவிக்குகள் பற்றியும் முன்வைத்த விமர்சனங்கள் தவறானவை
இக்கூற்றை முன்வைப்பதற்கான ஆளுமையும் படைப்பாற்றலும் படிப்பறிவும் எஸ்.வி.ஆருக்கு உண்டு.
ஆனால் இப் பிரசுரத்திற்கான ஆதாரங்களை சிறைக்குக் கடத்தி வரப்பட்ட ஜேர்மன் ரஷயப் பிரசுரங்களில் இருந்து பெற்றுக் கொண்டார் ரோஸா என்று தெரிவிக்கின்றது Tony Cliff/ புத்தகம் (R.L: p.62).
மேலும் ரோஸா முரண்படுகிற போல்ஷவிசம் தொடர்பான 4 பிரச்சனைகள் மீதும் அவரது அபிப்பிராயங்கள் தெளிவாக இருக்கிறது. மேலும் Tony Cliff வலியுறுத்துகிறபடி ரோஸாவின் விவாத நிலைப்பாடுகள் பெரும்பாலும் ஜேர்மனியில் நிலவிய திரிபுவாதத்திற்கு எதிரான அவரது நிலைப்பாட்டைப் பொதுப்படுத்தியதால் வந்த விளைவுகள் என்றே வாதிடுகிறார். மாக்சிய ஆசிரியர்களின் சரிதவறுகளை நாம் 'சரியாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் உருவானவையாக இருக்கும் எனக் கருதுவது வரலாற்று ரீதியில்
போதுமானதாக இருக்குமா என்றெனக்கு நிச்சயமில்லைமார்கரட் வான் ட்ரோட்டாவின் திரைப்படத்தின் நோக்கத்தை யொப்ப ரோஸாவை அரசியல்வாதியாக சித்தாந்தியாக மனுஷயாக வாஞ்சையுள்ள தாய்மையாக தனிமையில துன்புற்ற ஜீவியாக தனது எல்லா சொந்தத் துக்கங்களையும் தாண்டி முழு மானுட ஜீவியாக முன்வைக்க வேண்டிய தேவையினின்று எழுந்ததே என்மறுகட்டமைப்பு இரத்தமும் சதையும் கண்ணீரும் கோபமும் தோல்வியும் மரணமும் நிறைந்ததொரு நிஜவாழ்வைச் சொல்வதே எனது நோக்கம்.

அன்புடனும்தோழமையுடனும்,
யமுனாராஜேந்திரன்
08.05.95

லண்டன்.

பெண் பிரச்சனை

உடலை அழகாகவும் கட்டுக் குலையாமலும் வைத்திருப்பது அவசியம், எல்லோருக்கும். ஆனால் இதில் அதிக கவனம் எடுப்பவர்கள் பெண்கள்தான். இதனால் உடற் பருமனைக் குறைக்கப் புதிய முறைகள் அறிமுகமாகும் போதெல்லாம் அவை பெண்களைக் குறிவைத்தே விளம்பரம் செய்யப் படுகின்றன. அண்மையில் அமெரிக்காவில் நிகழ்ந்த ஆய்வு ஒன்றில் உடற் பருமனைக் குறைப்பதில் ஈடுபாடு காட்டுதல் வயதுக்கு வந்த பெண்களில் மட்டுமென்றிச் சிறுமிகளிடமும் காணப்பட்டது. பல பத்து வயதுச் சிறுமிகள் உடற் பருமனைக் குறைக்கவென்றே பட்டினி கிடப்பதும், அதனால் உடல், உள நோய்களுக்கு ஆளாவதும் அறியப் படுகிறது.

சிவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுகள்

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காகத் தனக்கு வாக்களிக்குமாறு கூறிப பதவிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான அரசு இன்றுவரை இனப்பிரச்சனைக்குத் தெளிவான தீர்வு எதனையும் காட்டாமலேயே காலத்தைக் கடத்தி வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்திலேயே, தம்மிடம் தீர்வு இருப்பதாகவும் அதனை அப்போதைய சூழ்நிலையில் வெளியிட முடியாது எனவும் கூறிவந்தவர் சுதந்திரக் கட்சியின் அப்போதைய தலைவி சிறிமாவோ அம்மையார். தமது ஆட்சி வந்த பின்னரும் முடி மறைத்து வைத்திருக்கும் அளவு, அவர்களது தீர்வுத் திட்டம் என்ன என்பதுதான் எவருக்கும் புரியவில்லை.

இனப்பிரச்சனை ஒன்றிருக்கிறது என்பதைத் தற்போதைய அரசு ஏற்றுக்கொண்டதே பெரிய விடயம் என்று பலர் கருத்துத் தெரிவித்தனர். ஆனால், பிரச்சனை இருப்பதை ஏற்றுக் கொண்டவர்கள், பிரச்சனைக்குரிய தீர்வு அவர்களிடம் இருப்பதாகவும் கூறிக்கொண்டவர்கள் ஏன் புதிதாகப் போரைத் தொடர்ந்து நடாத்த விரும்புகின்றனர் என்பது எவருக்கும் புரியாத புதிர். தாம் இராணுவ ரீதியில் தோல்வியைச் சந்திக்கும்போதும், தேர்தலின்போதும் மாத்திரம் பேச்சுவார்த்தை என்று நாடகம் ஆடுவதும் அதன்பின் தமிழ் மக்கள் மீது நியாயமற்ற போரைக் கட்டவிழ்த்து விடுவதும் முந்திய ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு மட்டுமல்ல. இந்த அரசுக்கும் வாடிக்கையாகவே உள்ளது. இந்த நடவடிக்கை மாத்திரமே இரு அரசுகளும் சிங்கள இனவாத அரசுகள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இலங்கையில் அனைத்து இன மக்களும் அமைதியையே விரும்புகின்றனர் என்பதை அண்மைக்காலத் தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. அமைதியானது நியாயமான முறையில் பெறப்பட்டதும், நிரந்தரமானதுமாக இருக்க வேண்டும். முக்கியமாக இதுவரைகாலம் இழப்புகளைச் சந்தித்த மக்கள் அந்த இழப்புகளுக்குரிய நியாயம் இது என உணரக்கூடியதாக இருக்கவேண்டும் அவ்வாறான ஒரு சமாதானத்தை நோக்கிய, இனப்பிரச்சனைத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டிய முதற்கடமை இப்போதைய அரசுக்கு உண்டு.

தீர்வுகளைத் தெளிவாக முன்வைக்காமல், வன்முறையை ஒழிக்கவோ, மனித உரிமை நிலைமைகளைச் சீர்செய்யவோ அரசால் இயலாது போகலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த அரசால் அமைதி திரும்பாது என்ற காரணத்தைக் காட்டி மக்கள் அரசை நிராகரிக்கக்கூடும். அதற்குரிய காலம் வெகுவிரைவில் வந்துவிடும்.

சுவடுகள் 66,
சித்திரை □95

Suvadugal, Herslebs gt 43, 0578 Oslo.
Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 66, April'95

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

○ து.வாமன், ஒஸ்லோ

எதிரிகளை உருவாக்குவோம



Arbeiderbladets tegning 21. april.

எப்போதும் பொதுவான விடயம் ஒன்றுண்டு. அது, சுயநல அரசியல்வாதிகளிடம் (கட்சிகள், அரசுகள்) அதிகமாகவே உண்டு. அதாவது இவர்கள் தமது சுயநலத் தேவையை முதன்மைப் படுத்தியே தமது அரசியல்க் கோரிக்கைகளை மக்களின் கோரிக்கை என்று சொல்லி முன்வைப்பர்.

அத்துடன், மக்கள் தமது சுயநல அரசியல் நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு விடுவார்கள் என்பது பற்றிய பயம் அவர்களிடம் அதிகமாகவே இருக்கும். இதற்காக தாம் தப்பிப் பிழைப்பதற்காகவும், மக்களைத் திசை திருப்பவும் ஒரு 'எதிரி'யைக் கண்டு பிடிப்பார்கள் அல்லது உருவாக்குவார்கள். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட எதிரியினாலேயே தமது முழுப் பிரச்சனைகளும் உருவாகின்றன என்று பிரச்சாரத்தில் கடுமையாக இறங்கி விடுவார்கள்.

இந்தக் கண்டுபிடிக்கப்பட்ட 'எதிரி'களைப் பொதுவாக இன்னொரு எதிர்நாடாகவோ அல்லது இன்னொரு இனத்தவராகவோ மதத்தவராகவோ உருவகிப்பார்கள். அது மக்களுக்கு அலுத்துப் போகும்போது, நியாயம் கேட்பவர்களையோ எதிர்க் கட்சிக் காரர்களையோ எதிரிகளாக உருவகிப்பார்கள். அதுவும் மக்களுக்கு அலுத்துப் போனவுடன் தமது சொந்தக் கட்சிகளுக்குள்ளேயே எதிரிகளைக் 'கண்டுபிடித்து'ப் பிரச்சனையைத் திசைதிருப்பலிலேயே ஈடுபடுவர்.

இந்த நிகழ்வு வரலாற்றில் பல்லாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. இது அமெரிக்கா முதல் இலங்கை, ஈழம் வரை பொருந்தக் கூடியது. சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் புரிய முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனி, இந்த வகையில் ஏனைய நாடுகளை (மூன்றாம் உலக நாடுகளை) சுரண்டிப் பிழைக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் மேற்கு நாடுகளும் கடந்த காலத்திலும் தற்போதும் இதே கொள்கையைத்தான் பின்பற்றுகின்றன.
கடந்த பல நூற்றாண்டுகளாக உலகின் முழுப் பிரச்சனைகளுக்கும் கொம்யூனிச நாடான சோவியத் யூனியனே காரணம் எனும் பொருள்படக் கடும் பிரச்சாரத்தில் அமெரிக்காவும், மேறகு நாடுகளும் ஈடுபட்டு வந்தன. இன்று சோவியத் யூனியன் உடைந்து சிறுசிறு நாடுகளாகவும், ரஷயாவாகவும் மாறித் தமது கதவுகளை மேற்குலக நாடுகட்கும் அமெரிக்காவுக்கும் சுரண்டலுக்காகத் திறந்து விட்டதுடன் (1992முதல்) இப்பிரசாரம் திடீரென்று நின்றது.
அதன் பின் இந்த நாடுகளுக்கு ஒரு புது எதிரியைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் இன்று 'இஸ்லாம்' 'இஸ்லாமியத் தீவிரவாதம்' 'உள்ள' நாடுகளைக் கண்டுபிடித்துத் தமது பிரச்சாரங்களைத் தீவிரமாக்கியுள்ளனர்.
இதில் இன்னொரு விடயம், இந்த நாடுகளும் மூன்றாம் உலக நாடுகள்தான். ஆனால் இவர்கள் அமெரிக்கா மேற்கு நாடுகளின் சுரண்டலுக்கு எதிராகத் தமது பிடியை வைத்திருக்க, சுயநல அரசியல்வாதிகளால் இத்தகைய அடிப்படைவாதக் கருத்துகளை முன்வைத்துத் தமது தேசியவாத நலன் அடிப்படையில் மேல்வர்க்க நலன்களை நிறைவு செய்கின்றன.
இதன் வெளிப்பாடாகக் கடந்த ஏப்ரல் மாதத்தில் அமெரிக்காவில் ஒகலஹாமா நகரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் பல குழந்தைகள் இறந்து போனார்கள். இது நடந்து சில நிமிடங்களிலேயே அமெரிக்கச் செய்தி நிறுவனங்கள், இஸ்லாமியத் தீவிரவாதிகளே இந்தக் குண்டுவெடிப்பைச் செய்தார்கள் எனும் பாணியில் செய்தி வெளியிட்டுப் பிரசாரம் செய்தன. அமெரிக்காவில் இருந்து புறப்பட்டு லண்டன் வந்திறங்கிய இஸ்லாமியத் தலைவரைப் பின்தொடர்ந்து அவரைக் கைது செய்வது வரை அடிக்கடி தொலைக்காட்சிகளில் சொல்லப்பட்டது. இத்தகு பிரச்சாரம் முதல் மூன்று தினங்களாக நிகழ்ந்தது.



இதன் பின்னர் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட ஒரு வெள்ளையர் கைதானார். பின்னர் நடைபெற்ற விசாரணையில் இவர்கள் தீவிர வெள்ளை வலதுசாரிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுபிடிக்கப் பட்டது. இவர்கள் உதிரிகளாக உள்ள அரைராணுவத்தினர். இவர்கள் அமைப்பாக இயங்குவதும் அறியப்பட்டது.
இது இவ்வாறிருக்க மேற்கு நாடுகளின் தொலைக்காட்சிகளும் பத்திரிகைகளும் இதே பாணியிலான பிரச்சாரத்தில் ஈடுபட்டன.
அவ்வாறு (அர்பைதபிளாத பத்திரிகையில்) வந்த ஒரு கருத்தோவியமே மேலே உள்ளது. இதை 'வர்க்கப் போர்' (க்ளஸ்ஸகம்பன **Klassekampen**) பத்திரிகை கடுமையாக விமர்சித்திருந்தது. இது பற்றி ஆக்கதாரர், தான் களைப்படைந்த நிலையில் வரைந்ததாகவும், பழைய சம்பவங்களின் அடிப்படையில் வரைந்ததாகவும் குறிப்பிட்டார்.
தமிழர்களது போராட்ட வரலாற்றில் கூட்டணி முதல் இயக்கங்கள்வரை ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் எதிரிகளாக ஒவ்வொருவரைக் கூறி வந்துள்ளனர். இதுபற்றி நாம் மிகக் கவனமாகவே ஆராய வேண்டும். இன்றைய எதிரி நாளை நண்பனாகும் சூழலில் நாம் மிக விழிப்பாகவே இருக்க வேண்டும். இதுபற்றிப் பல்வேறு திசைகளில் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏன் இவர்கள் 'இப்படிக' கூறுகிறார்கள் என்றதை அலசி ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டும். நாம் விழிப்பாக இருந்தாலொழியச், சுயநல அரசியல்வாதிகளிடம் இருந்து தப்ப முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களை அனுப்ப லோவ் இல்லை
கரணம் அடிக்கும் அறிவுஜீவிகள்

ஆயிரம் பூக்கள் மலரட்டும்

எங்களை அனுப்ப லோவ் இல்லை

அண்மையில் சில தினங்களாக நோர்வேயின் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் நோர்வேவாழ் தமிழர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. விவகாரம் என்னவெனில்: இலங்கையில் அமைதி ஏற்பட்டு விட்டதாகவும், நோர்வேவாழ் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் போவதாகவும் நோர்வே அரசு எடுத்த முடிவுதான் இந்தப் பரபரப்புக்குக் காரணம். நோர்வே அரசின் இந்த முடிவுக்குக் கண்டனம் தெரிவித்துப் பல அமைப்புகள், வெளிநாட்டவர்களுக்கு ஆதரவான நோர்வேஜிய அமைப்புகள் மற்றும் பத்திரிகைகள் தனிநபர்கள் என்றும் எதிர்ப்புக் குரல்கள் பல ஓங்கி ஒலிக்கின்றன. இந்த எதிர்ப்புக் குரல்களின் பக்கம் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இலங்கையில் அமைதி ஏற்பட்டுவிட்டதாக எதனை வைத்து நோர்வே அரசு முடிவெடுத்திருக்கிறதோ தெரியவில்லை. எமக்குத் தெரிந்தவரை இலங்கையில் மோதல் தவிர்ப்பு ஒன்றுதான் ஏற்பட்டிருக்கிறது. கேவலம், தமிழ்மக்கள் மீது திணித்த பொருளாதாரத் தடையைக் கூட முற்று முழுதாகத் தளர்த்த முடியாமல் இன்னமும் இழுத்தடிப்புச் செய்கிறது இலங்கை அரசு. நிலைமை இவ்வாறிருக்க இலங்கையில் அமைதி ஏற்பட்டு விட்டதாகப் பிரசாரம் செய்தபடி இங்குள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதாக எடுத்திருக்கும் நோர்வே அரசின் இந்த முடிவு ஒரு மனிதாபிமானமற்ற செயல்தான். கண்டிக்கப்பட வேண்டியதும்தான். ஆனால் நோர்வே அரசின் இந்த முடிவு ஏற்படுத்திய பரபரப்பு எம்மவர்கள் மத்தியில் இன்னமும் ஓய்ந்தபாடாகவில்லை. வீட்டிற்கு வீடு ரெலிபோன் கூவிக்கொண்டே இருக்கிறது. அமைதி, பேச்சுவார்த்தை, அது இது என்று எல்லாம் பேசி முடிந்து கடைசியாக நோர்வே அரசையும் திட்டித் தீர்த்துவிட்டுத் தாங்களாகவே முடிவெடுத்து விடுகின்றார்கள். "எங்களைத் திருப்பி அனுப்ப இவைக்கு லோவ் (சட்டம்) இல்லை" என்று. ஏனென்று கேட்டால் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பதில் உள்ளது.

"நாங்கள் வந்து இத்தினை வருசமாச்சு, எங்களுக்கு பூசெத்திங் தில்லாதெல்ஸ (நிரந்தர வதிவு அனுமதி) இருக்கு. எங்களை அனுப்ப முடியுமே?"

"எங்களுக்கு 'பாஸ்ற் யொப்' (நிரந்தர வேலை) எங்களை என்னெண்டு அனுப்புவினம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாங்கள் இங்க வீடு வாங்கி இருக்கிறம். வீட்ட விட்டிற்றுப் போகேலுமே?"
"எங்களுக்குப் பிறந்த குழந்தைகள் இருக்குதுகள். அதுகளுக்கு இங்க இருக்க உரிமை இருக்கு. அதுகளுக்குத் தமிழ் தெரியாது. அதுகள் நொஸ்கிலைதான் படிக்குதுகள். நொஸ்க் சாப்பாடுதான் சாப்பிடுதுகள். அதுகளுக்கு அங்க போக விருப்பமில்லை"
"எங்களுக்கும் அடுத்தடுத்த வருசத்தில சிற்றிசன் கிடைக்கப் போகுது. எங்களை என்னெண்டு அனுப்ப முடியும்? எங்களை அனுப்ப இவைக்கு லோவ் இல்லை" என்றெல்லாம் எம்மவர்களில் சிலர் முழங்கித் தள்ளுகிறார்கள். இது மட்டுமா...
"ஐயோ, நாங்கள் இவ்வளவு காலம் இஞ்ச சொகுசா இருந்து வாழ்ந்து பழகிற்றம் இனி அங்க போய் அந்த வெயிலுக்கை என்னெண்டு... சீச் ...சீ.." என்று இழுப்பவர்களும் உண்டு. இவர்களுக்கெல்லாம், நோர்வேயில் இருபதுக்கு மேற்பட்ட நிற, இனவாத அமைப்புகள் இருக்கிறது தெரியாது போல இருக்கு. இந்த இயக்கங்களில் ஒன்று துப்பாக்கிகளுடன் நடமாடுவதாகச் சுவடுகளில் வந்த செய்தி அறிஞ்சன். வெட்கத்தை விட்டிற்றுச் சொல்லுறன். அந்தச் செய்தி அறிந்ததிலிருந்து எனக்கு இரவிலை தனிய நடமாடுவதெண்டால் சாதுவானதொரு பயம். சரி இவைகளையெல்லாம்விடுவம் கடைசியாக எங்களை அனுப்ப லோவ் இல்லை என்று சொல்லுகிற எம்மவர்களிடம் ஒரு கேள்வி கேட்கத் தோணுது. அதாவது இலங்கையிலிருந்து நோர்வேக்கு வந்து அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில் மனிதாபிமான முறையில் நோர்வேயில் இருக்க அனுமதிக்கப்பட்ட எங்களைத் திருப்பி அனுப்ப லோவ் இல்லை என்றால், இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் காலங்காலமாக பூர்வீக குடிகளாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை சொந்த நிலங்களைவிட்டு, சொந்த வீடுவாசல்களை விட்டு நாயத்தியெட்டு மணித்தியாலத்திற்குள் அள்ளி அடைச்சு நாங்கள் அனுப்பி வைத்தோமே, அந்த லோவ் எந்தப் புத்தகத்தில் இருந்தது.......?
லோவ்: சட்டம்

ஈஸ்வர்,
23.02.95

கரணம் அடிக்கும் அறிவுஜீவிகள்

எழுபது எண்பதுகளில் துடிக்கும் போர்க் குணத்துடன் செயற்பட்ட தமிழ் அறிவுஜீகள் எல்லோரும் தொண்ணூறுகளில் குட்டிக்கறணம் போடும் குரங்குகளானதில் அதிர்ச்சி இன்னும் நீங்கவில்லை. எந்த அதிகாரத்தையும் பதவியையும் எதிர்த்து முழக்கம் இட்டார்களோ அதே அதிகாரமும் பதவியும் தங்களுக்கு வந்தபோது வாலைச் சுருட்டிக் கொண்டு அதிகாரத்தின் காலை நக்கத் தொடங்கி விட்டார்கள். இந்தப் போக்கு மொத்தத் தமிழ்த் தேசிய இனத்தையும் பாதிக்கும் என்பதால் விழிப்புணர்வுக்காகத் தமிழகத்தில் நிகழ்நத் சில நிகழச்சிகளைத் தொகுத்துத் தருகிறேன்.
எம்ஜிஆர் காலத்தில் நடத்தப்பட இருந்த ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் கண்டித்துத் தமிழ்ப்புத்திஜீவிகள், தமிழ்ச் சிறுபத்திரிகைகள் கூடி 'இலக்கு' என்ற அமைப்பை ஏற்படுத்தினர். 'இலக்கு' அமைப்பாக முக்கிய காரணமானவர் தமிழவன் என்கிற கார்லோஸ். இவர் படிகள் என்ற பத்திரிகையை நடத்திவந்த அமைப்பியல்வாதி. ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தொடர்ந்து கண்டித்தும், தமிழ்ப் புத்திஜீவிகளுக்கு அறைகூவல் விடுத்தும் வந்தது படிகள்.
இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வந்த ஈழத்துத் தமிழ்ப் பேறிஞர்களான கலாநிதிகள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரைப் பற்றி " நாய்கள் போல் தின்று, தின்றுவிட்டு அலைந்து கொண்டிருந்தனர்" என்று எழுதினார் தமிழவன். ஆனால் கலாநிதி சிவத்தம்பி அவர்களது கட்டுரை எம்ஜிஆரை விமர்சித்து எழுதப்பட்டது என்று காரணம் காட்டி அதைப் படிக்க விடவில்லை அதிமுக தமிழறிஞர்கள்! கலாநிதிகளைப் பற்றி சாக்கடை மொழியில் எழுதிய தமிழவனை அன்றே கே.எஸ்.சிவகுமாரன் கொழும்பில் இருந்து கடிதம் எழுதிக் கண்டித்திருந்தார்.

மாநாடு நடந்த நேரத்தில் 'இலக்கு' மூலம் பல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத் தமிழ் மாநாடும் சோற்றுப்பட்டாளமும்

உலகத்தமிழ் மாநாட்டுக்கான தடபுடல்கள் நடந்து கொண்டிருக்கின்றனவாம். அதே நேரத்தில் பல தமிழர்கள் போலீசாரால் அடித்துப் கொல்லப்படும் செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ் படித்து வேலையற்ற இளைஞர்கள் தங்களுக்கு வேலை தந்தபின் தமிழ் மாநாடு நடத்து என்று கோரிக்கைகள் எழுப்பியுள்ளனராம். 'இலக்கு' என்ற அமைப்பும் உலகத்தமிழ் மாநாடு மூலம் தமிழ் ஜனங்களை அரசு ஏமாற்றுவதை எதிர்க்கிறது. இவ்வளவு எதிர்ப்புக்கு இடையிலும் சில பேராசிரியப் பெருந்தகைகள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் தமிழகச்சுற்றுலாவுக்கும் ஏழை ஜனங்களின் வரிப்பணத்தில் போடப்படும் பிரியாணி சோற்றுக்கும் ஆசைப்பட்டு அம்மாநாட்டில் கலந்து கொள்வதாகத் தெரிகிறது. முக்கியமாய் நாம் முற்போக்குகள் என்று இதுவரை அவர்களின் நூல்களைக்கண்டு ஏமாந்த டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி போன்றோரும் கலந்து கொள்கிறார்கள் என்று செய்தி கிடைத்துள்ளது. (இவர்களின் ஆராய்ச்சி பற்றியல்ல நம் கவலை. எந்த இடத்தில் வந்து ஆராய்ச்சிக் கட்டுரை வாசிக்க வருகிறார்கள் என்பதே கேள்வி)

இது போன்ற வேறு பல பேராசிரியர்களும் பத்திரிகையாசிரியர்களும், எழுத்தாளர்களும், கூட இம்மாநாட்டுச் சோற்றுக்காய் ஆசைப்பட்டு பெண்டாட்டிகளையும் குழந்தைகளையும் ஓசிப்பணத்தில் மதுரை நோக்கி அழைத்துச் செல்லப் போகிறார்கள். இவர்கள் பண்ணப்போகும் ஆராய்ச்சியை நாங்கள் குறை சொல்லவில்லை. ஆராய்ச்சிகளின் அன்பர்களே நாங்களும் இந்த ஆராய்ச்சியுடன் நடக்கப் போகும் வாண வேடிக்கைகள், மந்திரிகளின் பேச்சு, ஜோடனை வண்டிகள், அரசியல் ஆதாயத்துக்காகச் செய்யப்படும் வேஷங்கள் இவைகளை எல்லாம் எதிர்க்கிறோம், தமிழகத்தின் மீது அக்கறைகொண்ட பேராசிரியர்களே இந்த ஏமாற்று அரசியல் வாதிகளின் பக்கமா நீங்களும் என்று கேட்கிறோம் தமிழ் ஜனங்களை நீங்களுமா ஏமாற்றுகிறீர்க என்று கேட்கிறோம். கணபதி ஸ்தபதி மது நகரில் தோரணவாயிலுக்கு வரைபடங்க தயாரிக்கிறாராம். கல்லுடியால் கட்டுகிறா களாம். இந்த அழிமதிக்கு நீங்களுமா து போவது? சென்னை, மதுரை, அண்ணாமல பல்கலைப் பேராசிரியர்களே, தமிழ் மக்க கூட்டத்திலிருந்து வந்தவர்கள்தான் நீங்களும் அம்மக்களை ஏமாற்றும் இந்த 'தமிழ் ஏமாற் வேலைக்கு' உதவாதீர்கள். துணை போகாதீ கள். தமிழ் மாநாட்டின் பேரில் செல செய்யப்படப் போகும் லட்சங்களை, வேலையில்லாதவர்களுக்குத் திட்டங்கள் போடுங்கள் ஏழைகளுக்குச் சோறு கொடுங்கள். பள்ள இல்லா ஊரில் பள்ளிகள் கட்டுங்கள் மின்சாரம் போகா ஊருக்கு மின்சார கொடுங்கள், சாலை இல்லா ஊரில் சால போடுங்கள். ஜனங்களை ஏமாற்றாதீர்கள் பாரிஸில் நடந்த கருத்தரங்கு போல் தமி கருத்தரங்கை தக்க ஆய்வாளர்களை மட்டு அழைத்துச் செய்யுங்கள். போதும். மந்திரி களுக்கோ, வட்டச்செயலாளர்களுக்கோ அங்கு வேலையில்லை. ஆய்வில் பழக்கமில்லா பயிற்சியில்லாதவர்கள், பேச்சுகள் அடிப்பத கும், மேடைகள் கட்டுவதற்கும், பொன்னா டைகள் போர்த்துவதற்கும் தக்க தருணமல் ஆய்வு அரங்குகள். இந்த விழாக் கோலங்கள் ஜனங்கள் மாரியம்மன் திருவிழாவில் கண்டு களிக்கட்டும். தமிழ் ஓர் மாரியம்மன் அல்ல

இனி உலகத்தமிழ் மாநாட்டு எதிர்ப்பு வடிவங்கள் மிக விரைவில் திட்டமிடப்பட வேண்டும். இலக்கு இதனை நோக்கிச் செயல்பட முனைந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. தமிழகக்கலாச்சாரத்தின் ஆரோக்கியமான தன்மைகள் மீது நம்பிக்கை உள்ள அத்தனை பேரும் இவ்வெதிர்ப்புக்குத்துணை புரிய வேண்டுமென்று படிகள் கேட்டுக்கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தரங்குகளை நடாத்திப் புரட்சியாளர் போல நடித்து வந்தார் தமிழவன். பிறகு பதவி உயர்வு பெற்றார். சாகித்ய அகாதமி குழுவிலும் இடம் பிடித்துக் கொண்டார். எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு வந்தது; எந்தவித சத்தமும் செய்யாமல் தன் குழுவினருடன் கலந்துகொண்டார். இந்த மாநாட்டிலும் பேராசிரியர் சிவத்தம்பி பங்கேற்க முடியாமல் மாநாடு முடிந்தது. பேராசிரியர் சிவத்தம்பி மாநாட்டில் பங்கேற்க முடியாமல் ஒரு குற்றவாளி போலத் திருப்பி அனுப்பப் பட்டதற்கு எந்தவித எதிர்ப்பும் காட்டாமல், அதிருப்தியும் தெரிவிக்காமல் தனது தலைமைத்துவத்தை அங்கு வெளிப்படுத்தினார் தமிழவன்.

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது தமிழவனை விட அதிகமாகக் குதித்தவர் தற்போது தலித் அறிஞராக வலம்வரும் ராஜ்கௌதமன். இவரும் இந்த ஜெயலலிதா மாநாட்டில் சத்தம் போடாமல் தனது தலித் கட்டுரையைப் படித்துவிட்டு இறங்கிவிட்டார்.

இதே ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில்தான் தாழ்த்தப் பட்டவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நிகழ்ந்தது.

உ.ம் 1: சிதம்பரத்தில் கணவன் முன்னிலையில் பத்மினிபொலிசாரால் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம்) இதுபற்றி முன்னாள் நடிகை ஜெயலலிதா சட்ட மன்றத்தில் பேசுகையில் 'பத்மினி முன்பே நடத்தை சரியில்லாதவர்' என்றார்.

உ.ம் 2: வாசாத்தியில் மலைவாழ்மக்கள் மீது தொகைப் பலாத்காரம் (/ஹைய/யூகுஙங ஈகுமஇ/உயப/) நிகழ்ந்தது.

இன்னும், வீரப்பனைத் தேடுகிறோம் என்று கூறிச் சின்னாம்பதியில் இருளர்கள் (பெண்கள் மீதும்) மீது தாக்குதல், அந்தியூர் விஜயா என்ற பெண் பலாத்காரம் முதலியன (இன்னும் உதாரணங்கள் உள்ளன).

இவையெல்லாம் நிகழும் நேரத்தில்தான் ஜெயலலிதாவின் மாநாட்டில் ராஜ்கௌதமன் 'தலித் இலக்கியம்' பற்றி அமைதியாகக் கட்டுரை வாசித்தார். இவருககு அடுத்தாகப் பேசுவதாக நிகழ்ச்சி நிரலில் இருந்த பெயர் நிறப்பிரிகை ரவிக்குமார். இவர் ஏனோ வரவில்லை. இவர் ஏன் ஒப்புதல் கொடுத்திருந்தார் என்பது ஆச்சரியம்.

'இண்டியா டுடே' எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு நடக்க முன்பு 93 - 94ம் ஆண்டுக்கான 'இண்டியா டுடே' இலக்கிய மலர் வெளியிட்டுத் தனது பிஜேபி புத்தியை அப்பட்டமாகக் காட்டிக் கொண்டது.

1993 மே மாதம் 30ம் திகதி புதுவையில் 'இண்டியா டுடே' இலக்கிய மலரை விமர்சித்து "இது அப்பட்டமான பார்ப்பனீய வெளிப்பாடாக உள்ளது. ஆகவே இந்த மலரைக் கிழித்து அடுத்த நாள் மலம் துடைக்கப் பயன்படுத்துவது என ஏகமானதாகத் தீர்மானிக்கப் பட்டது" என்பது நிறப்பிரிகை அறிக்கை.

1995ம் ஆண்டு இண்டியா டுடே இலக்கிய மலரைத் திறந்தால், யார் யார் மலம் துடைத்து அனுப்பியிருந்தார்களோ அவர்களே மலர் முழுக்க எழுதி இருந்தனர்.

1995ம் ஆண்டு இண்டியா டுடேயில் பார்ப்பனர்கள் எல்லாம் வெளியேறி விட்டார்களா? முழுப் பத்திரிகையிலும் தலித்துக்கள் பதவிகளிலும் படைப்புகளிலும் ஏறிக் கொண்டு விட்டார்களா என்ற கேள்வி எவருக்கும் எழலாம்.

'இண்டியா டுடே' ஒரு பிஜேபி பத்திரிகை என்பதும் பார்ப்பனர்களின் முழு ஆளுமையில்தான் வெளிவருகிறது என்பதும், ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட அங்கு வேலைக்கு இல்லை என்பதும் 'நிறப்பிரிகை'க் குழுவுக்குத் தெரியாதா? ஆளும் வர்க்கம் போடும் சில எச்சிற் துண்டுகளுக்கு ஏன் ஆலாய்ப் பறக்க வேண்டும்?

வாஸந்தி என்ன அப்பேர்ப்பட்ட இலக்கியவாதியா? வாஸந்தி எங்கே எப்படித் திருடினார் என்பதை அவ்வப்போது சாருநிவேதிதா, நாகார்ஜுனன், திலீப்குமார் போன்றோர் தொடர்ந்து இதழ்களில் எழுதி அம்பலப் படுத்தவில்லையா?

தமிழ்ப் புத்திஜீவிகளுக்குச் சமூக அக்கறை வேண்டும். இல்லையேல் பாரதி சொன்னது போல் "படிச்சவன் சூதும் வாதும் பண்ணினால் போவான் போவான் ஐயோன்னு போவான்" என்றுதான் சொல்ல வேண்டும்.

பரராஜசிங்கம்,
வந்தாறுமூலை,
இலங்கை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்ச்சங்கம் நடாத்திய பெண்களுக்கான விளையாட்டுப் போட்டி -1995.

25/6 மேற்பிரிவு பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் பங்கு பற்றிய கழகங்கள்:

1. தொய்யன் தமிழ் விளையாட்டுக் கழகம்.
2. தமிழ் விளையாட்டுக் கழகம்
3. ஸ்ரோவ்னர்/ஸைய/ தமிழ் விளையாட்டுக் கழகம்.
4. 11 Stras விளையாட்டுக் கழகம்

இவற்றில் முதலாவது இடத்தைப் பெற்றது ஸ்ரோவ்னர் விளையாட்டுக் கழகம்.

ஜூலை மாதம் 1ம் 2ம் திகதிகளில் மேற்பிரிவுக்கான பூப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. 1/7 அன்று காலை 10மணிக்கும், 2/7 அன்று காலை 12மணிக்கும் ஆரம்பிக்கப்பட்டன. இதில் பங்குபற்றிய குழுக்களாவன:

1. Stars விளையாட்டுக் கழகம்
2. தமிழ் விளையாட்டுக் கழகம்.
3. ஸ்ரோவ்னர் தமிழ் விளையாட்டுக் கழகம்.
4. தொய்யன் தமிழ் விளையாட்டுக் கழகம்.
5. 11 Stras விளையாட்டுக் கழகம். இவற்றில்

முதலாவது இடத்தைப் பெற்றது தமிழ் விளையாட்டுக் கழகம்.

குறிப்பு: கடந்த 3வருடங்களாக இவ் விளையாட்டுக் கழகமே வெற்றி பெற்று வந்துள்ளது. இத்துடன் கீழ்ப்பிரிவுக்கான பூப்பந்தாட்டப் போட்டியும் அன்றே அம்மைதானங்களில் நடைபெற்றன. இதில் பங்குபற்றிய குழுக்களாவன:

1. ஸ்ரோவ்னர் தமிழ் விளையாட்டுக் கழகம்.
2. தொய்யன் தமிழ் விளையாட்டுக் கழகம்.
3. 11 Stras

இதல முதலாவது இடத்தை தொய்யன் தமிழ் விளையாட்டுக் கழகம் தட்டிக் கொண்டது.

மே மாதம் All Star விளையாட்டுக் கழகம் நடாத்திய உதை பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றிய விளையாட்டுக் கழகங்களாவன:

1. வைத்துவெத் விளயாட்டுக் கழகம்.
2. All Stars விளையாட்டுக் கழகம்.
3. தொய்யன் விளையாட்டுக் கழகம்.
4. ஸ்ரோவ்னர் விளயாட்டுக் கழகம்.

இதில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது வைத்துவெத் விளையாட்டுக் கழகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூரத்துச் சொந்தம்

சாள்ஸ்
சுவீடன்



நேற்றிரவு முழுவதும் நான் எவ்வளவோ போராடியும் என்னை நெருங்க மறுத்திருந்த நித்திரை இன்று பகல் முழுவதும் என்னை ஆட்கொண்டிருந்தது. கட்டிலின் தலைமாட்டிலிருந்த சிறிய மேசையில் அரை ,கிளாஸ்" விஸ்கி மீதமாய் இருந்தது. நித்திரை வராமல் இருக்கவே நள்ளிரவுக்குப் பிறகு குடிக்க ஆரம்பித்தது "ஞாபகம் வந்தது; ஆனால் எப்போது கண்ணயர்ந்தேனென்பது புரியவில்லை.
நேரம் பிற்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. பகல் முழுவதும் வெறுமையாகக் கிடந்த வயிறு தனது அதிருப்தியைத் தெரிவித்தது. சோம்பல் முறித்தபடியே எழுந்து சாரளத்தினூடாக வெளியே கண்களை உலவவிட்டேன். திரைச்சீலையை விலக்கியதும் வெளியே காய்ந்து கொண்டிருந்த என் தாய்நாட்டு வெயிலின் உக்ஷணம் காற்றுப் பதனப்பட்டிருந்த அறையினுள்ளிருந்த இதமான குளிரையும் மீறிப் பளீரென்று தாக்கி, இருபது வருடங்களாகப் பிரிந்திருந்த என் மீதுள்ள தனது கோபத்தைக் காட்டியது. இங்கு பிறந்து வளர்ந்திருந்தாலும் இந் நீண்ட காலத்தின் பின் இலங்கையின் கோடை வெயிலைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்ற சந்தேகம் எனக்கு ஏற்கனவே இருந்தது. இலங்கை வெயிலின் வெக்கை மட்டுமல்லாமல், மண்வாசனையும் கூட எனக்கு அந்நியமாகி விட்டிருப்பது நேற்றுப்பகல் விமானத்துள்ளிருந்து வெளியே இறங்கிய போதே புரிந்தது. அதுமட்டுமல்ல, விமான நிலையத்திருந்து தங்கியிருக்கும் இந்த ஹோட்டலுக்கு வரும் வரை கடந்து வந்த இராணுவத் தடைகள், அங்கு கண்ணுக்குத் தெரியாத எதிரியை எதிர்நோக்கி நிற்கும் இளம் இராணுவ வீரர்கள்_ ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தாலும், நேராகத் தரிசிக்கும்பொழுது அதிர்ச்சியை உண்டாக்கின. எனது முகத்தின் பாவங்களிலிருந்து எனது உணர்வுகளைக் கூட வந்த எனது தங்கை சுஜா புரிந்து கொண்டிருப்பாளோ என்று இப்போது நினைத்துக் கொண்டேன். இப்போது கூடத் தூரத்தில் மோட்டார் வீதியில் தமது இராணுவக் கவச வாகனத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு அவ்வழியே நகரும் வாகனங்கள் சிலவற்றைச் சோதனை இட்டுக் கொண்டிருக்கும் காட்சியைக் காணமுடிகிறது.
அதைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் இவையெதிலும் பங்கெடுக்காமல் சுறுசுறுப்புடன் தெரியும் காலிமுகக் கடற்கரையின் ரம்யமான இயற்கையழகு உள்ளத்திற்குப் புத்துணர்ச்சியை ஊட்டுகிறது.
கரையை நோக்கி நுரைச் சிரிப்புடன் ஓடி வந்து, கும்மாளம் இடும் சிறார்களுடன் விளையாடும் அலைத் தோழன், முழங்கால்கள் வரை தமது நீளக் காற்சட்டைகளை மடித்துக் கொண்டு குழந்தைகளுடன் விளையாடும் பெரியவர்கள், ஆங்காங்கே சோடிகளாகவும் குழுக்களாகவும் மணற்பரப்பில் அளவளாவிக் கொண்டிருப்போர், இவர்களைச் சுற்றித் திரிந்து பரபரப்பாகத் தமது கடற்கரை வியாபாரத்தில் கவனத்துடனிருக்கும் சிற்றுண்டி வியாபாரிகளென்று எல்லோருமே கவலையற்ற மனிதர்களாகத் தெரிகிறார்கள். லோகாய்தவாதிகளாக சகல வசதிகளுடன் வாழ்ந்தாலும் பக்கத்து வீட்டில் வசிப்பவனுடன்கூட அந்நியத் தனத்துடன் பழகி முகத்திலே உணர்வின்றி உலவும் சுவீடன் மக்களுடன் இவர்களை ஒப்பட்டுப் பார்க்கிறேன்.
எனது இளமைப பருவத்தில் பாடசாலை விடுமுறைகளில் அப்பாவுடன் கொழும்புக்கு வரும்போது தவறாமல் இக்கடற்கரைக்கு வருவதுண்டு. கொழும்பில் வசித்துவந்த மாமி வாங்கித்தரும் "ஐஸ்கிறீமை"ச் சுவைத்தபடி சப்பாத்துகளைக் கழற்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்துவிட்டு தண்ணீரில் விளையாடிக் கழித்த அந்த நாட்கள் ஞாபகத்துக்கு வந்து ஏங்க வைக்கின்றன.

"தான் வெறுங்காலுடன் ஓடித்திரிந்து பழகிய மண்ணில்தான் ஒரு மனிதனால் மனத்திருப்தியை உணர்ந்துகொள்ள முடியும்" என்ற சுவீடிஷ் எழுத்தாளர் வில்லியம் மூபெரியின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. இந்த ஏக்கம்தான் என்னுடன் இம் மண்ணுக்கு உள்ள தொடர்புக்கு அடையாளமாக இருக்க வேண்டும்.

சோகையாக ஒலித்தது தொலைபேசி மணி. மறுமுனையில் பேசியவள் எனது மகள் மரியா.

'உங்களோடு தொடர்புகொள்ள இத்தோடு எத்தனையாவது தடவை முயற்சி செய்கிறேன் தெரியுமா?' அவளது இறுக்கமான குரலில் செல்லக் கோபம் தெரிந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் 14வயதைப் பூர்த்தி செய்த, இன்னும் குழந்தைத்தனம் மாறாத "அப்பாவின் செல்லம்" அவள்.

'நான் பகல் முழுக்க நன்றாகத் தூங்கிவிட்டேன். தொலைபேசி மணி அடித்ததே தெரியாது எனக்கு'

'பாட்டியைச் சந்தித்துவிட்டீர்களா? நான் தந்தனுப்பிய சட்டையைக் கொடுத்தீர்களா...... என்ன சொன்னாள்?.... என்னைப் பற்றி விசாரித்தாளா?

நான் எதிர்பார்த்ததைப் போலவே எனது அம்மாவைப் பற்றி ஆவலுடன் கேள்விகளை அடுக்கினாள்.

'பொறு... பொறு... நான் நாளைக்குத்தான் அவளைச் சந்திக்கப் போகிறேன்'

'சோம்பேறித்தனம்! பகல் முழுக்கத் தூங்காமல் அவளைப் போய்ப் பார்த்திருக்கலாம் அல்லவா?'

அவளது ஆர்வத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. என்னோடு கூடவே இங்கே வரவேண்டும் என்று அடம் பிடித்தவளைப் பலவிதமான சமாதானங்களைச் சொல்லி நான் நிறுத்திவைக்க வேண்டியிருந்தது.

அவளது அம்மா சுவீடன் நாட்டவள். குழந்தைப் பருவத்தில் எனது மடியில் இருந்து எனது நாட்டைப் பற்றியும் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் கதைகளாகக் கேட்டறிந்து கொண்டதிலிருந்து என்றாவது இங்கே வந்து நேரடியாகப் பார்க்க வேண்டுமென்ற ஆசையை வளர்த்துக் கொண்டவள் எனது மகள்.

நிழற்பட உருவங்களாக மட்டுமே எனது குடும்பத்தினரைக் கண்டிருக்கும் அவளுக்குச் சமீபகாலமாக அவர்களையெல்லாம் முக்கியமாக எனது பெற்றோரைச் சந்திக்க வேண்டுமென்ற ஆர்வம் பெரிதாக வளர்ந்துவிட்டிருந்தது. அந்த ஆர்வத்தை வளர்த்துவிட்ட நானோ அது சாத்தியந்தானா என்று என்னுள் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அப்பாவின் பிடிவாதமும், அவருக்கு என்மீதிருக்கும் கோபமும் கடந்துபோய்விட்டிருக்கும் வருடங்களால் மாற்றப்பட்டிருக்குமா? எனது அம்மாவிடம் என்ன மாற்றம் உண்டாகியிருக்கும்?

மரியாவுடன் கதைத்தபின் பரிமாறும் பகுதியுடன் தொடர்பு கொண்டு எனது அறைக்குத் தேநீர் கொண்டு வரும்படி பணித்துவிட்டுக் குளியலறைக்குள் நுழைந்தேன்.

சுஜா, தனது அலுவலக நேரம் முடிந்ததும் இங்கு வருவதாகச் சொல்லியிருந்தாள். அவள் வருவதற்குள் குளியலை முடித்துக்கொண்டு தயாராக இருந்ததால், இருவருமாக வெளியே சென்று எங்காவது சாப்பிடலாம் எனத் திட்டமிட்டேன். கொழும்பு நகரின் சாதாரண உணவுகளைச் சாப்பிட வேண்டுமென எழுந்த ஆர்வம் பசியை அடக்கிக் கொள்ள உதவியது.

எனது அண்ணன் சுகுமார், ஏற்கனவே குறிப்பிட்டபடி தன்னால் விமான நிலையத்திற்கு வர முடியவில்லை என்ன செய்தியுடன் கடைசித் தங்கை சுஜாவை நேற்று விமான நிலையத்திற்கு அனுப்பியிருந்தான். இரண்டு நாட்களுக்கு முன்பு என்னோடு தொலைபேசியில் கதைக்கும்போதுகூட என்னைக் கொழும்பிலுள்ள தனது வீட்டில் தங்களுடன் தங்கும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட அவன், சுஜா மூலம் தனது வீட்டில் தங்குவது எனக்கு வசதிக் குறைவாக இருக்கக் கூடுமென்று நினைப்பதால் ஹோட்டலொன்றில் தங்கிக் கொள்ளும்படி சொல்லி அனுப்பியிருந்தான்.

எனது பெற்றோர், இராணுவத்தினால் யாழ்ப்பாணப் பகுதிகளில் நடத்தப்படும் தாக்குதல்களுக்குப் பயந்து கடந்த சில வருடங்களாக சுகுமாரின் குடும்பத்தினருடன்தான் தங்கியிருக்கிறார்கள். அதைச் சுட்டிக்காட்டி நானும் அங்கே தங்கி அவர்களுக்கு இடையூறாக இருக்க விரும்பவில்லையென்று பலமுறை மறுத்ததையும் மீறித் தங்களுடன் தங்கக் கட்டாயப் படுத்தியவன் கடைசி நேரத்தில் திட்டத்தை மாற்றிக் கொண்டது எனது மனதை உறுத்தியது. அவர்களது இஷ்டப்படி நடக்க மறுத்த எனது உறவு தேவையில்லையென்று என்னை ஒதுக்கிவிட்ட அவர்களுடன் சமீப காலத்தில் புதுப்பித்துக் கொண்ட உறவில் இதற்கு மேலும் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்று என்னை நானே சமாதானம் செய்துகொண்டேன்.

சுவீடனில் பல்கலைக்கழகமொன்றில் படித்துக் கொண்டிருந்த நான் கதரீனாவைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதைத் தெரிவித்துப் பெற்றோரின் சம்மதத்தைக் கேட்டு எழுதியவுடன் ஆரம்பித்தது பிளவு. எனது செயலைத் தான்தோன்றித்தனம் என்று விமர்சித்துப் படுமோசமாகத் திட்டி எழுதினார் அப்பா. என்மீது உண்டாகியிருக்கும் ஆத்திரமும் கோபமும் நான் நேரடியாகச் சென்று எனது நிலைப்பாட்டை விளங்க வைப்பதன் மூலம் தணிய வைத்துவிட முடியும் என்று கணக்கிட்டேன். ஆனால், அடுத்த விடுமுறைக்குச் சொந்த ஊருக்குச் சென்றிருந்தபோது என்னை எதிர்பார்த்திருந்த நிலைமையோ வேறொன்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்காக "நல்ல சாதி"யில் கொழுத்த சீதனத்துடன் பெண்பார்த்து முடிவும் செய்துகொண்டு காத்திருந்தார்கள். நிர்த்தாட்சண்யமாக மறுத்த என்னைத், தன்னைவிட வயதில் குறைந்தவனாக இருந்தாலும் உயரத்தில் குறைந்தவனல்ல என்ற எண்ணமேயில்லாமல் பலாத்காரத்தின் மூலமாகவாவது பணியவைக்க முயன்றான் அண்ணன். தங்களது கௌரவத்திற்காகவாவது என்னை மனதை மாற்றிக் கொள்ளும்படி கடைசி முயற்சியாகக் கேட்டுக் கொண்டா அம்மா. ஆனால் அவர்களது முயற்சியொன்றுமே பலிக்கவில்லை.

'இந்த வீட்டுப் படியை இனி மிதிக்காதே!' என்ற அப்பாவின் சீற்றம், 'நீ செத்துப் போனதாக நினைத்துக் கொள்வேன்!' என்ற அம்மாவின் ஆசீர்வாதம் கோபம் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு சுவீடனுக்குத் திரும்பிச் சென்று எனது படிப்பைத் தொடர்ந்தேன்.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு வீட்டிலிருந்த எவருமே எனது கடிதங்களுக்குப் பதிலெழுத மறுத்தாலும், நான் அவர்களுககு அடிக்கடி எழுதுவதை நிறுத்தவில்லை. என்றாவது அவர்களது மனம் மாறும் என்று காத்திருந்தேன்.

எனது உயர்கல்வியை முடித்துக் கொண்டதும் சுவீடனில் வியாபார நிலையமொன்றில் கிடைத்த உயர்பதவியை ஏற்றுக் கொண்டேன். அதைத் தொடர்ந்து திருமணமும் செய்துகொண்டேன். அதன்பிறகு எனக்கும் பிறந்த நாட்டுக்கும் இருந்த தொடர்பு நான் தவறாமல் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எழுதும் கடிதங்கள்தான். எமது திருமணத்தின் பின் ஒரு வருடத்திலே எனக்கு மகள் பிறந்திருப்பதை அறிவித்தபோதுங்கூட எனது பெற்றோரிடம் இருந்து எவ்வித பிரதிபலிப்பும் இருக்கவில்லை.

* * * * * * *

ஹோட்டலின் வரவேற்பறைக்குள் பிரவேசித்த நான் ஒரு தேநீரை வரவழைத்து உறிஞ்சியபடி சுஜாவின் வருகைக்காகக் காத்திருந்தேன். வெளியே வெம்மையைத் தாங்கிக்கொள்வதற்காக நான் மெல்லிய உடைகளையே அணிந்திருந்ததனால் அங்கே பரவியிருந்த குளிர்பதனப் படுத்தப்பட்டிருந்த காற்று என்னை லேசாக நடுங்கவைக்கப் போதுமானதாக இருந்தது.

மேற்கத்தைய இசை அங்கே காற்றில் இரகசியமாகக் கலந்திருந்தது. உள்ளூரின் பிற்பகல் உல்லாசிகளும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுமாக பலவித உடையணிந்த கதம்பக் கூட்டமொன்றை அங்கே காணக் கூடியதாயிருந்தது.

என்னை யாரோ தொலைபேசியில் கூப்பிடுவதாகப் பணியாளன் ஒருவன் வந்து தெரிவித்தான்.

மறுமுனையில் இருந்தவள் சுஜா!

'அண்ணா!.... இண்டைக்கு நான் இங்கை "ஒவர்டைம்" செய்ய வேண்டியதாப் போச்சு......'

'வர லேட்டாகுமே?'

'நிறைய வேலையிருக்கு..... கட்டாயம் முடிக்க வேணுமெண்ட படியால் வர ஏலுமெண்டு நினைக்கேல்லை. வேலை முடிய இன்னும் ரெண்டு மணித்தியாலத்துக்கு மேலை செல்லும்.... இங்கத்தைய நிலைமையைப் பற்றி நேற்றுச் சொன்னனான்தானே. தமிழர் வெளிய இறங்கிறதே ஆபத்தான விசயம்.... எவனெண்டாலும் வந்து "சி.ஐ.டி" எண்டு சொல்லி "ஐடென்ரிக் காட்" கேட்டு வெருட்டுவாங்கள்... அதிலையும் எவனாவது பொலிஸ் ஏதாவது சொல்லிப் பிடிச்சு "உள்ள வச்சால் வெளிய வாறது சந்தேகம்... அதிருக்கட்டும் நீங்கள் பகல் ஒரிடமும் பேகேல்லையே?'

'இல்லை, இனிமேத்தான் வெளிய போய் எங்காவது சாப்பிட்டுட்டு வரலாமெண்டு நினைச்சனான்... நீயும் வர்றதாயிருந்தால் நல்லது...'

'இரவாப் போச்சு; வெளிய திரியாம அங்கயே சாப்பிடுங்கோ. நான் நாளையிண்டைக்குக் கட்டாயம் வருவன்'

'ஏன்? நீ அண்ணையிட்டை நாளைக்கு வரமாட்டியே?'

'இல்லை'

'மாட்டியோ! என்ன விக்ஷயம்...?'

மறுபக்கத்தில் ஒரு சிறு தயக்கமான மௌனம் தெரிந்தது.

'நீங்கள் நாளைக்கு அங்கை போகேக்கை தெரியவரும்' புதிர் போல இலேசான சிரிப்புடன் சொன்னாள். நான் மேலும் அதைப் பற்றிக் கேட்பதைத் தவிர்க்கக் காரணமிருந்தது.

"அவள் தன்ரை இஷ்டப்படி திரியிறாள். ஒருத்தர் சொல்லிறதையும் கேக்கிறேல்லை!" என்று குற்றஞ் சாட்டும் தொனியில் நிர்மலா; கனடாவில் அண்மையில் குடியேறியிருக்கும் எனது இன்னொரு தங்கை_ சுஜாவுக்கு மூத்தவள்_ என்னோடு சில வாரங்களுக்கு முன்பு கதைத்தபோது குறிபபிட்டது இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

என்னைத் தவிர்த்தாலும், எனது குடும்பத்தினருக்குத் தங்களுக்குள் அந்நியோன்னியமும், பாசமும் மிகையாகவே இருக்கும் என நினைத்திருந்த எனக்கு நிர்மலாவுடன் தொலைபேசியில் கதைத்த சந்தர்ப்பங்களில் பின்பு அதைப்பற்றிச் சந்தேகம் எழ ஆரம்பித்திருந்தது.

"அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எண்டு நீங்கள் அனுப்பிற காசில அண்ணன் தன்ரை குடும்பத்துக்குச் சொகுசு தேடிக் கொண்டிருக்கிறான்..... என்ரை கலியாணத்துக்குச் சீதனமெண்டு உன்னட்டை வாங்கின காசில முழுக்கத் தரேல்லை...." என்று அவளது குற்றப் பட்டியல் நீளமாகி எனக்கு எரிச்சலை உண்டாக்கியது. எல்லாவற்றிலும் முக்கிய விடயமாக இருந்தது பணம்! பாசம், சொந்தம், பந்தம் எல்லாம் இவர்கள் தங்கள் சுயநலத்தை மறைப்பதற்காகப் போட்டுக் கொண்டிருக்கும் முகமூடிகளா?

சுஜா குறிப்பிட்டதைப் பற்றிப் பொருட்படுத்தாமல் காலாற வெளியே நடந்துவிட்டும், உணவுச்சாலையொன்றில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாப்பிட்டுவிட்டும் வர முடிவு செய்துகொண்டேன். வரவேற்புப் பகுதியில் பணிபுரியும் ஒருவரை அணுகி சமீபத்திலுள்ள உணவுச்சாலை எங்கே என்பது போன்ற விவரங்களை விசாரித்தேன்.

'இந்த நேரத்தில் நகருக்குப் புதியவரான நீங்கள் வெளியே செல்வது நல்லதல்ல என்று நினைக்கிறேன்'

தனது பெயரைச் சொல்லி அறிமுகப் படுத்திக்கொண்ட அவர் என்னை ஒருதடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டுத் தனது கருத்தைத் தெரிவித்த போது நான் உடனடியாக எதுவும் பதிலளிக்காமல் நின்றேன்.

'என்ன, ஒரு சிங்களவர் இப்படிச் சொல்கிறேன் என்று நினைக்கிறீர்களா?' எனக்குள் ஓடிய எண்ணத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு சொன்னவரை மறுத்துப் பேசமுதல் அவரே தொடர்ந்தார்.

'நீங்கள் இப்போது இந்த நாட்டுக் குடிமகன் இல்லாவிட்டாலும் உருவத்தில் தமிழன். இங்குள்ள நிலைமை உங்களுக்குப் புரிந்திருக்கும். இந்தச் சூழ்நிலைக்குப் பழக்கமில்லாதவர்கள் இலகுவாக ஏதாவது பிரச்சனையில் மாட்டிக்கொள்ளச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஒரு சிங்களவன் இப்படிச் சொல்வதையிட்டு நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ தெரியாது, நான் தமிழ் அரசியல்வாதிகள்; அல்லது தமிழ்த் தீவிரவாதிகள் செய்வதையெல்லாம் சரியென்று நினைக்காவிடினும், இந்த நிலைக்கு அவர்கள் தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்று விளங்கிக் கொண்டிருக்கிறேன்.... என்னைப் போல சாதாரண மக்கள் பலருக்கும் இது புரியும். எனவே இந்த நாட்டில் நடக்கும் பயங்கரவாத ஆட்சிக்கு இங்குள்ள சிங்களவன் எல்லாருமே ஆதரவாளன் என்று நினைத்துவிட வேண்டாம்'

ஏறக்குறைய ஒரு பிரசங்கமே செய்து முடித்தார் அவர். அவரது கூற்றிலிருந்த உண்மைகளை யோசித்தபடியே நின்றேன் நான்.

• • • • • • •

மறுநாள் நான் சுகுமாருடன் வாடகைக் காரில் அவர்களது வீட்டுக்குச் சென்று இறங்கியபோது வாசலிலேயே அவனது இளைய பிள்ளைகள் இருவரும் எங்களது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

நான் வீட்டுக்குள் நுழைந்ததுமே என்னை நெருங்கிவந்து எனது கையை ஆர்வத்துடன் பற்றிக் கூட்டிச் சென்றாள் அம்மா. அவளது வயது, தனது வல்லமையை அவளது தோற்றத்தில் காட்டிக் கொண்டிருந்தது. நான் கடைசியாகச் சந்தித்த அம்மாவை இப்போது மனதுக்குள் கொண்டுவந்து ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டேன்.

'நீ சரியா வயக்கெட்டுப் போனாயடா சிவா!'

'பாரம்மா, முன்மண்டையில ஒரு மயிருமில்லாமல் கொட்டுப்பட்டுப் போச்சு!' சிரித்துக் கொண்டே என்னைப் பார்த்துச் சொன்னான் சுகுமார்.

அவனது பரந்த நெற்றியில் நடுத்தர வயதினருக்கே உரித்தான கோடுகள் அளவுக்கதிகமாகத் தெரிந்தன. மீதியிருந்த தலைமுடியின் பெரும்பகுதி நரைத்துப் போயிருந்ததை மறைக்கக் கருமை பூசியிருந்தான்.

வரும்வழியில் நாமிருவரும் அதிகம் பேசிக் கொண்டிருக்கவில்லை. அண்ணன்தான் தனது வியாபாரத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லிக் கொண்டிருந்தான். சகஜமாகக் கதைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு எனது வாயிலிருந்து தமிழ் வராததை உணர்ந்து கொள்ள ஆரம்பித்தேன். முக்கியமாக மரியாதையை உணர்த்தும் வார்த்தைகளான "நீங்கள்", "அவர்" போன்றவை எனக்கு அந்நியமாகிப் போய்விட்டிருந்ததால் மற்றவர்களுடன் அளவளாவும்போது அதைப்பற்றி யோசித்தே கதைக்க வேண்டியிருந்தது.

என்னைத் தன்னருகில் இருத்திக் கொண்ட அம்மா எனது மகளைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள். எமக்கு முன்பாக தேநீரையும், பிஸ்கட்டுகளையும் கொண்டுவந்து வைத்துப் பரிமாறிவிட்டு, அண்ணியும் எதிரே இன்னொரு கதிரையில் அமர்ந்து கொண்டாள். நான் புகைப்படத்தில் பார்த்ததை விடவும் குள்ளமாகவும், குண்டாகவும் இருந்தாள் அவள்.

பையனுக்கும், பெண்ணுக்கும் பத்து வயதுக்கு அருகிலிருக்கும். அவர்கள், தங்களுக்காக நான் கொண்டுவந்திருந்த விளையாட்டுப் பொருட்களையும் உடைகளையும் எல்லோருக்கும் காட்டிச் சந்தோஷித்துக் கொண்டிருந்தார்கள்.

வெளியே, எங்கேயோ சென்றிருந்த எனது தந்தையும், அண்ணனின் மூத்த மகன் ரமணனும் விரைவிலேயே வந்து சேர்ந்தார்கள்.

'ம்.... வந்திட்டியோ!' என்று புன்சிரிப்புடன் நலம் விசாரித்துவிட்டுத் தனது அறைக்குள் நுழைந்தார் அப்பா. அம்மாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவரது உருவத்தில் அத்தனை வித்தியாசம் இல்லை.

எனது மகளைவிட இரண்டொரு வயதுகள் அதிகமிருக்கும் ரமணனுக்கு, நீளக் காற்சட்டை அணிய அவன் சமீபத்தில்தான் ஆரம்பித்திருக்க வேண்டும் என்று தோன்றியது. வாலிபத்தை அவன் நெருங்கிக் கொண்டிருப்பதை முகப்பருக்களும் "ஆட்டுத்தாடி"யும் காட்டிக் கொடுத்தன.

தலைக்கு மேல் காற்றாடி வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்தாலும் வீட்டினுள் அளவுக்கதிகமான வெம்மையை உணர முடிந்தது. பல வீடுகள் மிக நெருக்கமாக அமைந்திருந்த அப்பிரதேசத்தில் வெளிக்காற்று சகஜமாக வீட்டுக்குள் பரவ வழியில்லாததே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

மூன்று அறைகளைக் கொண்ட அவ்வீட்டின் உள்ளலங்காரங்கள் சுகுமார் ஓரளவு வசதியுடன்தான் வாழ்கிறான் என்பதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்ந்துகொள்ளப் போதுமானதாக இருந்தது. அறைகளில் ஒன்று வீட்டின் வெளிப் பக்கமான பிரத்தியேகமாக ஒரு வாசலைக் கொண்டிருப்பதாகவும் அதை, இளம் பெண்கள் இருவருக்கு வாடகைக்கு விட்டிருப்பதாகவும் சொல்லத் தெரிந்து கொண்டேன். வரவேற்பறை இரண்டாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அதில் ஒரு பகுதியை அறையாக்கி அப்பாவும், அம்மாவும் பாவித்துக் கொண்டிருந்தார்கள்.

தனது கூடப் பிறந்தவர்களின் பரிசுப் பொருட்களைக் கவனித்த ரமணன், தனது தந்தையிடம் மெதுவாக ஏதோ கேட்கவே, சிரித்தபடி என்னிடம் சைகை காட்டினான் சுகுமார். கேள்விக் குறியுடன் நோக்கினேன் நான்.

'சித்தப்பா தான் கேட்ட "சிடி" போடுற "வோக்மன்" வாங்கிக்கொண்டு வரேல்லையோ எண்டு கேக்கிறான்'

'நான் மறக்கேல்லை...... உன்னட்டை "டொலர்" தாறன். விருப்பமான "மொடல்" பாத்து நீயே வாங்கிக்கொள்'

அவன் சந்தோஷமாகத் தலையை ஆட்டினான்.

'அவர் போக முதல் காசை மறக்காமல் கேட்டு வாங்கு. பிறகு மறந்துபோட்டு எனக்குக் கரைச்சல் தராதை!'

நான் அங்கிருந்த குறுகிய நேர இடைவெளியிலேயே இளையவர்கள் இருவரும் என்னுடன் சகஜமாகப் பேசிப் பழக ஆரம்பித்து விட்டார்கள்.

சாப்பிட்டதும் பிள்ளைகள் அருகேயிருக்கும் தங்களது தோழர்களின் வீட்டுக்கு விளையாது அனுமதி கேட்டுக் கையிலொரு புதிய விளையாட்டுப் பொருளுடன் போய்விட்டார்கள். அவர்கள் அங்கிருந்து அகலும்வரை சுஜா பற்றிய பேச்சை எடுக்காமற் தவிர்ப்பதை உணர்ந்தேன்.

'சுஜாவின்ரை கலியாண விஷயத்தைப் பற்றி உன்னோடை கதைக்க வேணும்' பேச்சை எனது தந்தை ஆரம்பித்து வைக்கக் குறுக்கிட்டுத் தொடர்ந்தாள் எனது தாய்.

'அவள் ஆரோ ஒரு பெடியனைக் கட்ட விருப்பப் படுறாளாம்'

'சும்மா இரம்மா! அவளும் அவளின்ரை "லவ்"வும். ஆர் எவனெண்ட விவஸ்தை கிடையாது' இப்போது சீற்றத்துடன் இடைமறித்தவன் அண்ணன். 'அவன் ஒரு "சாதி" குறைஞ்சவன்.... உன்னட்டை அதுப்பற்றி என்னண்டாலும் சொன்னவளே?'

"சாதி" என்ற சொல்லை இவர்கள் குறிப்பிடும் அர்த்தத்தோடு கேட்கும்போது இவர்கள் மீது அருவருப்பாக உணர்ந்தேன் நான். அண்ணனுக்குப் பதிலாக "இல்லை" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தேன்.

'அதுதானே பார்த்தன்.... ஆர் எவனெண்டு இல்லை, காதல்... இப்ப சொல்லுறதுக்கு வெக்கமாக இருக்காக்கும் அவவுக்கு' எகத்தாளமாகச் சொன்ன அப்பாவின் குரலிலிருந்து இத்தனை வருடங்களுக்குப் பிறகு நான் சந்திக்கும் அவர் கொஞ்சம்கூட மாறியிருக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன்.

'அவள் ஏன் என்னட்டை இதப் பற்றிக் கதைக்க இல்லையோ தெரியாது!... ஆனால், அவள் தான் விரும்பிற ஆளைக் கலியாணங் கட்டிறதை நீங்கள் ஏன் மறிக்க வேணும்? ..... அம்மா நீங்கள் என்ன நினைக்கிறியள்?'

மௌனமாக எங்களைக் கவனித்துக் கொண்டிருந்த அம்மாவை நோக்கினேன். மெதுவாக உதட்டைப் பிதுக்கித் தோளை உலுக்கினாளே தவிர வாயைத் திறந்து எதையும் சொல்லவில்லை அவள்.

'அவவிட்டைப் போய்க் கேக்கிறாய். நாளைக்கு நாலு பேருக்கு நடுவிலை அவனை மருமகனெண்டு சொல்லிக் கொள்ள ஏலுமோ அவவுக்கு?'

'நான் சொல்லுறதைக் கேள்! நான் ரெண்டு மூண்டு பெடிகளை பாத்து வச்சிருக்கிறன். எல்லாரும் வெளிநாடுகளிலை இருக்கிறவங்கள். ஏதாவது ஒண்டு கட்டாயம் சரிவரும். ஆனா, அவளை இதுக்குச் சம்மதிக்க வைக்கிறதிலைதான் இருக்கு.... நாங்கள் சொல்லிறது எதையும் அவள் கேக்கிறதா இல்லை. நீதான் அவளிற்ரைப் பக்குவமாச் சொல்லி மனம் மாத்த வேணும்' முடிவான குரலில் சொன்னார் அப்பா.

அவரது நிலைப்பாட்டைச் சுகுமாரும் முழுமனதுடன் ஆதரித்தான். அம்மாவிடமிருந்து அவளது கருத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அவளது முகபாவம் அவள் சந்தர்ப்பத்துக்கும், சமூகத்துக்கும் அடிமையானாலும், மற்றவர்களது கருத்தை ஆமோதிக்கவில்லை என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது. அவளைச் சம்பாஷணைக்குள் இழுக்க நான் முயற்சியெடுத்தது வெற்றியளிக்கவில்லை.

'அவளுக்கு வயசாவும் போச்சு. இப்ப அவளின்ரை விஷயத்தை வெளியாருக்குந் தெரியாமலும் செய்ய வேணும். ஆனபடியா சீதனம், காசுச் செலவு அதுகளிலை கறாரா இருக்கேலாது... கூடக் குறையச் செய்யவேண்டி வரும்... என்னாலை பெரிய தொகை ஏதும் பிரட்டேலாது.......' வார்த்தைகளை இழுத்தபடி லௌகீக விஷயத்தில் தனது நிலையைச் சுட்டிக் காட்டினான் சுகுமார்.

அங்கிருந்த சூழ்நிலையில் எவரும் எனது கருத்தைக் கேட்கத் தயாராக இல்லை. அதுமட்டுமில்லாமல் அவர்கள் கதைத்துக் கொண்டதிலிருந்து சுஜா தங்களது இஷ்டப்படி வளைந்து விடுவாள் என்று நம்புவதாகவே தெரிந்தது. அவர்களது திட்டங்கள் நிறைவேறாத பட்சத்தில்....? அப்படியொரு நிலைமையைப் பற்றியே, யோசிக்காத அவர்களுக்கு அதைச் சுட்டிக் காட்ட முயன்றேன் நான்.

'நீ இந்தக் குடும்பத்துக்குச் செய்துவைச்ச அவமானம் போதும்!... சுஜாவின்ரை அலுவலை நாங்கள் பாத்துக் கொள்ளுவம்.... நீ, நாங்கள் சொல்லுறபடி செய்ய ஏலுமே எணட்தை மட்டும் சொல்லு!'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு கட்டத்தில் எனது முகத்தில் அடிப்பதைப் போலக் கோபாவேசமாகச் சீறவும் தயங்கவில்லை எனது தந்தை.

* * * *

சுகுமாரின் வீட்டில் நடந்தவைகளை நான் சொல்லிக் கொண்டிருக்க, சுஜா தன் முன்னாலிருந்த உணவைச் சுவைத்தபடியிருந்தாள். அவளது முகபாவங்களில் இருந்து எனக்கு அவள் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பது புலனாகியது. ஆனாலும், ஒரு தடவைகூட இடையே குறுக்கிடாமல் இருந்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

ஏற்கனவே எனக்கு வாக்களித்தபடி அவள் தனது வேலையிலிருந்து விடுமுறை பெற்றுக்கொண்டு வந்திருந்தாள். உச்சி வெயிலின் கோரமும், சன நெருக்கத்தின் வெம்மையும் கலந்து எனது உடைகளை வியர்வையால் தெப்பலாக நனையவைக்கும்வரை நாம் கொழும்பு வீதிகளில் அலைந்திருந்தோம்.

வழிவழியே சுவீடனில் இருக்கும் எனது நண்பர்களுக்காகச் சில கைவினைப் பொருட்களை வாங்கிக் கொண்டேன். சில பரிசுப் பொருட்களையும் உடைகளையும் மகளுக்காக வாங்கிக் கொண்டேன். கொழும்பு நகரின் பல பகுதிகளை அவளுக்குக் காட்டுவதற்காக எனது புகைப்படச் சுருளிற் சேர்த்துக் கொண்டேன்.

கார உணவுக்கான எனது ஆசை நிறைய இருந்தாலும் எனது நாக்குக்கு அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பெரும்பாலும் அற்றுப் போயிருந்தது. எனவே, வரவழைத்த உணவை ஆசைதீரச் சாப்பிட்டு முடிக்க என்னால் முடியவில்லை.

சுவீடனில் பழகிக்கொண்ட பழக்கத்தின்படி சாப்பிட்டதும் எனக்காகக் கறுப்புக் கோப்பி வரவழைத்தேன். அதை ஆச்சரியத்துடன் கவனித்த சுஜா சிரித்தாள். அவள் தனக்கு ஐஸ்கிறீம் வரவழைத்துக் கொண்டாள். அதை எங்களது மேசையில் கொண்டுவந்து தந்த பணியாளன் எனக்கு முன்னால இருந்த பாத்திரங்களை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

'சொல்லு சுஜா! நீ என்ன முடிவெடுத்திருக்கிறாய்?'

'நீங்கள் என்ன சொல்லுறீங்கள்? அப்பா சொல்லுற ஆளுக்கு நான் கழுத்தை நீட்டட்டே?'

'என்னட்டைக் கேட்கிறதிலை என்ன பிரயோசனம்?.... உன்ரை கலியாணம்.., உன்ரை வாழ்க்கையைப் பற்றி முடிவு எடுக்கிற பக்குவம் உன்ரை வயசுள்ள பெம்பிளைக்கு இருக்க வேணுமெண்டு நினைக்கிறன் நான்'

'நான் என்ன மறுமொழி சொல்ல வேணுமெண்டது உங்கடை பதிலிலையே இருக்கு; அண்ணா!' வாய்விட்டுச் சிரித்தபடி சொன்னாள் அவள்.

'கமோன் சுஜா! எனக்குப் புதிர் போட வேண்டாம். நீங்கள் ஒவ்வொருத்தரும் கதைக்கிறதிலையிருந்து எனக்கு ஒண்டும் விளங்கேல்லை. தான் சொல்லிறபடி எல்லாரும் நடக்க வேணுமெண்டது தம் ஊரசில சாப்பதான் இப்பவும் அப்பாவின்ரை எதிர்பார்ப்பு. என்ரை கருத்தைக் கேக்கிறதிலை எவருக்கும் இஷ்டமிருக்கிறதாய்த் தெரியேல்லை. ஒரு அந்நியன் போலத்தான் நடத்துறீங்கள்'

'என்னையும் சேத்துக் குற்றஞ் சாட்டாதையுங்கோ. இந்த விஷயத்திலை அவயின்ரை விருப்பத்தை என்னிலை திணிக்க ஏலாது. "சாதி"ப் பெருமைகளை அவையே வச்சுக் கொள்ளட்டும். என்ரை வாழ்க்கையை முடிவு செய்யிற உரிமை எனக்குத்தானே இருக்கெண்டு சொன்னனீங்கள். நான் சந்தோஷப் படுறன். உங்கட கருத்து இப்பிடியிருக்கெண்டு நினைச்சிருக்காயினம். அதுதான் உங்களை என்னட்டைத் தூது விட்டிருக்கினம்'

'தூதோ? என்ன சொல்றாய் நீ?'

'அப்பாவும் அண்ணையும் என்னை எல்லா வழிகளிலையும் மருட்டிப் பாத்திட்டினம்.... ஒண்டுஞ் சரிவரேல்லை; இப்ப உங்களை உதாரணங் காட்டப் பாக்கினம்'

'என்னிலை உதாரணங் காட்ட என்ன இருக்கு'

'நான் சொல்லிக் காட்டிறதைப் பிழையா நினைக்க வேண்டாம்..... நீங்கள் காதல் கலியாணம் செய்து பிறகு "டிவோஸ்" செய்திட்டுக் கொண்டதிலை அவைக்கு வெற்றியெண்டு நினைக்கினம். ஆனபடியால் நீங்கள் என்ரை மனசை மாத்திப் போடுவீங்கள் எண்டு கணக்குப் போடினம்'

எனது குடும்பத்தினர் என்னைப் பயன்படுத்திக் கொள்ள முயன்ற காரணத்தை உணர்ந்தபோது, அவர்களது குறுகிய மனப் பான்மையை அவள் சுட்டிக் காட்டியபோது எனக்கு ஆத்திரமாகவும் வெறுப்பாகவும் இருந்தது. ஓரிரு நிமிடங்கள் எங்களிடையே மௌனம் நிலவியது.

'ஒரு முக்கியமான விஷயம் அண்ணா!... நானும் கருணாவும், அவர்தான் நான் கலியாணஞ் செய்ய இருக்கிறவர், அடுத்த திங்கட் கிழமை "றெஜிஸ்ரர்" பண்ணிக்கொண்டு மோதிரம் மாத்திக்கொள்ள இருக்கிறம்... அவரின்ரை குடும்பத்து ஆக்கள் வருவினம்.... எனக்காக ஆரும் வரமாட்டினமெண்டு தெரியும்.....'

'அப்பிடிச் சொல்லாதை சுஜா!' நெகிழ்ச்சியுடன் சொன்னவளை இடைமறித்தேன் நான். 'நீங்கள் எல்லா ஒழுங்குகளையும் செய்யுங்கோ; நான் கட்டாயம் வருவன். ஒரு சாட்சியாக, உன்ரை குடும்பத்திலை இருந்து'

'உண்மையாவே அண்ணா; தாங்க்ஸ்!' அவளது கலங்கிய கண்கள் அவளது உள்ளத்தைக் காட்டின.

'ஆனா ஒரு கொண்டிஷன்.....' அதுக்கு முதல் நீ எனக்குக் கருணாவை அறிமுகப்படுத்தி வைக்கவேணும்'

மனதுக்குள் பெருமையும் உற்சாகமும் கொப்பளிக்கச் சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டே சொன்னேன் நான். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாற்சந்தி



ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடையீர்,
'மாக்ஸியமும் தேசியமும்' என்ற நூலின் விளம்பரம் கண்டேன் (சுவடுகள் 65). இதுபற்றிச் சிறிது எழுதவேண்டியுள்ளது. மூன்று ஆண்டுகள் முன்னம் நடந்த கருத்தரங்கு ஒன்றில் அழைப்பின் பேரில் பங்குபற்றினேன். எனது உரை கையிலிருந்த சில குறிப்புகளின் துணையுடன் உரையாடற் பாங்கான மொழியில் அமைந்தது. மற்ற இருவரும் எழுதப்பட்ட கட்டுரைகளை வாசித்தனர். இந்த உரைகளை விடக், கலந்துரையாடலின் போது பல பயனுள்ள மாற்றுக் கருத்துக்களும் எழுந்தன. முற்குறிப்பிட்ட இரு கட்டுரைகளும் தெளிவாகவே மாக்ஸிய விரோத முனைப்புடன் எழுதப் பட்டவையாயினும், மேலோட்டமாக அவற்றுக்கு ஒருவிதமான 'நடுநிலை'த் தன்மையைக் காட்டுவது சிலருக்கு இயலலாம். இக் கட்டுரைகள் லண்டனில் வந்து நின்ற பத்திரிகையான ஈழபூமியில் வெளியானதாக நினைவு. எனது உரையைப் பிரசுரிக்குமுன் என்னிடம் அதுபற்றி எவருமே பேசவில்லை (அனுமதி கேட்பது நல்ல பண்பு). ஒரு வருட காலத்திற்கு மேலாகத் தயாரிப்பில் இருந்த இந் நூலில் வந்த எனது உரையில் நான் சொன்னவை பல மிகப் பிழையாக எழுதப் பட்டுள்ளன. என்னைக் கலந்தாலோசனை செய்யும் வாய்ப்பு நூலின் தயாரிப்பாளர்கட்கு நிறையவே இருந்தது. முன்னுரையை ஒரு வருடம் முன்பு எழுதிய யமுனா ராஜேந்திரனும், என்னுடைய உரையை அச்சேற்றுமுன் என்னிடம் காட்டித் தவறுகள் இருப்பின் திருத்துமாறு அவர்கட்குக் கூறியதாக எனக்குச் சொன்னார். ஆயினும் இதுபற்றிய அக்கறை சம்பந்தப் பட்டோருக்கு இருக்கவில்லை. இந்த அழகில், நாம் பொறுப்பான முறையில் விவாதிப்பது பற்றியும் கருத்துச் சுதந்திரம் பேணுவது பற்றியும் கருத்துச் சுதந்திரம் பேணுவது பற்றியும் ஓயாது முழக்கலாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நூலின் முகப்பில் உள்ள படம் இரண்டு கட்டுரைகளையும் விட அதிகம் கூறுகிறது. கால் மாக்ஸுக்கு அமெரிக்கன் (அங்கிள் ஸாம்) தொப்பி அணிவித்த படம், எந்த மாக்ஸிய விரோதக் கேலிச் சித்திரக்காரரிடமிருந்து பெறப்பட்டதோ தெரியாது. ஆயினும் நூல் வெளியீட்டாளர்களை நன்றாகவே இனங்காட்டுகிறது. மாக்ஸியமா தேசியமா, அமைப்பியல்வாத நோக்கில் தேசியம் என்றெல்லாம் சில காலமாகக் கண்ணாமூச்சி விளையாட்டு இங்கே நடக்கிறது. அதோடு இதுவும் ஒன்று. இன்னமும் தமது தேசியவாதத்தின் விளைவான நிர்க்கதியான நிலைக்கு மாக்ஸியவாதிகளைத் திட்டித் தீர்ப்பதையே ஆறுதலாகக் கொண்டோர்க்கு இன்னுமொரு ஒத்தடம்.

அன்புடன்
சிவசேகரம்

ஆசிரியர்,
கவடுகள்.

கவடுகள் 65ல் முகமட் அபார் எமது கருத்தினை ஒட்டிப் பிற்போக்குத் தனமாக எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். முதலில் சமர் ஒரு தனிநபர் அல்ல. அது பத்திரிகை என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு மனிதனது அறியாமையின் மூலம் தன்னை வருத்திக் கொண்டால் மத உணர்வுகளைப் புண்படுத்துவது எமது நோக்கமல்ல. மாறாக இருக்க முடியும். மதங்கள் மற்றவர்கள் முதுகில் சவாரி செய்வதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது. மத உணர்வுக்கு எல்லை என்ன?

இன்று எல்லா மதங்களும் மற்றவன் முதுகில் சவாரி செய்கின்றன. அறியாமையின் மேல் மக்களை இட்டுச் செல்வதை நாம் அனுமதிக்க முடியாது.

நாம் குறிப்பிட்ட 1200 ஆண்டுகளில் நிலையான விளக்கம் இல்லை என்பதை சிறிய குறிப்புடன் நாம் விளக்க முடியும்.

இன்று குர் ஆனுக்கு எத்தனை விளக்கங்கள் உள்ளன. எத்தனை மதப் பிரிவுகள் குர் ஆனின் கீழ் அதன் மோதல்கள் முஸ்லிம் நாட்டுக்கு நாடு தீவிரமாகி வருகிறது. இது போதும் குர் ஆனுக்கு நிலையான விளக்கம் உள்ளதா என்பதை விளக்க.

குர் ஆன் உருவான நாட்களில் பூமி நிலையானது, சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்றும் பூமி தட்டையானது என்றும்தான் குர் ஆன் கூறியது. இதுதான் ஆண்டவன் படைத்தது என்றனர். மனிதர்கள் தமது கண்களுக்குப் பட்ட வகையில் ஆண்டவனைக் கூப்பிட்டு குர் ஆன் விளக்கப் பட்டது.

ஆனால் இன்று பூமி உருண்டை என்பது, பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது எனவும் நாம் அறிவோம். இதை குர்ஆன் நாட்டுக்கு நாடு வேறுபட்ட வகையில் விளக்கம் அளிப்பது ஏன்? சில ஆபிரிக்க நாட்டு முஸ்லிம்கள் இன்று பழைய குர்ஆனின் விளக்கப்படியே வாதிட முனைகின்றனர். நீங்கள் இதற்கு விதிவிலக்கா என்பது தெரியாது. இப்படிப் பல. இவ்வளவும் போதும்.

சமர்,
பிரான்ஸ்.

நாடகங்கள் விளங்கவில்லையே என்றவர்களை அப்படியே விட்டு விட வேண்டியது தானா? என்ற கேள்விக்குத் தீவிர நாடக நெறியாளரும், நடிகருமான பாலேந்திராவின் பதில் / (சமரசம் இல்லை) மீண்டும் மீண்டும்

தொடர்ச்சியாக இவ்வகை நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் அவர்களின் தீவிர நாடக ரசனையை - புரியும் தூரத்தினை உயர்த்த வேண்டும்

www.tamilarangam.net

நாற்சந்திக்கு நாலு வரிகள்

தமயந்தியின் கிட்டார் பாடகன் ஒரு நல்ல கதை. எந்தவித செயற்கையான திணிப்புகளுமின்றி, வெகு இயல்புடன் இரண்டு வாழ்வையும் தொட்ட விதம் அழகு. இதே இதழில் இடம்பெற்ற (மறு)விமர்சனத்தையும் எழுதியதும் தமயந்திதானா? உண்மையாகவா?

கண்ணன்

முத்தமிழ் விழா - ஒரு பார்வை தொடர்ச்சியாய் மீண்டுமோர் விளக்கம்....

அண்மையில் நேர்வே வந்திருந்த அவைக்காற்றுக் கழகத் தீவிர நாடகக் கலைஞர்களுடனான (serious play artists) கலந்துரையாடலில் உங்கள் நாடகங்கள் விளங்கவில்லையே என்றவர்களை அப்படியே விட்டு விட வேண்டியது தானா? என்ற கேள்விக்குத் தீவிர நாடக நெறியாளரும், நடிகருமான பாலேந்திராவின் பதில் / no compromise. (சமரசம் இல்லை) மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக இவ்வகை நாடகங்களை மேடையேற்றுவதன் மூலம் அவர்களின் தீவிர நாடக ரசனையை - புரியும் தூரத்தினை உயர்த்த வேண்டும். விளங்காதவர்களைக் கைவிடலாகாது. மீண்டும் தொடர்ச்சியாய்.. விளக்கம், கலந்துரையாடல்கள் ஊடாக அவர்களின் விளங்கு திறனை அதிகரித்தல் முக்கிய பணியாகிறது. விளங்காதவர்களை விடத், தவறாக விளங்குபவர்களே மிக அபாயமானவர்களாகி விடுகிறார்கள். இவர்களுக்கு மீண்டும்.... மீண்டும் தொடர்ச்சியாய் விளக்குதல் தவிர்க்க முடியாத பணியாகிறது.

சிறைக்கதவுகளில்' - "அப்பாவி ரௌடிகள்"

நாடகம் எனும் போது தோற்றம் உடையலங்காரம் (செயின், கத்தி என்று உங்கள் மொழியில் கூறினாலும் கூட) ஒரு காட்சியின் tempo- விறுவிறுப்பு நிலை (charcteristic speed and rhythmic movement and timing பாத்திர வேகமும், ரிதமான அசைவும், நேரப் பிறழ்ச்சியின்மையும்) உருவாகத் தேவையாயின், அதுவும் மிக முக்கியமானது தான். பாத்திரங்களுக்கு இடையேயான ஒன்றிப்பும், காட்சிகளும், காட்சிகளின் ஒன்றிணைவும் எவ்வாறு ஒரு நாடக ஒருங்கமைவிற்குத் தேவையோ அதே அளவு தேவை தோற்றத்திற்கும் உடை அலங்காரத்திற்கும் காட்சியின் tempo உருவாக்கத் தேவையாகிறது. கன்னிமேரியைப் பாத்திரப் படுத்தும் போது சிலுக்கு சிமிதாவின் சிறு உடையில் விட முடியுமா என்ன? அப்பாவி ரௌடிகள் என்ற சொற் பிரயோகத்தை தோற்றம், உடையலங்காரம் என்று (அப்பாவித்தனமாக) விளங்கினாலும் கூடத், தவிர்க்க முடியாதவாறு நாடகம் எனும் போது அவையும் முக்கியமாகிறது. அப்பாவித் தனம் என்பதை இன்னுமோர் உயர் தளத்தில் சற்று ஆழமாகவும் விளங்க வேண்டும் என்பதே எனது விமர்சனத்தின் நோக்கமாகும். சிறைக் கதவுகள்' நாடகத்தில் அக்காட்சியில் உருவாக்கப்பட வேண்டிய tempo என்ன என்று ஆழமாக யோசிப்பது எமது மனச்சாட்சிக்கு இங்கு மிகத் தேவையாகிறது.

"83 வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலை"-

தாயகம் பற்றிய துடிப்பான வீச்சும், விடுதலை தாகமும், ஒவ்வோர் ஆத்மாவின் இதயங்களிலும் ஏககுரலாய் ஒலிப்பதும், அந்த உணர்வுகளைப் பதிவு செய்வதில் நிகழும் சங்கமமும் நேர்த்தியானவைதான

வரவர வாழ்வின் அவலங்களைப் பாடும் கவிதைகளே (மொழிபெயர்ப்புகள் உட்பட) சுவடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. ஏன்? இந்த நெருக்குவாரங்களுக்கிடையில் இருந்தும் துளிர்க்கும் நம்பிக்கைகளும், வாழ்தலின் மீதான ஈர்ப்பும் அறவே இல்லத்துப் போயிற்றா?

போராளிகள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பயங்கரத்தைக் காட்சிப்படுத்தும் போது - அப்பயங்கரத்தை (இது தான் அக்காட்சியின் tempo) மேடையில் இருந்து விரட்டியதே - அக் காட்சியினை செயல் வடிவில் கொண்டு வரும் உள்ளார்ந்த பாத்திரத் திறமையின்மையே' யாகும். (impotentiality of characterazation/) மிக ஓங்கி ஒலித்த போராளியின் அவலக் குரல் எழுப்பிய அதே ரிதத்துடன் (rhythm) தீர்மானமற்ற சந்தேகமான ரெவடி பாத்திரங்களின் உள் வருகை ஒன்றை ஒன்று சந்திக்கவில்லை (not interacted). பாத்திர வெறித்தனமும் ஆக்ரோஷமற்ற வெளிப்பாடும், காட்சியின் tempo வை (பயங்கரமான சூழலை) அழித்து விடுகிறது. அப்பாவித்தனம் என்று நான் அங்கு குறித்தது - பரட்டைத் தலை', முறுக்கு மீசை' க்கும் அப்பால் பாத்திர வெளிப்பாட்டு உள்ளார்ந்தத் திறமையின்மையையும் (impotentiality in expressing character) உள்ளடக்கியதே. உரையாடல் பயன்படுத்தாத அக்காட்சியின் போது - மிக உயர் தர பாத்திர வெளிப்பாட்டுத் திறனின் வீச்சு, தீர்மானமான பாத்திர அசைவு பாத்திரங்களிடையேயான தூரங்கள், நேரங்கள் (definite movement of characters, distance between charcter and timing) ஊடாகவே வரையப்படுகிறது.

அக் காட்சியில் பாத்திரங்களின் வெளிப்பாட்டு வீச்சில் இடையூட்டாட்டம் (interaction) இல்லாமையினால் அக்காட்சில் உருவாக்கப்பட வேண்டிய tempo/ இல்லாமல் போய்விட்டது. இது பார்வையாளர்களுக்கும் பாத்திரங்களுக்கும் இடையே உருவாக வேண்டிய இருபக்க இழுவிசையை (mutual tension) இல்லாமல் செய்து விட்டது.

சிறைக்கதவுகளின் தெளிவற்ற முடிவு - பாத்திரங்களின் ஒவ்வொரு வார்த்தைகளும் கடைசி வரிசையில் உட்கார்ந்திருக்கும் பார்வையாளனுக்கும் தெளிவாகப் புரிய வேண்டும். தேசத்தாயின் வாயிலாக வந்த நாடக முடிவின் பிரதியை ஏற்கனவே பார்வையாளருக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்திருப்பின் புரிந்திருக்க உதவியாக இருந்திருக்கும் அல்லது " இசையின் மேலாதிக்கத்தால் பாடலும், பாத்திரங்களின் வார்த்தைகளும் அமுங்கி விடுவதைப் பற்றி கலைஞர்கள் சிரத்தைப்படவில்லை" எனும் ஏற்கனவே எழுதப்பட்ட எனது விமர்சனக் குறிப்பு என்ன செய்திருக்கலாம் என்பதை உணர்த்தும்.

இன்னொரு தேசம் இன்னொரு கனவில்' அங்குள்ள சிக்கலான வாழ்விலிருந்து உணர்வு ரீதியாக விடுபட்டுப் போனமை என்பது கவித்துவ உணர்வுக் கிளர்வு. - ஒரு துன்பமான மரணம் தோய்ந்த வாழ்வை அச் சூழலில் அந்நேரத்தில் நேரே காணும் கவித்துவ உணர்வு கொண்ட கவிஞர்களுக்கும், இடம், நேரம், சூழலால் வேறுபட்ட மேலை நாட்டின் வாழ்வில் திளைக்கும் கவிஞர்களுக்கும் வேறுபடும் என்பதையே குறிக்கும். பொருத்தமான கவித்துவ உணர்வுக் கிளர்ச்சி (உந்துப்பாடு) இல்லாது போவதால் கவிதைகளின் தரம் குன்றிவிடும் வாய்ப்பு உருவாகும் அபாயம் உண்டு. எதுகை, மோனை மட்டும் படித்தால், தாயக மண்ணில் மரணித்தவர்களுக்கு வெளிநாட்டில் கண்ணீர் அஞ்சலி' எழுதத்தான் உதவும் ஒரு புலம்பெயர்ந்த அகதிக் கவிஞன் அகதி வாழ்வை (நாமெல்லாம் இங்கு) " அலாஸ்காவில் ஒட்டகம் போல்" (வ.ஐ.ச.ஜெயபாலன்) என்று

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடுகிறான். எவ்வளவு அழகாகக் கவித்துவ உணர்வுடன் அகதி வாழ்வின் அவலத்தை ஒரே ஒரு வரியில் விளக்குகிறான். இது வேறொன்றுமல்ல வாழ்வைச் செய்திகளாக வாசிப்பதற்கும் அதை ஆழ்ந்து அனுபவிப்பதற்குமான துல்லியமான வேறுபாடேயாகும்.

எம்வாழ்வின் நாட்களைத் தின்னும் இந்தத் தேசம் பற்றிய யதார்த்தமான கனவுகள், யதார்த்த நிலைகளில் நல்ல கனவுகள் என்று நான் குறித்தது தூக்கக் கலக்கத்தில் வரும் கனவோ (dreams come from weary, disturbed and complicated sub conscious mind)

இந்த நெருக்குவாரங்களுக்கிடையில் இருந்தும் துளிர்க்கும் நம்பிக்கைகளும், வாழ்தலின் மீதான ஈர்ப்பும் அறவே இல்லத்துப் போயிற்றா?

அல்லது நவீன நாஜிகளால் அழிக்கப்படும் வெளிநாட்டுத் தமிழர்களின் இலட்சியக் கனவோ (நோர்வேஜியச் சிவப்புப் பாஸ்போர்ட்) அல்ல. சாதாரண எமது மனித வாழ்வுகளில் இங்கு வேலைத் தளங்களிலும், பாடசாலை பல்கலைக் கழகங்களிலும், வீட்டிலும் இங்குள்ள சூழலினால நாம் எமக்குள்ளே உருவாக்கிய சூழலில் அன்றாடம் அழிந்து கொண்டிருக்கும் மனிதக் கனவுகளே' ஆகும் இதை இலகுவாக விளக்க மணமான ஒரு தமிழ்ப் பெண்ணின் சாதாரண மனிதக் கனவாகக் காண்போம். அன்றாடம் வீதிகளில், பக்கத்து வீடுகளில் தனியாகச் சந்தோஷமாகத் தனது இளமை வாழ்வை அனுபவிக்கும் நோர்வீஜியத் தம்பதிகளைக் காணும் ஒரு மணமான தமிழ்ப் பெண்ணுக்கு தன் கணவரும் தன்னை அன்பாக வெளியே கூட்டிச் செல்ல மாட்டாரா?, தனியே தனது காதலைத் தன்னுடன் பகிர்ந்து மகிழ மாட்டாரா? எனும் சாதாரண மனிதக் கனவு இருக்கக் கூடும். பணம் சேர்க்க வேண்டும் எனும் விதியைக் கொண்ட அகதி வாழ்வு - கணவனின் இரண்டு வேலையாகவோ அல்லது வீட்டின் மீதான வங்கிக் கடனை அடைக்க வாடகைக் காரரைக் குடி வைப்பதனால் வாழ்வைத் தனியே அனுபவிக்கும் தனிமை இல்லாது போவதாலோ அவளின் கனவு சிதையக் கூடும். இப்படியும் சில மனிதக் கனவுகள் உண்டு.

பல நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு விழா பற்றிய விமர்சனம் குறிப்பின் இறுதி மதிப்பீடானது /ஐய/ (overall opinion) முழுமையில் அந்நிகழ்ச்சித் தொகுதியானது எதனைச் சாதனையாக்கியது என்பதைப் பற்றியதே. அவ்வகையில் எனது பார்வையில் அந்நிகழ்வில் சுவடுகளின் சாதனையாக 60வது ஆண்டுமலர் வெளியீட்டினை மட்டுமே அடையாளம் காண முடிந்தது. 3/8 நிகழ்ச்சிகள் ஓரளவு திருப்தியானவை. ஆகவே அண்ணளவாக 37.5%மான நிகழ்வுகள் திருப்தியானவை என்றோ 37.5%மான திருப்தியை நிகழ்வுகள் அளித்தன என்றோ எழுதி விட நான் கணிதவியலாளரோ அல்லது எனது திருப்தி கணித எண்களால் அளவிடக் கூடியனவோ அல்ல.

அன்புடன்,
யோகி

பல நாட்களின் பின் சுவடுகள்64 கிடைத்தது. பெரிதும் மகிழ்ந்தேன். தொடரட்டும் உங்கள் பணி. வரவர வாழ்வின் அவலங்களைப் பாடும் கவிதைகளே (மொழிபெயர்ப்புகள் உட்பட) சுவடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன.

ஏன்?

இந்த நெருக்குவாரங்களுக்கிடையில் இருந்தும் துளிர்க்கும் நம்பிக்கைகளும், வாழ்தலின் மீதான

ஏற்படும் அறவே இல்லாததுப் போயிற்றா?
மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்குக் களம் வழங்கி வருவது குறித்து மகிழ்ச்சி
தற்கால நவீன இலக்கியப் போக்குகளை உள்வாங்கவும், குறுகியதோர் வட்டத்துள் நின்று சுழலாமல் நம் படைப்புகள் விரிந்து இன்னும் உச்சங்களை எட்டவும், இட பெரிதும் உதவலாம்

ஏஎம் றஸ்மி,
அக்கரைப்பற்று.

சுவடுகள் ஆசிரியர்கட்கு,
சுவடுகள் ஸ்தவங்ஙர் சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. தமயந்தியின் நிலம் கவிதையும், கிட்டார் பாடகனும் இன்னும் மனசில் அப்படியே பதிந்து கிடக்கிறது. தாயகம் பற்றிய துடிப்பான வீச்சும், விடுதலை தாகமும், ஒவ்வோர் ஆத்மாவின் இதயங்களிலும் ஏககுரலாய் ஒலிப்பதும், அந்த உணர்வுகளைப் பதிவு செய்வதில் நிகழும் சங்கமமும் நேர்த்தியானவைதான்; நமது தேசத்தின் விழுதுகளும் பௌத்த சாயம் பூசப்பட்டதாய் நமக்குக் காட்டப் பட்டதும், அதனையே பலாத்காரமாய் அனுபவிக்கச் செய்வதும் கசப்பான அனுபவங்களே. நாம் அனைவரும் ஓரினம்தான், நசுக்கப் படுவதில், அடக்கப் படுவதில்.
அவ்வகையில் ஆக்கிரமிப்பாளர்களின், வெறியர்களின் முகமூடியினைக் கிழித்தெறியும் பணியில் சுவடுகளின் நடுநிலைப் போக்கையும், சுதந்திர தாகத்தையும் மெச்சுகிறேன். எல்லாம் சுபமே முடியப் பிரார்த்திப்போமாக.

அன்புடன்,
அறபாத்,
வாழைச்சேனை,
இலங்கை.

நாற்சந்தி

தமிழ் வானொலி சேவை - போகன்

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்காகப் பல சிறந்த ஆக்கங்களுடன் 'தேன் தமிழோசை' ஒலிபரப்பப் படுகிறது. இது வாரந் தோறும் ஞாயிறு மாலை 3மணி தொடக்கம் 4மணி வரைக்கும், புதன் கிழமைகளில் மாலை 7மணி தொடக்கம் 8மணி வரைக்கும் ஒலிபரப்பாகும்.
உங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

தேன்தமிழோசை,
P.O.Box 29,
5002 Bergen.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மண் மணம்

- க.ஆதவன்.

ஊதுவத்தி
ஊதுவத்தி
ஊதுவத்தி
புகையில் இன்பம் காணும் என்னவர்கள்!
திருவிழாக் காலங்கள் தவிர்த்து -
ஏனைய காலங்களிலும்.....! வடிவேலு
அண்ணை ஊதுவத்தி' காட்டித்தான்
தன்ர கொல்லன் பட்டறையைத்
திறக்கிறார்.
சாரங்கபாணி அண்ணை ஊதுபத்தி'
காட்டாமல் தன்ர காரை'(car) ஐச்
சாட்'(start) பண்ணியது கிடையாது.
ஒலிபெருக்கி வாடைகைக்கு விடுகிற
ஏரம்பு - வெறியெண்டா என்ன?
வெறியில்லையெண்டா என்ன?
ஊதுவத்த ' காட்டுகிறார்.
முந்தய C.T.B. பஸ்கள் மறைந்து போய்
மினிவான்' வரத்துடங்கிய காலத்திலயும்
தம்பிநாயகம் ஊதுவத்தி' கொழுத்தி
முதலில் எஞ்சினுக்குக்' காட்டிப் பிறகு
படத்துக்கும் காட்டி, அதுக்குப்
பிறகுதான் மினிவானை' ஓட்டுகிறான்.
ஊதுவத்திக்கு அப்படி ஒரு விசேசம்
இருப்பதை ரகுநாதன் கண்டு
கொண்டான்.
ஊதுவத்திப் புகை காட்ட வேணும்
எண்டதுக்காக பொன் மலர் ஸ்ரோரில்'
ஒரு பைக்கற்'றையே வாங்கி வந்து
அதுக்காக
20/= செலவு செய்து மீதியுள்ள
குச்சிகளை.... பெற்றோருக்குத்
தெரியாமல் எப்படி ஒளிப்பது என்று
திக்குமுக்காடி..... ஒரே ஒரு குச்சியைத்
தேர்ந்தெடுத்து - அந்தக் குச்சியில்
சுசீலாவின் முதல் கடிதத்தைப் படித்துக்
கையில் சுட்டுக் கொண்டான் ரகுநாதன்.
நான் ஒரு நவீன தேவதாஸ்!
நான் ஒரு நவீன Tராஜேந்தர்
எனது மூளையின் பல விதமான
சக்திகள்..... இப்படித்தான் விரலைச்
சுட்டுக் கொண்டன. எனது கதையும்
ஒன்றுதான். ஆனாலும் ஆனாலும்
ஆனாலும் உன் பெயர் கேட்டவுடன்.....
கைகள் தானாகவே ஊதுவத்தியை
நாடுகின்றன.
ஏன் தெரியுமா?
வடிவேலு அண்ணை - (கொல்லன்)
சாரங்கபாணி அண்ணை - (vIIå (car)
ஏரம்பு அண்ணை - (ஒலிபெருக்கி)
தம்பி நாயகம் - (மினிவான் ரைவர்)
இவர்கள் எல்லாரும் ஆயுத பூசை
செய்தவர்கள்.
சரஸ்வதி பூசையென்றால் தனியப்
புத்தகங்களுக்கு மட்டுமில்லை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவரவர் நேசிச்ச விஷயங்களுக்காக
நடத்தும் பூசை!
நீ காசை நேசிச்சால் லக்ஷமிக்குப் பூசை!
(3 நாட்கள்)
நீ கல்வியை நேசிச்சால் சரஸ்வதிக்குப்
பூசை! (3 நாட்கள்)
நீ வீரத்தை நேசிச்சால் துர்க்கைக்குப்
பூசை! (3 நாட்கள்)
ஆனால் – ஆயுத பூசை என்று ஒன்று
இருக்கிறது.
அவரவர் விரும்பும் பொருளை நேசிப்பது.....
அதற்கும் தூபம் காட்டுவது.
நான் உன் பொருளை – உன்னிடமிருந்து
வந்த கடிதத்தை நேசித்தேன்.
அது தான் எனக்கு ஆயுத பூசை!
ஊதுவத்தி காட்டித்தான் இந்தப்
பக்தனால் அதைத் திறக்க முடிந்தது.
உனது சிறிய எழுத்துக்கள் உன்னைப்
போலவே இருந்தன. காதல் கடிதம் எழுதிப்
பழக்கம் இல்லை எண்டு மன்னிப்புக்
கூடப் பிற்குறிப்பாய் எழுதினாய். காதல்
கடிதம்' பழகுகிற விஷயம் இல்லை.
படைப்பு. படைப்பின் உந்தங்கள் அங்கே
தான் உண்மையுடன் ஒளிர் விடுகின்றன.
ஏதோ உனக்குத் தெரிந்த
கண்ணதாசனின் வரிகளெல்லாம் உன்
சிறிய எழுத்துக்களில் பெரிய வடிவம்
கொண்டன. மல்லிகை மலர் உனக்கும்
பிடிக்கும் என்றும்..... ரோஜாக்களை நீயேன்
வெறுக்கிறாய் என்றும்..... நீல வர்ணம்
அழகானது வானத்தைப் போலவும்
கடலைப் போலவும் ஆழமாயும்
அகன்றுமுள்ளது என, உன்
விருப்புகளுக்கும் வெறுப்புகளுக்கும்
காரணந் தேடிய உனது முதலாவது
படைப்பல்லவா?
உனது கன்னி' முயற்சியல்லவா?
உனது கன்னி'மை என்னையல்லவா உன்
கனவுக் கன்னியன்' ஆக்கியது.
உள்ளத்திலிருந்து எழுந்த உனது கன்னி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சி அபாரமானது.
அதற்குரிய கௌரவத்தை.....
அதற்குரிய மதிப்பை.....
அதற்குரிய புனிதத்தைக்.....
கொடுக்க வேண்டும் என்ற உந்தல்
என்னிடம் எனது இந்தச் சிறிய -
மென்மையான இதயத்தில் உதித்ததே
பெரிய காரியம். அதனால் தான் நான்
அந்த வயதில் உனது முதல் படைப்பிற்குச்
சாம்பிராணி காட்டினேன். உனது முதல்
கடிதத்தை இத்தனை வருஷங்கள் கழித்தும்
தூசி படாமல் பாதுகாத்து
வைத்திருக்கிறேன்.
பலர் என்னை ஒரு பைத்தியமாக
நினைக்கக் கூடும்.
பைத்தியமாக வாழ்வதிலும் இன்பம் உண்டு.
முழு உலகமுமே பைத்தியமாய் வாழும்
போது நான் மட்டும் நல்லவனாய் வாழ்தலில்
என்ன இன்பம் இருக்கிறது.
உன்னுடன் நான் ஐக்கியப் படுதலேஎன்
பாக்கியம் என எனது பிறவிப் பெரும் பயன்
என நான் நினைத்தேன்.
அதனால் தான் நான் பக்தனானேன். உனது
காலடியே சரணம் எனத் துதி பாடினேன்.

* * *

சுசீலாவின் கடிதத்தை எடுத்துப் பத்திரமாக
மீண்டும் ஒரு முறை (1117வது தடவையாக
இருக்கலாம்) வாசித்தான் ரகுநாதன்.
தீர்க்கமான முடிவு எடுத்து விட்டவன் போல்,
சுசீலாவின் வீட்டை நோக்கி நடந்தான்.
மாலை.
மைம்மல்.
சூரியனும் பறவைகளும் கூடடைகிற
வேளை.
ரகுநாதனும் தனது கூட்டை நோக்கிச்
சென்று கொண்டிருந்தான்.
அன்று குடித்து விட்டு ஊரையே பரிசு
கெடுத்திப் போட்டுத் தானும் பரிசு கெட்டுப்
போன அதே படலையும் கிழுவை மரமும்
வேலியும் அவனைப் பார்த்துச் சிரித்தன.
கை கொட்டிச் சிரித்தன.
வேண்டாம்.
நிப்பாட்டுங்கோ.
நான் - குடிகாரனில்லை.
இப்ப நான் குடிக்கிறவனும் இல்லை!
புதியவன்.
இளையவன்.
ஒரு தெய்வத்தின் சந்நிதி நாடி வரும் ஒரு
பக்தன்.
அவளது காதலை; தலை மேல் சுமந்து
வரும் ஒரு ஆண்டான்
ஆண்டாளால் தான் முடியும் என்றில்லை.
காதலில் உருகுவது என்னாலும் முடியும்.
காதல் ஒருவர் சம்பந்தப் பட்டதல்ல!
இருவர் சம்பந்தப்பட்டது
Will you please shut எம
இவனது இந்த உறுத்தலின் பின்னர்
அவை வாயடங்கிப் போயின.
மிகவும் துணிவு கொண்டோனாய்.....
வாசல் கதவைத் தட்டினான்.
தம்பையர் வெளியே வந்தார்.
இவனைக் கண்டதும் விறைச்சுப்
போனார். அதிர்ச்சி!
இவ்வளவுக்குப் பிறகும் இவன், வீட்டுக்கு
வந்து - அதுவும் என்ர வீட்டுக்கு வந்து
வாசல் கதவைத் தட்டுறான்.
தம்பையாண்ணை என்கிற மனிதரே!
இவை உமக்கு விளங்கா! இவை தான்
காதலின் சக்தி! கிருஷ்ணனுக்கும்
ஆண்டாளுக்கும் இருந்த சக்தி
அறிவீரோ! இது ஆண்டாளுக்கும்
கிருஷ்ணனிக்கும் இடையில் வரும்
பேரானந்தத்தின் உந்தல். வழிவிடும் இந்தப்
பக்தனை என்பது போன்ற தொனியில்,
நான் ஒருக்கா சுசீலாவோடை
கதைக்க வேணும். நான்
கதைக்கிறதாலை யாருடைய
வாழ்க்கையும் பாதிப்படையாது என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் உங்களுக்கு உறுதியாய்ச் சொல்லுறன். ஒரு அரை மணித்தியாலம் தந்தாப் போதும். அதுவும் சுசீலா சம்மதிச்சாத்தான் நான் கதைப்பன். அவாக்கு என்னைப் பாக்கவோ, கதைக்கவோ வருப்பம் இல்லையெண்டா, உடனயே நான் போயிடுவன். அதோட இன்னும் ஒரு விஷயம். அண்டைக்கு உங்களடியில நான் நடந்து கொண்ட விதம் சரியில்லை.நான் ஏதோ குழப்பத்தில உங்களையும் புண்படுத்திப் போட்டன். sorry" என்றான் ரகுநாதன். தம்பையர் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

தொடரும்



● சோலைக்கிளி

தோணி ஆடும் பாட்டு

தோணி ஆடும் பாட்டு
என தூரின் மீனவரின் ஏலேலோக் கீதம்.
உங்கள் அழகு நாட்டிய மேடைகளில்
இனி எங்கள்
தோணிகளை அழையுங்கள்.
அமைச்சர்களையும் விருந்தினராய்
எடுத்துவைத்து.

கவிஞன் கட்டாமல் இயற்கை கட்டிய பாட்டு
மீன் மயங்கி வலைக்குள்
ஏறிவந்து கரைக்கு
குதித்துத் தாளம் போட்டுப் பின் காசாகும்
செம்படவன் குரல்ச் சொத்து.

இந்தச் சொத்து
கடல் நெஞ்சைக் கிழிக்கையில்தான்
எங்கள் ஊர்த்தோணி ஆடும், வாரும்,
பாரும்,
பின் அழைத்து
நகரத்து மேடையிலே ஏற்றும்!

உங்கள் நர்த்தகிக்கு
கால் முடம்.
ஒருத்திக்கு இடுப்பு வலி.
கழுத்துச் சுளுக்கு ஒருததிக்கு
முழங்காலில் நோவு இன்னொருத்தி வாதை.

இவர்கள் ஆடித்தான் நீங்கள் ரசிக்கின்றீர்
கையடித்து மாலையிட்டு.
பொட்டுவைத்த பிறைத்தோணி
போ இவர்கள் மேடைக்கு!
ஏலேலோப் பாட்டுக்கு நீ ஆடித்
தேர்ச்சிபெற்ற
அழகு நாட்டியத்தை ஆடு!
அமைச்சர்கள் மட்டுமல்ல;
வந்திருக்கும் பிரமுகர்கள்
கையெல்லாம் வாய்மொய்க்கும் கொசுத்தட்டி
விரசு.
அவர்கள் ரசித்த
நர்த்தகிகள் குனிந்துவந்து,
உன் கால்த்தூசைத் தட்டிக் கொஞ்ச. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 66, April'95.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்